திருவிளையாடற் புராணம்

(கதைச் சுருக்கம்)



திருவிளையாடற் புராணம்

[கதைச் சுருக்கம்]

லிப்கோ வெளியீடு

மூன்ரும் பதிப்பு

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை-17 :: திருச்சி-2

சென்னையில் லிப்கோ ஸ்டாகிஸ்டுகள் :

எம். தாமோதரம் & கம்பெனி,

108, கார்ப்பரேஷன் பழக் கடை,

சென்னை-1.

[விலை ரூ. 1-00

முதற் பதிப்பு : 1954
இரண்டாம் பதிப்பு : 1966
மூன்றாம் பதிப்பு : 1971

முன்னுரை

மதுரைப் பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சோம சுந்தரக் கடவுளின் அருள் விளையாடல்களைக் கூறுகின்ற நூல் திருவிளையாடற் புராணம் ஆகும். 'திரு' என்பது மங்கல அடை மொழி. 'விளையாடல்' என்பது சிறுவர்களின் விளையாட்டு அன்று. அரிய செயல்களை எளிதிற் செய்து முடிக்கும் ஈசனுடைய ஆற்றலையே அஃது இங்கே குறிக்கின்றது. 'புராணம்' என்பது 'பழைய வரலாறு' என்று பொருள்படும். மதுரையில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான் தம்முடைய அடியார் பொருட்டுச் செய்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களைக் கூறும் பழைய வரலாறு ஆதலால் இஃது இப்பெயர் பெற்றது.

இந்நூலுக்கு முதல் நூல் ''ஆலாசிய மகாத்மியம்'' என்னும் வடமொழி நூல் என்பர் சிலர். அவ்வடமொழி நூலுள் ஈசனுடைய இத்தகைய திருவிளையாடல்கள் யாவும் கூறப்பட்டுள்ளன. எனினும் திருவிளையாடற் கதைகள் பல சிலப்பதிகாரம், கல்லாடம், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களில் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் துணைகொண்டு, தமிழர்களின் பழக்க வழக்கங்களை மனத்தில் இருத்தி, தமிழ் இலக்கியத்திற்கே இயல்பான சுவைகளை அமைத்து, தமிழ்ப் பண்பிற்கு ஒருவாறு பொருந்தும் வண்ணம் இந்நூல் இயற்றப் பட்டுள்ளது.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம், பெரும் பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், சுந்தர பாண்டியம் ஆகிய நூல்கள் திருவிளையாடற் கதைகளைக் கூறும்பொருட்டே எழுந்தன. அவற்றுள் பரஞ்சோதியாரும், பெரும்பற்றப் புலியூர் நம்பியும் இயற்றிய நூல்கள் திருவிளையாடற்புராணம் என்னும் பெயருடனேயே வழங்கு கின்றன.

சுருங்கிய முறையில், ஆனால் கதைத் தொடர்பு கெடாமல், எளிய நடையில் அமைந்துள்ள இச்சிறு நூலைத் தமிழ் மக்கள் படித்து மகிழ்ந்து பயனடைவார்கள் என்று நம்புகிறோம்.

—பதிப்பகத்தார்.

பொருளடக்கம்

1. மதுரைக் காண்டம்

2. கூடற் காண்டம்

3. திருவாலவாய்க் காண்டம்

ஆசிரியர் வரலாறு

இந்நூலாசிரியர் பரஞ்சோதி முனிவர். இவர் சோழவள நாட்டில் உள்ள திருமறைக்காடு என்னும் திருப்பதியில் தோன்றினர். இவருடைய தந்தையார் மீனுட்சிசுந்தர தேசிகர் என்பவர். இவர் சைவ வேளாள மரபைச் சார்ந் தவர். பரஞ்சோதியார் இளமைப் பருவத்திலேயே தமிழி லும் வடமொழியிலும் உள்ள சிறந்த நூல்களை ஐயந் திரிபு அறக் கற்ருர். இரு மொழிப் புலமையும் நிறைந்த இவர்தம் பாடல்கள் சைவத் திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்தி ரங்கள், சங்க இலக்கியங்கள் முதலியவற்றின் சிறந்த கருத்துக் களைக் கொண்டு விளங்குகின்றன; சொல்லழகும் பொரு ளழகும் தொடையழகும் நடையழகும் வாய்ந்து மிளிர் கின்றன. இப்பாடல்கள் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் படிப்பவரைப் பரவசப்படுத்துவனவாகும்.

பரஞ்சோதி முனிவர் என்று அழைக்கப்படுவதால் இவர் ஒரு துறவி என்பதை அறியலாம். இவர் பல சிவத்தலங் களையும் தரிசித்து மதுரையை அடைந்தார்; அங்கு மீனுட்சி யம்மையையும் சோமசுந்தரப் பெருமானையும் வழிபட்டு வந்தார். ஒரு நாள் இரவு மீனுட்சியம்மையார் இவரது கனவில் தோன்றிச் சிவபெருமான் மதுரையில் புரிந்த திரு விளையாடல்களைப் பாடும்படி கூறியருள, முனிவர் அவ்வாறே இந்நூலைப் பாடி முடித்தனர் என்பர். சொக்கநாதப் பெரு மான் திருமுன்பு பல புலவர்கள் அடங்கிய அவையில் இந் நூல் அரங்கேற்றப்பட்டது.

பரஞ்சோதி முனிவர் வேதாரணிய புராணம், திருவிளை யாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய பலவேறு நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் காலம் 350 ஆண்டுகட்கு முற்பட்டது என்பர்.

கதையில் வருவோர்

1. இந்திரன் :	தேவர் தலைவன்.
2. வியாழ பகவான் :	தேவர்கள் குரு.
3. துவட்டா :	அசுரர் குரு.
4. விசுவரூபன் :	துவட்டாவின் மகன்.
5. ததீசி முனிவர் :	முதுகெலும்பை வச்சிராயுதமாக இந்திரனுக்கு அளித்தவர்.
6. துர்வாச முனிவர்:	அத்தி ரிஷியின் மைந்தர்.
7. குலசேகரன்:	பாண்டிய மன்னன்.
8. மலயத்துவசன்:	குலசேகரனின் மைந்தன்.
9. காஞ்சனமாலை:	மலயத்துவசன் மனைவி.
10. தடாதகைப் பிராட்டி:	மலயத்துவசன் மகள்.
11. பதஞ்சலி,வியாக்ரபாதர்:	முனிவர்கள்.
12. குண்டோதரன்:	சிவகணங்களில் ஒருவன்.
13. உக்கிர குமாரன்:	சுந்தர பாண்டியன்.
14. காந்திமதி:	உக்கிர குமாரனின் மனைவி.
15. வீரபாண்டியன்:	உக்கிரபாண்டியனின் மகன்.
16. அபிடேக பாண்டியன் :	வீரபாண்டியன் மகன்.
17. விக்கிரம பாண்டியன் :	அபிடேக பாண்டியன் மகன்.
18. இராச சேகரன்:	விக்கிரம பாண்டியன் மகன்.
19. விரூபாக்கன்:	ஓர் அந்தணன்
20. சுபவிரதை:	விரூபாக்கனின் மனைவி.
21. கௌரி:	விரூபாக்கன் மகள்.
22. தத்தன்:	ஒரு சைவ அந்தணன்.
23. குலோத்துங்க பாண்டியன்:	இராசசேகர பாண்டியனின் மகன்.
24. அனந்தகுண பாண்டியன்	குலோத்துங்கனின் மகன்.
25. குலபூடணன் :	அனந்தகுண பாண்டியனின் மகன்.
26. சுந்தர சாமந்தன்:	ஷெ அரசனின் சேனாதிபதி.
27. சேதிராயன் :	வேடர் தலைவன்.
28. காடு வெட்டிய சோழன் :	காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழ மன்னன்.
29. இராசேந்திர பாண்டியன் :	குலபூடனன் மைந்தன்.
30. இராசசிங்கன் :	இராசேந்திரனின் தம்பி

31. பொன்னனையாள்: திருப்பூவணத்தில் வாழ்ந்த உருத்திர கணிகையருள் ஒருத்தி.
32. இராசேச பாண்டியன்: இராசேந்திரன் மகன்.
33. இராசகம்பீரன்: இராசேசன் மகன்.
34. பாண்டி வமிச தீபன்: இராசகம்பீரன் மகன்.
35. புரந்தரசித்து: பாண்டி வமிச தீபன் மகன்
36. பாண்டி வமிச பதாகன்: புரந்தரசித்து மகன்.
37. சுந்தரேச பாத சேகரன்: பாண்டி வமிச பதாகன் மகன்.
38. ஆயிரம் பரிக்கோர் சேவகன்: ஒரு சோழ மன்னன்.
39. அடியார்க்கு நல்லான்: மதுரை வேளாளன்.
40. தருமசீலை: அடியார்க்கு நல்லான் மனைவி.
41. தனபதி: மதுரை வணிகன்.
42. சுசீலை: தனபதியின் மனைவி.
43. வரகுண பாண்டியன்: சுந்தரேச பாத சேகரனின் மகன்.
44. ஏமநாதன்: வடநாட்டு யாழ்ப்பாணன்.
45. பாணபத்திரன்: மதுரை யாழ்ப்பாணர்.
46. சேரமான் பெருமான்: பாணபத்திரனுக்குச் சிவபெருமான் திருமுகம் கண்டு பொன்னும் பொருளும் உதவிய சேர மன்னன்.
47. இராசராச பாண்டியன்: வரகுண பாண்டியனின் மைந்தன்.
48. சுகலன்: குருவிருந்ததுறையில் வாழ்ந்த ஒரு வேளாளன்.
49. சுகலை: சுகலன் மனைவி.
50. சுகுண பாண்டியன்: இராச இராச பாண்டியனின் மைந்தன்.
51. வாங்கிய சூடாமணி: வங்கிய சேகர பாண்டியனின் மைந்தன்.
52. தருமி: ஒரு சைவ வேதியன்.
53. நக்கீரர்: சங்கப் புலவர்களுள் தலைமைப் புலவர்.
54. உருத்திர சருமர்: தனபதி குணசாலினி ஆகியோரின் ஊமை மைந்தன்.
55. இடைக்காடன்: கபிலரின் நண்பன்.
56. அரிமர்த்தனன்: குலேச பாண்டியனின் மகன்.
57. திருவாதவூரர் (மாணிக்கவாசகர்): அரிமர்த்தனனின் அமைச்சர்.
58. மங்கையர்க்கரசி: கூன்பாண்டியனின் மனைவி.
59. வந்தி மதுரையில் வாழ்ந்த முதியாள்.

60 சித்திரவிரதன்,
சித்திரபூடணன்,
சித்திரத்துவசன்,
சித்திரவருமன்,
சித்திரசேனன்,
சித்திரவிக்கிரமன்,
இராசமார்த்தாண்டன்,
இராச சூடாமணி,
இராசசார்த்தூலன்,
துவிசராசகுலோத்தமன்,
ஆயோதனப் பிரவீணன்,
இராச குஞ்சரன்,
பரவிராச பயங்கரன்,
உக்கிரசேனன்,
சத்துருஞ்சயன் வீமரதன்,
வீம பராக்கிரமன்,
பிரதாப மார்த்தாண்டன்,
விக்கிரம கஞ்சனன்,
சமர கோலாகலன்,
அதுல கீர்த்தி:

இராசராச பாண்டியனுக்குப் பின்னர் வழி வழி வந்து தோன்றிய பாண்டிய மன்னர்கள்.

61 பிரதாப சூரியன்,
வங்கிசத் துவசன்,
இரிபுமருத்தனன்,
சேரவங்கி சாந்தகன்,
பாண்டிவங்கி சேசன்,
வங்கிச்சிரோன்மணி,
பாண்டீச்சுரன்,
குலத்துவசன்,
வங்கிச வீபூடணன்,
சோம சூடாமணி,
குல சூடாமணி,
இராச சூடாமணி,
பூப சூடாமணி,
குலேசன்:

சண்பக பாண்டியனுக்குப் பின் வழி வழி வந்து மறைந்த பாண்டிய மன்னர்கள்.

62. கூன்பாண்டியன் (சுந்தரபாண்டியன்): திருஞானசம்பந்தரால் வெப்பநோய் நீங்கப்பெற்ற பாண்டிய மன்னன்.

63. குலச்சிறையார்: கூன்பாண்டியனின் அமைச்சர்.

64. உலோபாமுத்திரை: அகத்தியரின் மனைவி, திருவிளையாடல்களைக் கேட்டவர்களில் ஒருவர்.

65. வசிட்டர்: திருவிளையாடல்களைக் கேட்ட முனிவர்களில் ஒருவர்.

திருவிளையாடற் புராணம்

[கதைச் சுருக்கம்]

காப்பு

" சக்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்பொற் பாதமே."

[தனி-ஒப்பற்ற. முதலை-முழுமுதற் கடவுளாகிய விநாயகனை. சொல் பொருள்-சொல்லும் பொருளும், சொல் சக்தி; பொருள் சிவம்.]

சிவபெருமான் உமாதேவியாருக்கு சங்கர சங்கிதையை அருளிச் செய்தார். முருகப் பெருமான் அதனை அகத்திய முனிவருக்கு அருளிச் செய்தார். அச்சங்கிதையில் தலவிசேடமும் தீர்த்த விசேடமும் மூர்த்தி விசேடமும் பொருந்தியதும், முத்தியை அளிக்கக் கூடியதுமான சிவதலம் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தலமே மதுரையாகும். அத்தலத்திலேயே சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் புரிந்துள்ளார். அவற்றை முருகப் பெருமான் கூறியவாறே அகத்திய முனிவர் பிற முனிவர்களுக்குக் கூறலானார்.

[சங்கிதை-சரித்திரம்.]

1. இந்திரன் பழிதீர்த்த படலம்

முற்காலத்தில் கிரேதாயுகத்தில் சுவர்க்கலோகத்தின்கண் தேவேந்திரன் இனிய ஆடலைக் கண்டும் பாடலைக் கேட்டும் பெண் மயலில் மூழ்கிக் கிடந்தான். அந்த மயக்கத்தால் அவன், அப்போது அங்கு வந்த தேவ குருவாகிய வியாழ பகவானையும் வழிபடாமல் அவமதித்தான். குருவை அவமதித்த குற்றத்தால் இந்திரனின் செல்வம் குன்றியது; நாட்டில் பஞ்சம் பரவியது; குருவும் திரும்பிச் சென்றுவிட்டார்.

இந்திரன் தன் குருவைத் தேடிக் காணமல் பிரமதேவரிடம் முறையிட்டான். பிரமதேவர் அசுரகுல குருவாகிய துவட்டாவின்

மகன் விசுவரூபன் என்பவனைக் குருவாகக் கொள்ளுமாறு கட்டளை யிட்டார். இந்திரனும் அவ்வாறே கொண்டு தன் பொருட்டு ஒரு யாகம் செய்யுமாறு அக்குருவை வேண்டினன். விசுவரூபன் அதற்கு உடன்பட்டு வாக்கால், ''தேவர்களுக்கு ஆக்கம் பெருகுக'' என்று கூறி, மனத்தினால், ''அசுரர்களுக்கு ஆக்கம் உண்டாகுக; தேவர்கள் துன்பம் அடைக'' என யாகம் செய்தான். இதனை ஞான திருஷ்டியினால் அறிந்த இந்திரன் தன் வச்சிரப் படையால் அவனுடைய மூன்று தலைகளையும் வெட்டினன். அவை மூன்றும் காடையும், ஊர்க்குருவியும், சிச்சிலியுமாய்ப் பறந்தன. அதனால் இந்திரனை பிரமக்கொலைப் பாவம் பற்றிக்கொண்டது. தேவர்கள் அதனைத் தீர்க்க விரும்பி மரம், மண், தண்ணீர், பெண்கள் முதலிய வர்களுக்கு அப்பாவத்தைப் பகுந்தளித்ததால், இந்திரன் சுத்தம் அடைந்து விளங்கினன்.

தேவேந்திரன், தன் மகனாகிய விசுவரூபனைக் கொன்ற செய்தி கேட்டு துவட்டா ஆற்றமுடியாத சீற்றம் கொண்டான். அவன் ஒரு வேள்வி செய்து விருந்திராசுரன் என்னும் இரக்கமில்லா அரக்கனைப் படைத்தான். தருமம் செய்யாதவர் பாவம் நாடோறும் வளர்வதைப் போல, விருத்திராசுரன் பருத்துக் கொழுத்து வளர்ந்தான். துவட்டா அவனை, ''இந்திரனைக் கொன்று வருக'' என ஏவினன். இந்திரன் அவனுடன் சண்டை செய்து தோல்வி யடைந்தான். பின்னர், ததீசி முனிவர் தந்த முதுகெலும்பால் அவன் புதிய வச்சிராயுதம் செய்து விருத்திராசுரனுடன் போரிடப் புறப்பட்டான். விருத்திராசுரன் நடுக்கடலில் தவம் செய்பவர் போல ஒளிந்து இருந்தான். இந்திரன் அகத்திய முனிவரை வேண்டிக் கடல் நீரைக் குடித்து வற்றுமாறு செய்தான்; பின்னர் விருத்திராசுரனின் தலையை வெட்டிவீழ்த்தினன். அதனால் சிந்திய இரத்தம் வற்றிய கடலையும் நிரப்பிற்று. தேவேந்திரனைப் பிரமகத்தி தோஷம் மீண்டும் பிடித்துக்கொண்டது. இந்திரன் வியாழ பகவானின் ஆலோசனைப்படி பூலோகத்தில் தலயாத்திரைகள் செய்தான். அவன் திருக்கேதாரம், காசி, காஞ்சி முதலிய சிவ தலங்களைக் கடந்து கடம்பவனத்தை அடைந்தான்; அங்கு ஒரு விமானத்தை அமைத்தான். அங்குச் சோமசுந்தரப் பெருமானை ஆனந்தக் கண்ணீர் பெருகப் பலமுறை கைகூப்பி,

''அங்கணா போற்றி! வாய்மை
  ஆரணா போற்றி! நாக
கங்கணா போற்றி! மூல
  காரணா போற்றி! நெற்றிச்
செங்கணா போற்றி! ஆதி
  சிவபரஞ் சுடரே போற்றி
எங்கணா யகனே போற்றி
  ஈறிலா முதலே போற்றி!''

[அங்கணா-அழகிய கண்களை உடையவனே. எங்கள் நாயகனே-எங்கள் தலைவனே. ஈறு இலா-முடிவில்லாத.]

"யாவையும் படைப்பாய் போற்றி!
யாவையும் துடைப்பாய் போற்றி!
யாவையும் ஆனாய் போற்றி!
யாவையும் அல்லாய் போற்றி!
யாவையும் அறிந்தாய் போற்றி!
யாவையும் மறந்தாய் போற்றி!
யாவையும் புணர்ந்தாய் போற்றி!
யாவையும் பிரிந்தாய் போற்றி!"

[படைப்பாய்-உண்டாக்குவாய். துடைப்பாய்-அழிப்பாய். புணர்ந்தாய்-கலந்திருப்பாய்.]

என்றவாறு பலவிதமாக இவ்வாறு இந்திரன் துதித்துக் கொலைப் பழியும் தீவினையும் நீங்கப் பெற்றான். மீண்டும் இந்திராணியுடன் அவன் சொர்க்கலோகத்தில் ஆட்சி புரிந்தான்.

2. வெள்ளையானை சாபந் தீர்த்த படலம்

துருவாச முனிவர் ஒருசமயம் காசியில் சிவபூஜை செய்து, முடிவில் சிவபெருமானின் திருமுடியினின்றும் விழுந்த தாமரைப் பூவை எடுத்துச் சென்று, வழியில் வெள்ளையானையின்மீது பவனி வந்த இந்திரனுக்குக் கையுறையாகக் கொடுத்தார். இந்திரன் செல்வச் செருக்கினால் அதனை ஒரு கையால் வாங்கி வெள்ளை யானையின்மேல் வைத்தான். அது அந்த மலரைக் கீழே தள்ளிக் காலால் சிதைத்தது. இந்த நிகழ்ச்சியால் துருவாச முனிவர் கண்களில் தீப்பொறி பறந்தது. அவர் இந்திரனைப் பார்த்து, "பேதையே, நீ செய்த சிவத் துரோகத்தினால் உன் தலை பாண்டியன் ஒருவனின் வளையினாலே சிதறிப்போகும். கர்வம் பிடித்த இந்த வெள்ளையானை காட்டானை யாகும்" என்று சபித்தார்; பின்னர் இந்திரனும் வெள்ளையானையும் அவர் திருவடிகளைப் பணிந்து சாபத்தை நீக்கியருள வேண்டியதால், இந்திரனுக்குத் தலையளவாக வந்தது முடியளவாகப் போகட்டும் என்றும், வெள்ளை யானை காட்டானையாக மாறி நூறு ஆண்டுகள் கழித்துப் பழையபடியே இருக்கக் கடவது என்றும் அவர் கூறியருளினார்.

இந்திரனுக்கு வந்த சாபம் முடியளவாக நீங்கிய செய்தி பின்பு கூறப்பெறும்.

வெள்ளையானை சொர்க்கத்தை விட்டுப் பூலோகத்துக்கு வந்தது; அங்குக் கடம்ப வனத்தில் காட்டானையாக இருந்து சோமசுந்தரப் பெருமானை வழிபட்டு வந்தது. சிவபெருமான் அதன் அன்பைப் பாராட்டி அதற்கு என்ன வரம் வேண்டும் என்று

கேட்டார். யானை, "தங்கள் திருவடிகளைப் பிரியாத எட்டு யானைகளுடனே ஒன்பதாவதாக என்னையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்றது. சோமசுந்தரர் அந்த யானையைப் பார்த்து, 'இந்திரன் என்னிடத்தில் மிகவும் அன்புடையவன். நீ அவனைத் தாங்குதல் என்னைத் தாங்குவதாகும்' என்று கூறினர்.

வெள்ளையானை அவரை வணங்கி மேற்கே சென்று தன் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கிற்று; சொக்கலிங்கருக்குத் தன் பெயரால் ஐராவதபுரம் என்னும் நகரத்தை உண்டாக்கி, தன் தலைவன் பெயரால் இந்திரேச்சுரர் என்று ஒரு சிவலிங்கம் ஏற்படுத்திப் பூசை செய்து வந்தது. பின்னர் இந்திரன் அவ் யானையை அழைத்துக் கொண்டான். இருவரும் சாபம் நீங்கி இன்பம் அடைந்தனர்.

3. திருநகரங் கண்ட படலம்

கடம்பவனத்துக்குக் கிழக்கில் குலசேகரப் பாண்டியனின் நகரமாகிய மணவூரில் தனஞ்சயன் என்னும் ஒரு வாணிகன் இருந்தான். அவன் ஒருநாள் இரவு அக்கடம்பவனத்தில் இருந்த சொக்கலிங்கப் பெருமானைக் கண்டு வழிபட்டான்; அங்கு தேவர்கள் வந்து பூசை செய்தலைக்கண்டு மகிழ்ந்தான்; பின்னர் குலசேகர பாண்டியனிடத்தில் சென்று கடம்பவனத்தில் தான் கண்ட அதிசயங்களைக் கூறினன். பாண்டியன் மனமகிழ்ந்து சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்த வண்ணமாய் இருந்தான். அன்றைய இரவு சோமசுந்தரர் அவன் கனவில் ஒரு சித்தராக வந்து பாண்டியனை நோக்கி, 'அரசே! காட்டை வேரோடு அழித்து நகரமாகச் செய்வாயாக' என்று சொல்லி மறைந்தருளினர். மன்னனும் அவர் ஆணைப்படியே சிற்ப நூல் வல்லாரைக் கொண்டு அற்புதமான கோயில் ஒன்றைக் கட்டுவித்தான். பின்பு அவன் அந்த நகரத்துக்கு சாந்தி செய்ய நினைத்தான்.

அச்சமயத்தில் சோமசுந்தரர் தன் சடை முடியில் உள்ள சந்திரக் கலையின் அமிர்தத்தைக் கங்கை நீரோடு கலந்து ஒழுகவிட்டார். அது மதுரமான (இனிமை) தன்மையாக இருத்தலால் அந் நகரம் **மதுரை** என அழைக்கப்பட்டது. குலசேகர பாண்டியன் தன் மகனாகிய **மலயத்துவசனுக்கு** முடிசூட்டித் தான் இறைவனின் இனிய திருவடிகளில் இரண்டறக் கலந்தான்.

4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்

மலயத்துவசன் மனைவி **காஞ்சனமாலை** என்பவள். இருவருக்கும் நெடுநாட்களாக மகப்பேறு இல்லாமையால் புத்திர காமேட்டி யாகம் புரிந்தனர். அப்போது உமாதேவியார் மூன்று தனங்களை

யுடைய ஒரு பெண்மகவாகி மூன்று வயது உடையவளாய் யாக குண்டத்தினின்றும் தோன்றிக் காஞ்சனையின் மடியில் வந்திருந்தார். காஞ்சனமாலை அப்பெண் மகவை மார்போடு அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தாள். அரசன் குழந்தையினது உறுப்பின் மிகுதியைக் கண்டு மிகமிக வருத்தம் கொண்டான். '' இக்குழந்தைக்குக் கணவன் வரும்போது ஒரு தனம் குறையும் '' என்று அசரீரி கூறிற்று. பெற்றோர் அதுகேட்டுப் பெருமகிழ்வடைந்தனர்.

சிவபெருமான் கட்டளையிட்டபடியே குழந்தைக்குத் தடாதகை எனப் பெயர் இடப்பட்டது. தடாதகை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வில், வாள், குதிரை யேற்றம் ஆகிய எல்லாக் கலைகளிலும் சிறந்து விளங்கினாள். மலை யத்துவசன் தன் அருமை மகளின் திறமைகளை அறிந்து மனமகிழ்ந்து அவளுக்கு முடி சூட்ட விரும்பினான். நல்ல நாளில் பிராட்டி அரசி யானார். சில நாட்கள் கழித்து மலையத்துவசன் விண்ணுல கடைந்தான். தடாதகை அரச தருமங்கள் சிறிதும் வழுவாதபடி செங்கோல் செலுத்தி வந்தார். மக்கள் யாவரும் நாடெங்கும் வாழக் கேடொன்றுமின்றி அமைதியாக வாழ்ந்து வந்தார்கள். கன்னியாகிய தடாதகை ஆண்டதால் பாண்டிய நாடு கன்னி நாடு எனப் பெயர் பெற்றது.

5. திருமணப் படலம்

நீதி தவறாமல் ஆண்டுவந்த தடாதகைப் பிராட்டி மணப் பருவத்தை அடைந்தார். காஞ்சனமாலை தன் அருமை மகளைப் பார்த்து, ' உனக்குக் கன்னிப் பருவம் வந்தும் இன்னும் திருமணம் ஆகவில்லையே ' என்று கூறி வருந்தினாள். அதற்குத் தடாதகை, '' யாவும் ஆகும்போது ஆகும்; கவலை வேண்டா. நான் எட்டுத் திக்குகளிலும் என் வெற்றியை நிலைநாட்டித் திரும்புவேன். நீ இங்கே இருப்பாயாக '' என்றார்.

தடாதகை நால்வகைப் படைகளுடன் சென்று பல நாடுகளை வென்றார்.

இறுதியாகத் தடாதகைப் பிராட்டியார் நால்வகைச் சேனை யுடன் திருக்கயிலாயத்தை அடைந்து அங்கு நந்தி முதலிய சிவ கணங்களுடன் போர் செய்து அவர்களை வென்றார். அதனால் சிவ பெருமானே போருக்கு எழுந்தார். அவரைக் கண்டவுடன் தடா தகையின் தனங்களில் ஒன்று மறைந்தது. உடனே அவர் நாணம் கொண்டு தலைகுனிந்து நின்றார். பின்பு பிராட்டியார் மதுரைக்குத் திரும்பிவிட்டார்.

முன்பு அசரீரி கூறியபடி சிவபெருமானே தடாதகையின் கணவன் என்பது புலப்பட்டது. இருவருக்கும் திருமணம் நடத்த

மிகச் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருமணத்திற்குத் திருமால், பிரமன் முதலிய தேவர்களும் முனிவர்களும் வந்திருந் தார்கள். நகரமக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லோரும் மகிழ்ச்சியுடன் உரையாடினர். வீடுகளும் நன்கு அலங்கரிக்கப்பட்டன. 'நம் தடாதகைப் பிராட்டியார் இந் நம்பியை அடைவதற்கு என்ன தவம் செய்தாளோ ?' என்பர் சிலர். 'இவ்வள்ளலும் நம் தங்கையை அடைவதற்கு என்ன தவம் செய் தானோ ?' என்பர் சிலர். 'இம்மதுரை செய்த தவம்தான் யாதே ?'' என்பர் சிலர்.

திருமணத்திற்குரிய நல்ல வேளையில் முரசங்கள் ஒலித்தன. சங்குகள் முழங்கின. தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். சிவ பெருமானுக்குப் பக்கத்தில் தடாதகைப் பிராட்டியார் வீற்றிருந்த காட்சி கற்பகத்தருவின் பக்கத்தே மலர்ந்த பூங்கொடிபோல் இருந்தது.

> "பண்ணுமின் னிசையும் நீரும்
> தண்மையும் பாலும் பாலில்
> நண்ணுமின் சுவையும் பூவும்
> நாற்றமும் மணியும் அங்கேழ்
> வண்ணமும் வேறு வேறு
> வடிவுகொண் டிருந்தால் ஒத்த(து)
> அண்ணலும் உலகம் ஈன்ற
> அம்மையும் இருந்த(து) அம்மா"

[தண்மை – குளிர்ச்சி. நண்ணும் - விரும்பும். நாற்றம் - வாசனை. ஈன்ற - பெற்ற]

என்று அக் காட்சியைப் பாடுகின்றார் பரஞ்சோதி முனிவர்.

திருமணச் சடங்குகள் எல்லாம் நிறைவேறின. பிரமதேவரே அவற்றைக் குறைவின்றிச் செய்து முடித்தார். சிவபெருமான் திருமங்கல நாணைத் தடாதகைப் பிராட்டியாருக்குச் சூட்டினார். அவர் முறைப்படி எல்லோருக்கும் வரிசைகள் வழங்கி வழி யனுப்பினார்.

பின்பு சிவபெருமான் அரசர் பணி செய்து அரசியல் நடத்தும் முறையைப் பிறர்க்கு எடுத்துக் காட்டினார். குடிமக்களுக்கு மன்ன னாயும், பகையரசர்களாகிய யானைகளுக்குச் சிங்கமாயும், பெண் களுக்கு மன்மதனாயும், நிலமகளுக்குத் திருமாலாயும், ஞானியர் களுக்கு முழுமுதலாகியும் நிகரில்லாத சச்சிதானந்தப் பொருளாயும் அவர் விளங்கினார்.

6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

திருமணத்திற்கு வந்திருந்த தேவர்களையும், அரசர்களையும், முனிவர்களையும் சிவபெருமான் அமுதுண்ண அழைத்தார். அப்போது பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவரும் அவரை வணங்கி நின்று, "பொன்னம்பலத்தில் ஆடியருளும் தங்களுடைய திருநடனத்தைக் கண்டபிறகு அமுதுண்பது கடமையாகும்" என்று கூறினர். அவர்கள் விருப்பப்படியே சிவபெருமான் அருளால் மதுரையில் வெள்ளியம்பலம் ஒன்று தோன்றியது. அவ்வம்பலத்தில் எம்பெருமான் அம்மையார்மீது வைத்த திருநோக்கமும் திருநகையும் தோன்றுமாறு திருநடனம் செய்தருளினர். முனிவர்கள் இருவரும் அத்திருநடனத்தைத் தரிசித்து மகிழ்ந்தனர். சிவபெருமான் அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தார்.

7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

திருமணத்தைக் காண வந்த யாவரும் உண்டபிறகும் சமைத்த உணவுப் பொருள்களில் ஆயிரத்தில் ஒரு பங்கும் குறையவில்லையே என்று தடாதகைப் பிராட்டி முறையிட்டார். சிவபெருமான் அருகில் இருந்த குண்டோதரன் வயிற்றில் வடவைத் தீயை உண்டாக்கினர்; பின்னர் அவனுக்கு உணவளிக்குமாறு கூறினர்.

தடாதகைப் பிராட்டியின் கட்டளைப்படி பெண்கள் குண்டோதரனை அழைத்துச் சென்று வேண்டிய உணவை அளித்தார்கள். குண்டோதரன் அங்கிருந்த அன்ன வகைகளை எடுத்து உண்டான். அவன் பசி நீங்காமையால் கறிவகைகளையும், பால் தயிர் முதலியவற்றையும் அந்தந்தப் பாத்திரங்களோடு எடுத்து விழுங்கினன். அப்படியும் அவனைப் பசித் தீ கொளுத்தியது. குண்டோதரன் செயலைக் குறித்துப் பிராட்டியார் வியந்து இறைவனிடம் முறையிட்டார். குண்டோதரனே நேரில் வந்து, சிவபெருமானை நோக்கி, "முற்பிறப்பில் ஐயமிட்டு உண்ணாதவர் வயிறு இப்பிறப்பில் எரிவது போல என் வயிறு எரிகின்றதே! பகைவருடைய முப்புரத்தில் இட்ட தீ பசி உருவாக என் வயிற்றில் புகுந்துகொண்டதோ?" என்று கூறிக் கைகளை ஒன்றோடு ஒன்று புடைத்தான்; அண்டங்கள் வெடிபடக் கதறினன்; ஐயோ என்று அலறினன்; பெருமூச்சு விட்டான்; ஆவி சோர்ந்து அயர்ந்தான்.

8. அன்னக் குழியும் வையையும் அழைத்த படலம்

சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரைப் பார்த்து நகைத்து அன்னபூரணியை நினைத்தார். உடனே நான்கு அன்னக் குழிகளில் தயிரன்னம் நிறைந்திருந்தது. குண்டோதரன் அவற்றை உண்டு பசி தணிந்தான். பிறகு உடம்பு வீங்கி மலைபோல விழுந்து புரண்டு தாகத்தினால் வருத்தமடைந்து குளங்கள், கிணறுகள், ஓடைகள் ஆகிய எல்லா நீர் நிலைகளிலும் உள்ள நீரை எல்லாம் குடித்தும் தாகம் நீங்காமல் சிவபெருமானை வந்து வணங்கினான். அவர் தம் திருமுடியில் இருக்கும் கங்கையை மதுரையின் பக்கத்தில் ஒரு நதியாக ஓடி வரும்படி கட்டளையிட்டார். குண்டோதரன் அதன் நீரைப் பருகித் தாகம் தீர்ந்து மகிழ்ச்சியடைந்தான். குண்டோதரனின் நீர் வேட்கையைத் தணிக்க வந்த கங்கை வையை என்று அழைக்கப்பெற்றது. பின்பு சோமசுந்தரர் தடாதகைப் பிராட்டியோடு இந்நிலவுலகத்தை ஆண்டு வந்தார்.

இவ்வாறு சோமசுந்தரக் கடவுள் உலகம் முழுவதையும் ஆண்ட பான்மையைப் பரஞ்சோதியார் தம் திருவிளையாடற் புராணத்தின் பாயிரத்தில்,

"சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்துநறுங் கொன்றை
தணந்து வேப்பந் [யந்தார்
தொடைமுடித்து விட நாகக் கலனகற்றி மாணிக்கச்
சுடர்ப்பூண் ஏந்தி
விடைநிறுத்திக் கயல்எடுத்து வழுதிமரு மகனாகி
மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட சுந்தரனை
வணக்கம் செய்வாம்."

[தணந்து - நீக்கி. தொடை - மாலை. வழுதி - பாண்டியன். மீனநோக்கின் மடவரல் - மீனாட்சியம்மை]

என்று குறிப்பிட்டுத் துதிக்கின்றார்.

9. எழு கடல் அழைத்த படலம்

சிவபெருமான் பாண்டியராகி உலகை ஆண்டுவந்த காலத்தில் அங்கு வந்த கௌதம முனிவரைக் காஞ்சனமாலை அழைத்துத் தன் பிறவித் துன்பத்தை நீக்க வல்ல தவம் யாது என வினவினாள். கௌதம முனிவர் மானதம், வாசிகம், காயிகம் என்னும் மூவகைத் தவங்களில் காயிகங்களே சிறந்தவை என்றும், அவைகளில் தீர்த்த

யாத்திரைகள் சிறந்தவை என்றும் கூறினர். அத்தீர்த்தங்களுள் கங்கை நதியே சிறந்தது என்றும், அந்நதிகளில் தனித் தனியே போய் நீராடுதல் அரிதாகையால் அந்நதிகள் எல்லாம் வந்து கூடும் கடலில் நீராடுதல் சாலச் சிறந்தது என்றும் அவர் கூறினர். காஞ்சனமாலை இதனைத் தடாதகைப் பிராட்டியாருக்குக் கூற, அவர் இறைவனிடம் கூறியருளினர். தேவியின் திருமொழியினைக் கேட்ட சுந்தர பாண்டியராகிய சிவபெருமான், 'ஒருகடல் என்ன, ஏழுகடலையுமே கூவியழைப்போம்' என்று கூறி அவை வரும்படி எண்ணினர். அவ்வாறே ஏழு கடல்களும் ஏழு வகைப்பட்ட நிறங்களுடன் மதுரையின் கிழக்கில் உள்ள ஒரு வாவியில் வந்து நின்றன.

10. மலயத்துவசனை அழைத்த படலம்

சுந்தர பாண்டியனாகிய சிவபெருமானும் தடாதகைப் பிராட்டியும் காஞ்சனமாலையை அழைத்துக்கொண்டு வாவிக் கரையை அடைந்தனர். அங்குக் கணவனுடைய கை, புத்திரனுடைய கை, பசுக்கன்றின் வால் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றிக் கொண்டு நீராடுவதே முறையென்று அங்கிருந்த அந்தணர்கள் கூறினர்கள். உடனே சுந்தர பாண்டியர் இந்திரனுடன் இருந்த மலயத்துவசன் மீது திருவுள்ளம் செலுத்தினர். அவன் காஞ்சனமாலையின் எதிரே வந்து நின்றான். காஞ்சனமாலை மிக்க மகிழ்ச்சி அடைந்து தன் கணவனாகிய அவன் கையைப் பற்றிக் கொண்டு பெரு மகிழ்ச்சியோடு ஏழுகடல் நீரில் முழுகினள். இருவரும் கரையேறியவுடன் ஒரு தேவ விமானத்தில் ஏறிச் சிவலோகத்தை அடைந்தார்கள்.

11. உக்கிர பாண்டியன் திருவவதாரப் படலம்

சோமசுந்தர பாண்டியரும் தடாதகைப் பிராட்டியாரும் அன்புற்று இன்புற்று வாழ்ந்து வருகையில் அக்குலம் விளங்குமாறு ஒரு மைந்தன் வேண்டுமெனப் பிராட்டியார் எண்ணினர். சிவ பெருமான் தம் நெற்றிக் கண்ணில் தோன்றிய முருகப் பெருமானைத் தடாதகைப் பிராட்டியிடம் தோன்றுமாறு திருவுள்ளம் கொண்டார். அவ்வம்மையாரும் கருப்பவதியாகி, திங்கட்கிழமையும் திருவாதிரை நாளும் கூடிய நல்ல வேளையில் ஒரு திருக்குமாரனைப் பெற்றருளினர்.

சுந்தர பாண்டியர் அம்மைந்தருக்கு **உக்கிர குமாரன்** எனத் திருப்பெயரிட்டு வளர்த்து வந்தார். உக்கிர குமாரனும் வளர் பிறைபோல் வளர்ந்து கலை பலவும் கற்றுப் பலர் புகழ விளங்கினன்.

அவனுடைய அருங்குணங்களையும் ஆற்றலையும் கண்டவர்கள், அவன் பிற்காலத்தில் உலகெலாம் ஒரு குடைக்கீழ் ஆளும் ஒப்பிலா மன்னனாக விளங்குவான் என்று கூறினார்கள். சுந்தர பாண்டியர், ''இவனுக்குப் பின்பு முடி சூட்டுவோம். முன்பு திருமணம் செய்வோம்'' என்று திருவுளம் கொண்டு அமைச்சர்களோடு கூடி ஆராய்ந்தார்.

12. உக்கிர குமாரனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலம்

சுந்தர பாண்டியர் மணவூர் என்னும் நகரத்துக்கு அரசனாகிய சோம சேகரனின் புதல்வி **காந்திமதியை** உக்கிர குமாரனுக்குத் திருமணம் செய்விக்க விரும்பினார்.

அன்று இரவு சோமசுந்தரக் கடவுள் சோமசேகரனின் கனவில் எழுந்தருளினார். அவர் அரசனைப் பார்த்து, 'நின் மகளை மதுரைக்கு அழைத்துச் சென்று சுந்தர பாண்டியன் மைந்தனாகிய உக்கிர குமாரனுக்கு மணம் செய்து கொடுப்பாயாக' என்று கட்டளையிட்டார். சோம சேகரன் பெருமகிழ்ச்சி அடைந்து மணவூரை நோக்கி வந்த பாண்டியனின் சுற்றத்தாரோடு திருமணத்திற்கு உடன்பட்டான். சான்றோர் வகுத்த ஒரு நல்ல நாளில் காந்திமதிக்கும் உக்கிர குமாரனுக்கும் அன்புத் திருமணம் நடந்தது. அவர்கள் சில நாட்கள் இல்லறம் என்னும் நல்லறம் இயற்றி வந்தனர்.

சுந்தர பாண்டியர் ஒருநாள் உக்கிர குமாரனை நோக்கி, 'அருமை மைந்தனே! இந்திரனும் வருணனும் உனக்குப் பகைவர்கள் ஆவார்கள்; மேருமலை செருக்கடையும் ஆகையால். இந்திரனது முடி சிதறும்படி நீ இந்த வளையை எறிவாயாக. கடல் வற்றுமாறு இந்த வேலை விடுப்பாயாக. மேருவின் செருக்கு ஒழியும்படி இந்தச் செண்டால் நீ அடிப்பாயாக' என்று கூறி அம்மூன்று ஆயுதங்களையும் கொடுத்தார். பின்னர் அவர் உக்கிரகுமாரனுக்கு முடிசூட்டி அரசுரிமையை அளித்துத் தாமும் தடாதகைப் பிராட்டியும் திருக்கோயிலில் சென்று எழுந்தருளினார்.

13. கடல்சுவற வேல்விட்ட படலம்

அரச நீதியின்படி உக்கிர குமாரர் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தார். அவர் தொண்ணூறு அசுவமேத யாகங்கள் செய்தார். அதனால் சத மகனாகிய இந்திரன் பொறாமைகொண்டு நாட்டின் வளம் குறையுமாறு வருணனை அழைத்து, 'நீ ஊழிக் காலத்தில் ஏழு உலகங்களையும் சேர்த்து அழிக்கின்ற கடலாகத் திரண்டு

சென்று மதுரையை அழிப்பாயாக' என்ருன். வருணன் அவ்வாறே செய்யத் தீர்மானித்தான். நள்ளிரவில் கடல் பெருக்கெடுத்து மதுரையின் கீழ்த் திசையிலிருந்து புறப்பட்டது. அதற்குள் சிவபெருமான் ஒரு சித்தர் உருக்கொண்டு உக்கிர குமாரரின் கனவில் தோன்றி, 'கடல் போல வந்த பகைவனை வலிமை கெடுமாறு வேல் படையை எறிந்து பூமியைக் காப்பாயாக' என்ருர்.

உக்கிரகுமாரர் விழித்தெழுந்து அவ்வாறே சென்று வேற் படையை வலமாகச் சுற்றி எறிந்தார். அப்பெருங்கடல் வற்றிப் பாண்டியரது காலின் மட்டமாயிற்று. அப்போது வானத்தில் சிவ பெருமான் உமாதேவியாருடன் இடப வாகனத்தில் ஏறிக் காட்சி யளித்தார். உக்கிர குமாரரும் அவரை உள்ளம் உருகிப் பாடித் துதித்து அவரவர் இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

உக்கிர குமாரர் நாடாண்ட காலத்தில் கோள்நிலை பிழைத்ததால் மழைவளம் குறைந்தது. மூன்று தமிழ் நாடுகளிலும் மக்கள் பஞ்சத்திஞல் பெருந்துன்பம் அடைந்தனர். தமிழ் மன்னர் மூவரும் அகத்திய முனிவரை அடைந்து தம் நாட்டில் மழைவளங் குன்றிய செய்தியைக் கூறிஞர்கள். அவர், ''சூரியன் செவ்வாய்க்கு முன் செல்லச் சுக்கிரன் பின் செல்வதால் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மழை பெய்யாது. நீங்கள் இந்திரனை அடைந்து கேளுங்கள்'' என்ருர். அரசர்கள், ''இந்திரனை அடைவது எப்படி?'' என்றனர். அகத்தியர், ''சோம வார விரதம் புரிந்து சிவபெருமான் அருள் பெற்று வான வழியில் செல்லுங்கள்'' என்ருர்; பின்னர் சோம வார விரதம் நோற்கும் முறைகளையும் விளக்கிக் கூறிஞர்.

முனிவர் கூறியவாறே மன்னர் மூவரும் மதுரையை அடைந்து பொற்ருமரைக் குளத்தில் நீராடி, சோமசுந்தரரை வழிபட்டுச் சோமவார விரதம் நோற்ருர்கள்; அதஞல் வானத்தில் செல்லும் வரம் பெற்ருர்கள். அவர்கள் வருகையை அறிந்து இந்திரன் அவர்களுக்கு மூன்று சிங்காசனம் இடுவித்தான். சேர மன்னனும் சோழ மன்னனும் இந்திரன் காட்டிய இருக்கைகளில் அமர்ந்தனர். பாண்டியர் மட்டும் இந்திரன் சிங்காதனத்தில் அவனுக்குச் சமமாக வீற்றிருந்தார். அதஞல் பொருமையடைந்த இந்திரன் மற்ற இரு தமிழரசர்களை மட்டும் வந்த காரணத்தை வினவி, இரத்தின ஆபரணங்களையும் பட்டாடைகளையும் கொடுத்தனுப்பிஞன்.

பின்னர் இந்திரன் உக்கிரகுமாரரை நாணமடையுமாறு செய்ய விரும்பி அவருக்கு மிகச்சிறந்த மரியாதை செய்பவன்போல், கணக்கில்லாத மக்கள் தாங்க முடியாமல் வருந்தும் பெரிய முத்து

மாலையை அவர் கழுத்திலிட்டான். உக்கிர பாண்டியர் மலர்மாலை போல அதனைத் தம் கழுத்திலே அணிந்துகொண்டார். அதுகண்டு பெருவியப்படைந்த இந்திரன் அவரை "ஆரந்தாங்கு பாண்டியன்" என்று கூறிப் புகழ்ந்தான். உக்கிர பாண்டியர் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மதுரையை அடைந்தார்.

இந்திரன் கட்டளையால் சேர, சோழ நாடுகளில் மட்டும் மழை பெய்தது. பாண்டிய நாட்டில் பெய்யவில்லை. ஒருசமயம் உக்கிர பாண்டியர் பொதிய மலையை அடுத்த சாயலில் வேட்டையாடும் போது புட்கலா வர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி என்னும் நான்கு மேகங்களும் பொதிய மலைமேல் மேய்ந்துகொண் டிருந்ததால் அவற்றைப் பிடித்து வந்து சிறைப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியால் உக்கிர பாண்டியருக்கும் இந்திரனுக்கும் பெரும் போர் மூண்டது. பாண்டியர் வீசிய வளை இந்திரனின் முடியைத் தள்ளிச் சிதைத்தது. போர் செய்யமுடியாமல் இந்திரன் உக்கிர பாண்டியருக்குச் சமாதான ஓலையனுப்பினன். தன் மேகங்களை விட்டு விட்டால் பாண்டிய நாட்டுக்கு மழை தருவதாக வாக்களித்தான். பாண்டியர் இந்திரன் வாக்கை நம்பவில்லை. பின்னர் வேளாளன் ஒருவன் அவனுக்குப் பிணையாக வந்ததால் மேகங்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்தார். இந்திரன் ஏவலால் பாண்டிய நாட்டில் மாதம் மூன்று மழை பெய்தது. நாடும் வளம் பெற்று விளங்கியது.

15. மேருவைச் செண்டாலடித்த படலம்

உக்கிர பாண்டியர் அகத்தியர் ஓதிய சோம வார விரதத்தைத் தவருமல் அனுஷ்டித்து வந்தார். அவர் மனைவியாகிய காந்திமதி வீரபாண்டியன் என்னும் அருமை மைந்தனைப் பெற்ருள். அக்காலத்தே பாண்டிய நாட்டில் கோள்நிலை மாறுபாட்டால் மீண்டும் பஞ்சம் ஏற்பட்டது. பாண்டியர் மிகவும் வருந்தி இறைவனை வேண்டினர்.

சோமசுந்தரப் பெருமான் பாண்டியர் கனவில் தோன்றி, "அன்பனே! இப்போது மழை பெய்வது அரிது. மகாமேருமலையின் பக்கத்தில் ஒரு பெரிய குகையில் அளவற்ற செல்வம் இருக்கின்றது. அம்மலையைச் செண்டாலடித்துச் செருக்கடக்கிச் செல்வத்தைக் கொண்டு வருக" என்று அருளினர்.

உக்கிர பாண்டியர் விழித்தெழுந்தார். நால்வகைச் சேனைகளும் புடைசூழ, பலப்பல காவதங்களையும் கடந்து மேருமலையை அடைந்து தென் திசையில் நின்று அதனை அழைத்தார். மேருமலை வருவதற்குக் காலம் தாழ்ந்ததால் அதன் செருக்கு அடங்கு

மாறு அதன் சிகரத்தில் செண்டினுல் அடித்தார். உடனே மேரு மலை பொற்பந்துபோல் துடித்தது; அதில் உள்ள தேவாலயங்கள் வெடித்தன.

எட்டுப் புயங்களும், நான்கு தலைகளும், ஒரு வெள்ளைக் குடையையும் கொண்ட உருவத்துடன் மேருமலை உக்கிர பாண்டியரை வந்து வணங்கியது. பின்பு அவரைப் பார்த்து, 'அரசே! நான் நாடோறும் இவ்வுருவத்துடன் மீனுட்சியம்மையையும் சோம சுந்தரரையும் வழிப்படுவது வழக்கம். ஒரு பெண்ணின் மயலால் இன்று வழிபாட்டுக்குக் காலதாமதமாயிற்று. இப்பாவத்தால் அடியும் பட்டேன். என் பாவத்தைத் தீர்த்த தங்களுக்கு என்ன கைம்மாறு செய்வேன்?' என்றுன்.

உக்கிர பாண்டியர் பொன் விரும்பி வந்ததைக் குறிப்பிட்டார். ஒரு மாமர நிழலில் இருந்த பொன்னறையைக் காட்டி வேண்டுமளவு எடுத்துக்கொள்ளுமாறு மேருமலை கூறியது. உக்கிர பாண்டியர் பொன்னறையைத் திறந்து தம் ஆசையளவு பொன்னை எடுத்துக் கொண்டு மதுரைக்குத் திரும்பினுர். வழியில் மத்தியம், விராடம், மாளவம், தெலுங்கம் என்னும் நாட்டரசர்கள் அவரை எதிர்கொண்டு அழைத்துப் பலவாறு உபசரித்தனர்.

அரசர் தாம் கொண்டு சென்ற பொன்னுல் குடிமக்களைக் காப் பாற்றிக் குறையொன்றுமின்றி வாழுமாறு செய்தார். பின்னர் கோள்நிலை சரியாகிப் பாண்டிய நாடு முழுவதும் மழை பெய்தது; பற்பல வளங்களும் பெருகித் தழைத்தன. உக்கிர பாண்டியர் தம் மைந்தனுகிய வீரபாண்டியனுக்கு முடிசூட்டிச் சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தார்.

16. வேதத்துக்குப் பொருள் அருளிச்செய்த படலம்

கிருத யுகத்தில் சிவபெருமான் திருவாக்கிலிருந்து பிரணவம் தோன்றிற்று. அப்பிரணவத்தினின்றும் வேதங்கள் தோன்றின. நைமிசாரணியத்தில் வசித்த கண்ணுவர், கக்கர் முதலியோர் வேதங்களின் பொருளுணராமல் வேதனைப்பட்டுக் கொண்டிருந் தனர். அரபத்தர் என்னும் முனிவர் அவர்களை நோக்கி, 'மதுரையில் உள்ள சோமசுந்தரக் கடவுளின் விமானத்தின் தெற்கில் கோயில் கொண்டிருக்கும் தட்சிணுமூர்த்தியே வேதப் பொருளை உணர்த்தவல்லவர். அவரை அடுத்தல் நல்லது' என்ருர்.

அதுகேட்டுக் கண்ணுவர் முதலிய முனிவர்கள் அரபத்தரோடு சென்று தட்சிணுமூர்த்தியை வழிபட்டனர். தட்சிணுமூர்த்தி

பதினாறு வயதுடைய அந்தண குருவின் உருவம் தாங்கி வந்து முனிவர்களின் குறையைப் போக்கினார்; பின்பு வேதங்களின் பொருளை மிக விளக்கமாகக் கூறியருளினார். அவர் மதுரையில் உள்ள சிவலிங்கப் பெருமான் முன்னர் அவர்களை அழைத்துச் சென்று, 'பரப்பிரம்மமாகிய இம்மூர்த்தியின் திருவுருவமே வேதமாகும். வேதத்தின் பொருள் இங்கு எழுந்தருளிய சிவலிங்கமேயாகும். இச்சிவலிங்கம் வேறு; வேதம் வேறு என்று எண்ணுதல் வேண்டா. ஆதலால் வேதமும் ஒன்றே; வேதத்தின் பொருளும் ஒன்றே என்று அறியுங்கள்' என்றார். அதன்பின் அவர் பிரணவத் தோற்றம், வேதாகமங்களின் தோற்றம், ஞான காண்டம், கரும காண்டம், வைதிகம், வைதிக சைவம் என்னுமிவற்றின் இயல்புகளைத் தெளிவாகக் கூறினார். பின்னர் அவர் முனிவர்களின் முதுகுகளில் தம் திருக்கரங்களால் தடவிச் சிவலிங்கத்துள் மறைந்தார்.

17. மாணிக்கம் விற்ற படலம்

வீரபாண்டியனின் காமக்கிழத்தியர்களிடத்தே பல பொல்லாத மக்கள் தோன்றினர். அவன் குல மனைவியிடத்தே நெடுங்காலங் கழித்து ஒரு நன்மைந்தன் தோன்றினான். ஒருசமயம் வீரபாண்டியன் வேட்டையாடச் சென்று புலியால் தாக்கப்பட்டு இறந்தான். அதுதான் தகுந்த சமயம் என்று காமக்கிழத்தியரின் மக்கள் பலவகைச் செல்வங்களையும் கவர்ந்து சென்று ஒளிந்து விட்டனர்.

அமைச்சர் வீரபாண்டியனின் மைந்தனுக்கு முடி செய்வதற்கு வேண்டிய விலையுயர்ந்த மாணிக்கங்கள் இல்லையே என்று வருந்திச் சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டார்கள். அரசன் மகனைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் செல்லும்போது சோமசுந்தரக் கடவுள் ஒரு வைசிய வேடங்கொண்டு தம்மிடம் விலையுயர்ந்த நவரத்தினங்கள் இருப்பதாகக் கூறினர். அவர் ஒரு கரிய துணியை விரித்து, அதன் நடுவில் மாணிக்க ரத்தினத்தையும், கிழக்கு முதலிய எட்டுத் திசைகளிலும் முத்து முதலிய எட்டு இரத்தினங்களையும் வைத்து, வடக்கு நோக்கியிருந்து இறைவனை வழிபட்டு வாழ்த்தி அரசனுக்கு அளித்தார்; பின்னர் அமைச்சர்களை நோக்கி, 'இம் மைந்தருக்கு இவ்விரத்தினங்களால் முடிசெய்து அபிடேகப் பாண்டியன் எனப் பெயர் சூட்டுங்கள்' என்று கூறி மறைந்தார். வந்தவர் சோமசுந்தரப்பெருமானே என்பதை அறிந்த எல்லோரும் கைகூப்பித் தொழுதார்கள். அமைச்சர்கள் இராசகுமாரனுக்கு முடிசூட்டி, **அபிடேகப் பாண்டியன்** எனப் பெயரிட்டு அழைத்தனர். சின்னாட்களில் காமக்கிழத்தியரின் மக்கள் திருடியொளித்து வைத்திருந்த முடி முதலிய பொருள்களும் கிடைத்தன.

18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் அபிடேக பாண்டியன் சோமசுந்தரப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு புரிதல் வழக்கம். ஆண்டுதோறும் அதே நாளில் அவ்விறைவனை வழிபடும் தேவேந்திரன் அதனால் காலம் தாழ்ந்துப் பூசை செய்யவேண்டியவனானன். எனவே அவன் மனம் வருந்தித் தேவலோகத்துக்குத் திரும்பினான். வருணன் இந்திரனது மன வருத்தத்துக்குக் காரணத்தை அறிந்து, 'அச்சிவலிங்கம் தேவர்களாலும் தீர்க்க முடியாத என் பெரிய வயிற்று நோயைத் தீர்க்குமா?' என்றான். இந்திரன் வருணனைப் பார்த்து, 'நீ ஐயம் கொண்டு வினவுவது ஏன்? பிரமன், திருமால் ஆகியோரால் தீர்க்கப்படாத பிறவி நோயைத் தீர்க்கவல்ல சிவபெருமானுக்கு நின் வயிற்று நோயைப் போக்குவது அரிதோ? நீ எம்பெருமான் திருவிளையாட்டைச் சோதித்துக் கொள்ளலாம்' என்றான்.

வருணன் தன் வயிற்று நோயைத் தீர்க்கக் கருதி, கடலை அழைத்து மதுரை முழுவதையும் அழிக்குமாறு ஏவினான். பேரூழிக்காலம் வந்ததுபோல் பெருங்கடல் பொங்கி வருவதைக் கண்டு மக்கள் நடுநடுங்கி, அபிடேக பாண்டியனிடம் சென்று முறையிட்டார்கள். எல்லாம் வல்ல சிவபெருமான் தம் திருச்சடையில் இருந்த நான்கு மேகங்களையும் கடலை உறிஞ்சுமாறு அனுப்பினார். அவை கடலை வாரி உறிஞ்சியதால் அது அறவே வற்றியது. நகரத்து மக்களும் தேவர் முதலியோரும் சிவபெருமான் திருவிளையாடலை எண்ணிப் பாடிப் பரவி இறைவன் திருவருளைப் பெற்றார்கள்.

---

2. கூடற் காண்டம்

19. நான்மாடக் கூடலான படலம்

வருணன் தன் செயல் நிறைவேறாமையால் சினங்கொண்டான். ஏழு மேகங்களையும் அழைத்துக் கடல் நீரையெல்லாம் குடித்து இடித்துப் பெய்து மதுரையை அழிக்குமாறு அவன் கட்டளையிட்டான். உடனே மேகங்கள் ஏழும் நிலம் தெரியுமாறு கடலைக் குடித்து உடல் கருகி மின்னின; ஊழிக் காலத்தில் வெடிக்கும் அண்டகடாக ஒலிபோல் பெருமுழக்கம் செய்தன. அதனால் ஆதிசேடன் மணிகள் சிதறி உடல் நெளிந்தது; திக்கு யானைகள் நிலை

கெட்டு நடுங்கின. பூசணிக்காய்போன்ற நீர்த்துளிகளும், பளிங்குத் தாரைபோன்ற நீர்த் தாரைகளும் காணப்பட்டன. எங்கும் ஒரே இருள்.

அபிடேக பாண்டியன் மனம் கலங்கி, 'சோமசுந்தரப் பெருமானே இன்னும் நம்மைக் காப்பார்' என்று திருக்கோயிலுக்குச் சென்று முறையிட்டான். சிவபெருமான் தம் சடையில் உள்ள நான்கு மேகங்களையும் மதுரையை வளைத்து நான்கு மாடங்களாகி, அவ்வேழு மேகங்களையும் போக்குமாறு கட்டளையிட்டார். அம் மேகங்கள் நான்கும் சிவபெருமான் கட்டளைப்படியே நான்கு மாடங்களாகிச் சந்துவாய் தெரியாவண்ணம் மதுரை நகரம் முழுவதும் கூரைபோல் மூடிக்கொண்டன. மக்களும் அரசனும் அமைச்சர்களும் அம்மாடங்களில் முன்பு இருந்ததைவிட மிகவும் நலமாகத் தங்கி இருந்தார்கள். ஏழு மேகங்களும் உடல் வற்றி நாணமுற்று நின்றன. வருணனும் நாணமடைந்து பொற்றாமரைக் குளக்கரையை அடைந்தான். அதற்குள் அவன் வயிற்று நோயும் நீங்கியது.

பின்னர் வருணன் அக்குளத்தில் நீராடிச் சோமசுந்தரக் கடவுளை விதிப்படி பூசித்து எழுந்து நின்றான். சிவபெருமான் மகிழ்ந்து, "வருணனே! நீ விரும்பியது யாது? சொல்" என்று கேட்டார். உடனே வருணன் அவரை வணங்கி, "எந்தையே! தீராத என் கொடிய வயிற்றுநோய் பொற்றாமரைக் குளக்கரையை அடையுமுன்பே நீங்கப்பெற்றேன். குற்றமே குணமாகக் கொள்வது உம் குணமோ! என் உடற்பிணியாகிய வயிற்று நோயேயன்றி உயிர்ப்பிணியாகிய இரு வினைகளும் மலங்களும் நீங்கப் பெற்றேன். இனி எனக்கு மணியும் மந்திரமும் மருந்தும் வேறொன்றுமில்லை. அடியேன் செய்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டும்" என்று வேண்டிச் சில வரங்கள் பெற்றுத் தன் நகர் அடைந்தான்.

வருணன் விட்ட மேகங்களைத் தடுக்கும் பொருட்டுச் சிவபெருமானது சடையினின்று நீங்கிய நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடியிருந்த காரணத்தால் மதுரைமா நகரம் அன்று முதல் நான்மாடக் கூடல் என்று அழைக்கப்பட்டது.

" வன் றிறல் வருணன் விட்ட
மாரியை விலக்க ஈசன்
மின் றிகழ் சடையி னின் று
நீங்கிய மேகம் நான்கும்
குன் றுபோல் நிவந்து நான்கு
கூடமாக் கூட லாலே
அன் று நான் மாடக் கூடல்
ஆனதால் மதுரை மூதூர்."

[*மாரியை* - மேகத்தை. *மின்திகழ்* - மின்போல் பிரகாசிக்கின்ற. *நிவந்து* - உயர்ந்து. *கூடம்* - மாடம்.]

என்று பரஞ்சோதி முனிவர் இந்நிகழ்ச்சியைப் பாடுகிறார்.

20. எல்லாம் வல்ல சித்தரான படலம்

அபிடேக பாண்டியனுக்கும் பாண்டிய நாட்டவருக்கும் இம்மை மறுமைப் பயன்கள் உண்டாகும் பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் எல்லாம் வல்ல சித்தராக வடிவம் கொண்டார்.

சித்தர் புன்முறுவலும் குறுவேர்வையும் கொண்ட திருமுகம் உடையவராகிக் கடைவீதி, சித்திரக்கூடம், நாற்சந்தி, நிலா முற்றம், உப்பரிகை, மாளிகை, திண்ணை ஆகிய எல்லா இடங்களிலும் சென்று விளங்கினர்; தெற்கில் இருப்பவர்போலக் காட்டி வடக்கில் இருப்பார்; கிழக்கில் இருப்பார்போல் காட்டி மேற்கே போய் இருப்பார்; யாவரும் தேடிக் காணாதபடி திடீரென்று மறைவார்.

தொலைவில் உள்ளதை அருகில் காட்டுதல், முதியவரை இளைஞராக்குதல், இளைஞரை முதியராக்குதல், ஆண் வடிவத்தைப் பெண்ணாக்குதல், பெண் வடிவத்தை ஆணாக்குதல், மலடியை மகப்பேறடையச் செய்தல், ஊமையைப் பேச வைத்தல், குருடரைப் பார்வையடையச் செய்தல், எட்டி மரத்தில் சுவை மிகுந்த பழங்களைப் பழுக்கச் செய்தல் போலும் அளவில்லாத வித்தைகளைச் சித்தர் புரிந்து வந்தார். மதுரை நகர மக்கள் யாவரும் சித்தர் செய்யும் வித்தைகளில் வைத்த கண்களையும் மனத்தையும் அடக்க முடியாதவர்களாய்த் தத்தம் தொழில்களையும் மறந்து விட்டனர்.

இச்செய்திகளை அறிந்த அபிடேக பாண்டியன் சித்தரைத் தன்னிடம் அழைத்து வருமாறு பணிந்தான். சித்தரோ, 'எமக்கு அரசனாலாகும் பயன் ஒன்றுமில்லை' என்று மறுத்துவிட்டார். அதனையுணர்ந்த பாண்டியன், 'எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பெற்று இம்மை மறுமைப் பயன்களை வெறுத்த சித்தர்கள் மண்ணரசரையும் விண்ணரசர் முதலிய தேவர்களையும் மதியார்' என்று எண்ணிக்கொண்டு வாளா இருந்தான்.

21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

பின்னர் அபிடேகப் பாண்டியன் சித்தர் வாராமையால் மனம் வருந்தி, தானே அவரைக் காண்பது நல்லது என்று எண்ணினன். பாண்டியன் குறிப்பை உணர்ந்த சித்தர் அதற்கு முன்னரே

தமது பொன் விமானத்துக்கு வடமேற்கில் வந்து எழுந்தருளி இருந்தார்.

தைத்திங்கள் முதல்நாளில் பாண்டியன் ஆலயத்துக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டு வலம் வந்தான். வழியில் சித்தர் இறுமாப் புடன் அமர்ந்திருந்தார். அரசனுக்கு முன்வந்த மக்கள் சித்தரைப் பார்த்து, 'எழுந்துபோ' என்றார்கள். பாண்டியன் அவரைப் பார்த்து, 'உமது நாடு எது? ஊர் எது? பெயர் என்ன? உமக்கு யாது வரும்? என்ன வேண்டும்?' என்று கேட்டான். சித்தர் அரசனைப் பார்த்து, 'அப்பா! நாம் எல்லா நாடுகளிலும் திரிவோம். எனினும் தற்சமயம் காசுமீரம் என்னும் நாட்டில் காசி நகரத்தில் வாழ்கிறோம். பிச்சைப் பெருவாழ்வு உடையவர்கள் எல்லாம் எம்மவர்களே! நாடோறும் நாம் வித்தைசெய்து திரியும் சித்தர் ஆவோம். யாம் இங்குள்ள சிவதலங்களை வழிபட வந்தோம். இம்மதுரைமா நகரில் வாழும் மக்களுக்கு எம் விளையாடல்களைக் காட்டி அவர்கள் விரும்பும் சித்திகளையும் செய்வோம். யாம் வேதம் முதலிய கலைகளிலும் வல்லவர். நின்னால் எமக்கு ஆவது ஒன்றுமில்லை' என்று கூறிச் சிரித்தார்.

சித்தர் பேச்சைக் கேட்ட பாண்டியன் அவரது இறுமாப்பைச் சோதிக்கக் கருதினான். அவன் அவரிடத்தில் ஒரு கரும்பைக் காட்டி 'இதனை இந்தக் கல்லானை உண்ணுமாறு செய்வீராயின் எல்லாம் வல்லவரும் நீரே; சோமசுந்தரக் கடவுளும் நீரே! நீர் விரும்புவதை அளிப்பேன்' என்றான். அதைக் கேட்ட சித்தர், நான் உன்னிடத்தில் பெறவேண்டிய பொருள் ஒன்றுமில்லை; ஆயினும் உன் ஆசை நிறைவேறும்படி செய்வோம்; இக்கல்லானை கரும்பைச் சுவைத்தலைப் பார்' என்று கூறி, உடனே கல்லானையைக் கடைக் கணித்துப் பார்த்தார். உடனே கல்லானை மதம் பொழிந்து, இடி போல் ஒலித்துத் தன் துதிக்கையால் அரசன் கையில் இருந்த கரும்பைப் பறித்துத் தின்றது. சித்தர் மீண்டும் யானைமீது கடைக்கண் பார்வையைச் செலுத்தினார். அந்த யானை அரசன் கழுத்தில் உள்ள கண்டமாலையை எட்டிப் பறித்தது. பாண்டியனும் உடன் இருந்த கஞ்சுக மாக்களும் அது கண்டு ஆத்திரம் கொண்டனர். ஏவலர் சித்தரை அடிக்கச் சென்றனர். சித்தர் அவர்களை கையமர்த்தி நிறுத்தினார். அவர்கள் நின்ற இடத்திலேயே கற்சிலைபோல் நின்றனர். அரசன் அதுகண்டு சினம் தணிந்து, சித்தரைப் பார்த்து, 'அடியேன் பிழைகளைப் பொறுத்தருள வேண்டும்' என்று அவர் திருவடிகளை வணங்கி வேண்டினான். சித்தர் மனம் இரங்கி, அவனுக்கு வேண்டிய வரத்தைக் கேட்குமாறு கட்டளையிட்டார். பாண்டியன் தனக்கு மக்கட்பேறு அருளுமாறு வேண்டினான். சித்தர் அவ்வாறே ஆக அருள் செய்தார். மீண்டும் அவர் யானையை நோக்கினார். யானைத் துதிக்கையை நீட்டி அவனுடைய முத்து மாலையைக் கொடுத்தது. சித்தரும் திடீரென்று மறைந்தார். யானையும் முன்போலவே கல்லாகவே மாறிவிட்டது.

இவையெல்லாம் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலே என அறிந்த பாண்டியன் ஆலயம் சென்று அவரை உளமார வாயாரத் துதித்து வழிபட்டான். பின்னர் அவன் விக்கிரம பாண்டியன் என்னும் மகனைப் பெற்றுச் சில காலம் அரசாண்டு தன் மகனுக்குப் பட்டம் கட்டிச் சிவபதம் அடைந்தான்.

22. யானை எய்த படலம்

விக்கிரம பாண்டியன் புறச் சமயங்களை நீக்கிச் சைவ சமயப் பயிரை வளர்த்து வந்தான். அவன் இவ்வாறு இருக்கும் நாளில் காஞ்சி நகரத்தில் சோழ மன்னன் ஒருவன் சமண நெறியினின்று பாண்டியனைப் பகைத்தான். அவன் பாண்டியனை நேரில் எதிர்க்க அஞ்சி, அஞ்சனம், கிரவுஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், அத்திவெற்பு, சையம், ஏமகூடம், விந்தம் என்னும் எட்டு மலைகளிலும் வாழும் சமண குரவர்கள் எண்ணாயிரவரையும் தன்பால் அழைத்தான். அவன் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் அபிசார யாகம் செய்து பாண்டியனைக் கொல்வீராயின் உங்களுக்கு எனது நாட்டில் பாதியைத் தருவேன்' என்றான்.

அரசன் விருப்பப்படியே சமண முனிவர்கள் செய்த கொடிய வேள்வித் தீயினால் அருகே இருந்த சோலைகளும், நந்தவனங்களும் காடுகளும் கருகித் தீய்ந்தன. ஓடைகளும், குளங்களும் நீர் வற்றின. அவர்கள் செய்த வேள்விக் குண்டத்திலிருந்து எமனைப் போன்ற ஒரு பெரிய மதயானை எழுந்தது. சமணர்கள் அதனை விக்கிரம பாண்டியனைக் கொன்று வருமாறு ஏவினர். அந்த யானை தான் செல்லும் வழியெல்லாம் தீமைகள் புரிந்துகொண்டே சென்றது. மதயானையின் வருகையைக் கேட்ட பாண்டியன் மனம் கலங்கித் திருக்கோயிலை அடைந்து சோமசுந்திரக் கடவுளை வணங்கி, தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினான். அப்போது, 'பாண்டியனே! நாம் ஒரு வில் வீரனாகி உன் பகைவர் விட்ட யானையைக் கொல்வோம். அதற்கு முன்னர் இந்நகரின் கிழக்கில் ஓர் அட்டாலை (பரண் வடிவமாகச் செய்த மண்டபம்) அமைப்பாயாக' என்று அசரீரி எழுந்தது.

இறைவன் கட்டளைப்படியே பதினாறு தூண்கள் அமைந்த மண்டபத்தை அரசன் கட்டினான். சோமசுந்தரப் பெருமான் காளைப் பருவம் உடைய வேட்டுவ வீரனாகத் தோன்றி யானையை எதிர்பார்த்தபடியே அட்டாலை மண்டபத்தில் நின்றிருந்தார். மதயானை ஐந்து கூப்பிடு தூரத்தில் வருவதைப் பார்த்த அவர், தம் கையிலிருந்த வில்லை வளைத்தார்; நாணைப் பூட்டினார்; விரலினால் தெறித்துச் சிங்கநாதம் காட்டினார்; நரசிங்க பாணத்தை அதன்

மீது ஏவினர். அந்தக் கணை விரைவாக சென்று மேகம்போல் முழக்கம் செய்து வந்த யானையின் மத்தகத்தைக் கிழித்தது. யானையும் தரையில் விழுந்து இறந்தது.

பாண்டியனின் வீரர்கள் யானையுடன் வந்த சமணர்களை அடித்துப் புடைத்து அவமானம் செய்து ஓட்டினர். விக்கிரம பாண்டியன் வில் வீரன் திருவடிகளை வணங்கி, 'எம்பெருமானே, தாங்கள் இங்கேயே இப்படியே எப்போதும் இருக்கவேண்டும்' என்று வேண்டினன். சிவபெருமானும் அதற்கு இசைவு தந்தார். பாண்டியன் அவரை வழிபட்டு வரும் நாளில் இராஜசேகரன் என்னும் மைந்தனைப் பெற்று அன்புற்று இன்புற்று வாழ்ந்து வந்தான். சிவபெருமான் யானைமீது தொடுத்த அம்பு நரசிங்க ரூபமாக எழுந்தருளியது. உரோமச முனிவரும் பிரகலாதனும் அதனை வழிபட்டு நற்பேறு பெற்றனர்.

23. விருத்த குமார பாலரான படலம்

விக்கிரம பாண்டியன் காலத்தில் விருபாக்கன் என்னும் அந்தணனும், அவன் மனைவியாகிய சுபவிரதையும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு நெடுநாட்களாக மகப்பேறு இல்லாமல் இறைவன் திருவருளால் கௌரி என்னும் பெண் குழந்தை பிறந்தது. கௌரி ஐந்து வயதிலிருந்தே பிறவிப் பயனை நீக்க வல்ல உமா தேவியாரது மந்திரத்தை ஓதி வந்தாள்.

கௌரிக்கு எட்டு வயதாகும்போதும் ஒரு வைணவ பிரமசாரி அங்கே வந்து பிச்சை கேட்டான். அவனே தன் பெண்ணுக்குத் தகுந்த கணவன் என்று எண்ணிய விருபாக்கன், குலம் கோத்திரம் ஒன்றும் பாராமல் இவளை அவனுக்குத் தானம் செய்துவிட்டான். அதுகேட்டுப் பெற்ற தாயும் சுற்றத்தாரும் பெரிதும் வருந்தினர்கள். வைணவ அந்தணன் புது மனையாளுடன் தன் இல்லம் அடைந்தான். சிவவேடமும் சிவசிந்தையும் உடைய கௌரியைக் கண்டு அவன் பெற்றோர்கள் ஆத்திரம் கொண்டார்கள்; அவளைத் தனியே ஒதுக்கி வைத்துக் குடும்பம் நடத்தினர்கள். ஒருநாள் அவர்கள் கௌரியை வீட்டில் அடைத்துவிட்டு, அயலூரில் நடக்கும் ஒரு திருமணத்துக்குச் சென்றனர். வீட்டில் தங்கிய கௌரி சிவபெருமானின் திருவருள் குறித்துப் பலவாறு சிந்தித்து வருந்திக் கொண்டிருந்தாள்.

''சிவனடியார்க்(கு) அன்பிலாச் சிந்தையே
இரும்(பு): ஏவல் செய்து நாளும்
அவனடியார் திறத்தொழுக ஆக்கையே
மரம்; செவிகண் ஆதிஐந்தும்

பவனடியா ரிடைச் செலுத்தாப் படிவமே
பாவை ; மறைபரவுஞ் சைவ
தவநெறியல் லாநெறியே பவநெறியென்
றளியளாய்த் தளர்வாள் பின்னும்.''

[அடியார் திறத்து-சிவனடியாரிடத்தில். பவனடியார்-சிவனடியார். பாவை-பொம்மை. பவநெறி-பிறவிக்கு காரணமாகிய நெறி.]

''எனைத்துயிர்க்கும் உறுதிஇக பரம்என்ப ;
அவைகொடுப்பான் எல்லாந் தானாய்
அனைத்துயிர்க்கும் உயிராகும் அரன்என்ப ;
அவன் அறிவார்க்(கு) அங்கம் வாக்கு
மனத்துறுமெய்ப் பத்திவழி வருமென்ப ;
அப்பத்தி வழிநிற் பார்க்கு
வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப(து)
அவனடியார் வேடம் அன்றோ !''

[எனைத்துயிர்க்கும்-எல்லா உயிர்க்கும். இகம்-இப்பிறவியில். பரம்-மறுமை இன்பம். அங்கம்-உடல்.]

என்றெல்லாம் அவள் புலம்பினள் என்று பரஞ்சோதி முனிவர் பகர்கின்றார்.

அப்போது சிவபெருமான் வயது முதிர்ந்த ஓர் அந்தணர் வடிவங்கொண்டு விபூதியும் உருத்திராக்க மாலையும் அணிந்து கௌரியின் வீட்டை அடைந்தார். கௌரி அவரைக் கண்டு வணங்கினள். அவர் அருளால் கௌரி பூட்டைத் தொட்டதும் திறந்துகொண்டது. அவள் சமயலறைக்குச் சென்று சமையல் செய்து அடியாரை அமுது செய்வித்தாள்.

அமுது செய்தவுடன் வேதியர் விருத்தப் பருவம் நீங்கிக் காளைப் பருவம் அடைந்தார். அதுகண்டு கௌரி கதிகலங்கி ஒருபுறத்தே ஒதுங்கி நின்றாள். அந்நேரத்தில் அயலூர் சென்ற வைணவர்களும் திரும்பிவந்து வீட்டில் புகுந்தார்கள். அதற்குள் காளை வடிவினராக இருந்தவர் கைக்குழந்தையாக மாறி ஆடையின்மேல் கிடந்து அழுதுகொண்டு இருந்தார். கௌரியின் மாமி ஆத்திரங்கொண்டு, 'இந்தக் குழந்தை ஏது ?' என்று கேட்டாள். அதற்குக் கௌரி, 'தத்தனுடைய மனைவி இங்கு வந்து இந்தக் குழந்தையை சிறிது நேரம் பார்த்துக்கொள் என வைத்துவிட்டுப் போனாள்' என்றாள். மாமனும் மாமியும் கடுங் கோபங்கொண்டு 'ஒரு சைவனுடைய குழந்தைமீது அன்புகொண்ட நீ எமக்கு ஆகாய் !' என்று அவளைக் குழந்தையோடு வீட்டைவிட்டுத் துரத்தினார்கள். கௌரி வீதியில் நின்று, தாயில்லாக் குழந்தை முகங்கண்டு தளர்ந்து உருகி, உமாதேவியாருடைய மந்திரத்தை உச்சரித்

தாள். உடனே அக்குழந்தை ஆகாயத்தில் சென்று இடப வாகனத்தின்மேல் இருத்தலை அவள் கண்டாள். பின்பு சிவ பிரானுர் அவளை உமாதேவியின் உருவமாக்கி, தேவர்கள் மலர்மாரி பொழிய இடப வாகனத்தின் மீது ஏற்றிக்கொண்டு ஆகாயத்தில் எழுந்தருளினுர்.

24. கான்மாறியாடின படலம்

விக்கிரம பாண்டியன் தன் மகனுகிய இராஜசேகரனுக்கு முடி சூட்டிவிட்டுச் சிவபதவியை அடைந்தான். இராஜசேகரன் சிவ பெருமான் வெள்ளியம்பலத்தில் ஆனந்த வடிவமாய்ச் செய்யும் நடனத்தில் அன்பு மிகுதியுடையவனுதலால், பரதக் கலை ஒழித்து மற்ற அறுபத்துமூன்று கலைகளையும் கற்று வல்லவனுனுன். அக் காலத்தில் சோழ மன்னனுக இருந்த கரிகாலனுடைய அரண் மனைப் புலவன் ஒருவன் வந்து பாண்டியனைப் பார்த்து, 'எங்கள் கரிகால் மன்னன் அறுபத்து நான்கு கலைகளையும் கற்றவன். நீ பரதக் கலையில் பயிற்சி இல்லாதவன்' என்றுன். அதனுல் வருந்திய பாண்டியன் பரத நூலையும் குற்றமறப் பயிலலானுன்.

பரதம் பயிலும்போது, தனக்கு உடல் வலி உண்டாவதை அறிந்த பாண்டியன், இறைவனுக்கும் இவ்வாறு திருவடிகள் துன்பம் அடையுமே என்று கவலை அடைந்தான். ஒருநாள் சிவ ராத்திரியில் அவன் திருக்கோயிலை அடைந்து, வெள்ளியம்பலத் திருக்கூத்தைக் கண்டு தரிசித்துக் கண்ணீர் சோர இறைவனை நோக்கி, 'எம்பெருமானே, நின்ற திருவடியை எடுத்து வீசி, எடுத்த திருவடியைக் கீழே ஊன்றி, அடியேன் காணும்படி மாறி யாட வேண்டும். இல்லையேல் அடியேன் இறந்துபடுவேன்' என வேண்டினுன். உடனே சிவபெருமான் அவன் அன்புக்கு இரங்கி இடப் பாதத்தைத் தரையில் ஊன்றி, வலப் பாதத்தை எடுத்து வீசி மாறியாடிக் காட்டினுர். பாண்டியன் அதுகண்டு இன்பக் கடலில் மூழ்கி, அன்பு வடிவமாய் நின்று வாயார மனமார ஈசனுரைத் துதிக்கலானுன்.

பாண்டியன் அப்பொழுது செய்த துதிகளைப் பரஞ்சோதி முனிவர்,

''பெரியாய் சரணம்! சிறியாய் சரணம்!
கரியா கிய அங் கணணே சரணம்!
அரியாய் எளியாய் அடிமா றிநடம்
புரிவாய் சரணம்! புனிதா சரணம்!''

[*பெரியாய்* - பெரிய பொருள்களில் பெரியவனே. *சரணம்* - அடைக்கலம். *கரியாகிய* - சாட்சியாயுள்ள. *அங்கணனே* - அழகிய கண்களை உடையவனே. *புனிதா* - தூயவனே.]

"நதியா டியசெஞ் சடையாய்! நகைவெண்
மதியாய்; மதியா தவர்தம் மதியிற்
பதியாய்! பதினெண் கணமும் பரவுந்
துதியாய் சரணம்! சுடரே சரணம்!"

[நதியாடிய - கங்கை விளையாடும். பதியாய் - பொருந்தாதவனே. பரவும் - துதிக்கும்.]

"பழையாய்! புதியாய் சரணம்! பணிலக்
குழையாய் சரணம்! கொடுவெண் மழுவாள்
உழையாய் சரணம்! உருகா தவர்பால்
விழையாய் சரணம்! விகிர்தா சரணம்!"

[பணிலம் குழையாய்-சங்கக் குழை உடையவனே. விகிர்தா-வேறுபாடு உடையவனே.]

"இருளாய்! வெளியாய் சரணம்! எனையும்
பொருளா கநினைந் துபுரந் தரன்மால்
தெருளா தநடந் தெரிவித் தெனையாள்
அருளாய் சரணம்! அழகா சரணம்!"

[புரந்தரன்-இந்திரன். தெருளாத-அறியாத.]

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு துதித்து வணங்கிய பாண்டியன் இந்த நடனத்தை எல்லோரும் பார்க்கும்படி எப்போதும் இருந்தருள வேண்டும் என்று ஈசனை வேண்டினான். சிவபெருமானும் அதற்கு இணங்கினார். அன்று முதல் அடிமாறிய திருக்கோலத்தினராகவே அங்கு ஈசனார் எழுந்தருளியுள்ளார்.

25. பழியஞ்சின படலம்

இராஜசேகர பாண்டியன் தன் மகனாகிய குலோத்துங்க பாண்டியனுக்கு முடி சூட்டிவிட்டு சிவபதவி அடைந்தான். அவன் காலத்தில் திருப்புத்தூரிலிருந்து ஓர் அந்தணன் தன் மனைவியோடும் கைக்குழந்தையோடும் மதுரை நோக்கிச் சென்றான். வழியில் ஓர் ஆலமரத்தின் கீழே அவளை இருக்கச் செய்து அவள் தாகத்துக்கு வேண்டிய தண்ணீர் கொண்டுவருவதற்காக அவன் சென்றான். அந்த மரத்தில் சிக்கியிருந்த கூறிய ஓர் அம்பு, காற்று வீசியதால் கீழே விழுந்து, பார்ப்பனியின் வயிற்றில் தைத்துவிட்டது. அதனால் அவள் இறந்தாள்.

அதுகாலையில் வேடன் ஒருவன் நிழல் தேடி ஆங்கு நின்றிருந்தான். நீர் கொண்டுவந்த அந்தணன் இறந்த மனைவியைக் கண்டு துன்பத்தால் துடித்தான். அருகிலிருந்த வேடனே தன் மனைவியைக்

கொன்றான் என்று எண்ணி, அவனை வலிந்து அழைத்துக்கொண்டு குழந்தையையும் பிணத்தையும் தூக்கிக்கொண்டு அரசனிடம் முறையிடச் சென்றான். அவன் கூறியனவற்றைக்கேட்ட அரசன் வேடனைப் பார்த்தான். வேடன், 'அரசே, நான் இளைப்பாறும் பொருட்டு அந்த மர நிழலில் நின்றேன். இவளை நான் கொல்லவும் இல்லை. கொன்றவரைக் காணவும் இல்லை' என்றான். அந்த வேடன் கடுந்தண்டத்துக்கும் அஞ்சாமல், தான் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறுவதைக் கேட்ட மன்னன், சோமசுந்தரக் கடவுளை வணங்கி உண்மையை உணர்த்தியருள வேண்டினான். அப்போது ஆகாயத்தினின்று, 'பாண்டியனே, இன்று இரவு செட்டித் தெருவில் நடைபெறும் திருமணத்திற்கு நீயும் அந்தணனும் வந்து பார்த்தால் உண்மை விளங்கும்' என்று ஓர் அசரீரி தோன்றியது.

அசரீரி உரையின் உண்மையை உணரும் பொருட்டு அரசனும் அந்தணனும் அவ்வாறே அத்திருமண வீட்டிற்குச் சென்று, ஒரு பக்கத்தில் தங்கி இருந்தார்கள். அப்போது எம தூதுவர்கள் இருவர் பேசிக்கொண்டிருக்கும் பேச்சுகள் அவர்கள் காதில் விழுந்தன. அவர்களில் ஒருவன் மற்றவனைப் பார்த்து, 'ஒரு வியாதியும் இல்லாத இந்த மணமகனின் உயிரை நம் தலைவன் கட்டளைப்படி எவ்வாறு எடுத்துச் செல்வது?' என்றான். அதற்கு மற்றவன் 'நாம் இன்று பகலில் ஆலமரத்தில் தொத்தியிருந்த அம்பைக் காற்றினால் விழும்படி செய்து பார்ப்பனியின் உயிரைக் கவர்ந்தோமன்றோ? அதுபோலவே இந்தத் திருமண ஆரவாரத்தில் வெளியில் வெருண்டு நின்ற பசுவைத் தூண்டி விட்டு இம்மணமகனை முட்டும்படி செய்து இவன் உயிரைக் கவர்வோம்' என்றான்.

அதுகேட்ட பாண்டியன் அந்தணனை நோக்கி, 'இந்த வார்த்தையைக் கேட்டாயா?' என்றான். அதற்கு அந்தணன், 'இவன் இப்படி இறந்தால் என் மனைவியும் அப்படியே இறந்திருப்பாள் என்று தெளிவேன்' என்றான். திருமணம் தொடங்கும்போதே பசு ஒன்று வெருண்டு ஓடிவந்து மணமகனை முட்டியது. அதனால் அவன் இறந்தான். இந்தக் காட்சியைப் பரஞ்சோதியார்,

''மணமகனே பிணமகனாய்,மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலி
யாய்க்கழியக்
கணபதனிற் பிறந்திறும்இக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவர் ; (உணர்வு) ஒன்றுமிலார்க்
கொன்றுமிலை !''

[*பறை*-வாத்தியம். *அணியிழையார்*-அழகிய ஆபரணங்களை அணிந்த பெண்கள். *காயத்தின்*-உடலின். *பயனை*-மறுமைப் பயனை. *உணர்வுடையார்*-அறிவு உள்ளவர்கள்.]

என்று பாடிச் சிறந்த அறிவுரையை நமக்குக் கூறியுள்ளார்.

பாண்டியனும் வேதியனும் உள்ளம் தெளிந்து மீண்டனர். அந்தணன் தன் செயலுக்கு வருந்தினான். அரசன் அவனுக்கு வேண்டிய பொருள் கொடுத்து, மீண்டும் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறியனுப்பினான்; வேடனைச் சிறையிலிருந்து நீக்கி, தான் செய்த கொடிய தண்டத்தைப் பொறுத்துக்கொள்ளுமாறு வேண்டினான்; அவ்வேடனுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து அவனையும் அனுப்பிவிட்டான்; பின்பு திருக்கோயிலை அடைந்து, 'எம்பெருமானே, அடியேனுக்காகப் பழி அஞ்சும் நாதராக இருந்தீர்' என்று துதித்து, உலகில் உள்ள உயிர்களுக்கு உயிராக இருந்து அரசியற்றினான்.

26. மாபாதகம் தீர்த்த படலம்

குலோத்துங்க பாண்டியன் காலத்தில் அவந்தி நகரத்தில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் மனைவி மிகவும் அழகாயிருந்தாள். அவளுக்கு ஒரு கொடிய பாவி மகனாகப் பிறந்தான். அவன் தன் மாதாவைக் கலந்தொழுகும் ஒரு காமப் பித்தன். அவன் செயலை ஒரு நாள் அவன் தந்தையே நேரில் கண்டதால், அவரை அவன் மண்வெட்டியால் வெட்டிக் கொன்றான். அன்று இரவு தன் தாயோடு அவன் ஒரு காட்டில் நுழைந்தான். அங்கு அவன் பொருளையும், அவன் தாயையும் கள்வர்கள் கவர்ந்து சென்றனர். அவனைப் பிதுர்கத்தி தோஷம் பிடித்துக்கொண்டது. அதனால் அவன் அமைதியும் உற்சாகமுமின்றி அங்குமிங்கும் அலைந்தான். அவன் பட்ட துன்பங்களுக்கு அளவேயில்லை.

உலகெங்கும் பல நாள் அலைந்து, தனது மாபாதகம் நீங்கும் நாள் அணுகியதால் அவன் மதுரையை அணுகினான். அப்போது சோமசுந்தரக் கடவுள் வேட வடிவம் கொண்டு, வேட்டுவச்சி வடிவுடனிருந்த மீனாட்சியம்மையாரோடு திருக்கோபுரத்தின் பக்கத்தில் சூதாடிக் கொண்டிருந்தார். சிவபெருமான் அவ்விடத்தை நோக்கி வந்த பாதகனைப் பார்த்து உமாதேவியாரை நோக்கி, 'ஒருவரும் மனத்தால் நினைப்பதற்கும் அரிய கொடிய பாவி அதோ வருகிறதைப் பார்' என்று கூறிக் காமத்தால் உண்டாகும் துன்பங்களை,

> "காமமே கொலைகட் கெல்லாம்
> காரணம்; கண்ணோ டாத
> காமமே களவுக் கெல்லாம்
> காரணம் கூற்றம் அஞ்சும்
> காமமே கள்ளுண் டற்கும்
> காரணம்; ஆத லாலே
> காமமே நரக பூமி
> காணியாக் கொடுப்ப!' தென்றான்"

[கண்ணோடாத - தாட்சண்யமில்லாத கூற்றம் - இயமன். காணியா - காணியாட்சி ஆக.]

என்றவாறு எடுத்துரைத்தார்.

சிவபெருமான் திருநோக்கத்தினால் அந்தப் பார்ப்பனனின் பாவம் சிறிது நீங்கித் தன்னறிவு தோன்றிற்று. சிவபெருமான் அவன் செய்திகளைக் கேட்டு அப்பாவம் எளிதில் நீங்குமாறு ஓர் உறுதியைக் கூறினார். அவர் அவனைப் பார்த்து, 'நீ கையில் பிச்சை எடுத்து ஒருபொழுதுமட்டும் உண்ணவேண்டும்; சிவனடியார்களுக்குச் சேவை செய்யவேண்டும்; சூரியன் உதிப்பதற்கு முன் எழுந்து பசுமையான அறுகம்புல்லைப் பறித்து பசுக்களுக்குக் கொடுக்கவேண்டும்; தினந்தோறும் முக்காலத்திலும் திருக்கோயில் புறத்தொட்டித் தீர்த்தத்தில் நீராடவேண்டும்; பின்னர் சிவபெருமானை நூற்றெட்டு முறை அங்கப் பிரதிட்டை செய்யவேண்டும். இவ்வழியால்தான் உன் மாபாதகம் நீங்கும்' என்று கூறினார். இங்ஙனம் கொடிய பாவிகளுக்கும் உய்யும் வகை அருளிய சிவபெருமானை மீனாட்சியம்மையார் வியந்து பாராட்டினார். பின்னர் இருவரும் மறைந்தருளினார்கள். அக்கொடியோன் சிவபெருமான் கூறியவாறே செய்து பேரின்பப் பெருங்கடலில் மூழ்கினான்.

27. அங்கம் வெட்டின படலம்

குலோத்துங்கன் ஆட்சியில் மதுரையில் வடநாட்டு முதியோன் ஒருவன் மக்களுக்கு வாட்பயிற்சி தந்து வாழ்க்கை நடத்தி வந்தான். அவன் மாணவர்களுள் சித்தன் என்பவன் தன் விதிப்பயனால் அவ்வித்தையை நன்கு பயின்று, தன் ஆசிரியனுக்கு மாறாகத் தானும் ஒரு வித்யாகூடம் ஏற்படுத்தித் தன் ஆசிரியரை விட மிகுந்த செல்வம் பெற்று வந்தான். அவரிடத்தில் கற்கும் மாணவர்களை அவன் தன்பால் வரும்படி மனத்தை மயக்கித் தூண்டினான்; அன்றியும் குருவின் மனைவியையும் கற்பழிக்க முயன்றான். கற்பின் திலகமாகிய அவ்வம்மையார் சித்தன் செய்த செயலைத் தன் கணவனுக்கு வெளிப்படுத்தாமல் தம் உள்ளத்தே அடக்கி, தம் உயிருக்குயிராகிய சோமசுந்தரக் கடவுளை எண்ணி மனம் உருகினார்.

சோமசுந்தரக் கடவுள் அந்த மூப்படைந்த வாள் ஆசிரியனாக வேடங்கொண்டு சித்தனை அடைந்தார். அவர் அவனைப் பார்த்து, 'காளையாகிய நீயும் கிழவனாகிய நானும் வாட்போர் புரிந்து நம் வலிமையை அறியலாம். பட்டணத்தின் புறத்திலே நாளை நீ வருவாயாக. நாமும் அவ்விடம் வருவோம்' என்று கூறினார். சித்தன் அதற்கு மனமுவந்து உடன்பட்டான்.

மறுநாள் இருவரும் குறித்த இடத்தில் சந்தித்தனர். வாட்போரைக் காண வெள்ளம்போல் மக்கள் கூட்டம் திரண்டு வந்திருந்தது. இருவருக்கும் இருபது நாழிகை நேரம் வாட்போர் நடந்தது. பின்னர் சிவபெருமான் எல்லோருக்கும் கேட்குமாறு, "உன் குரு மனைவியை நினைத்த நெஞ்சையும், குறித்துப் பேசிய நாவையும், அவளைத் தொட்ட கையையும், பார்த்த கண்களையும் காப்பாற்றிக் கொள்" என்று கூறிக் கூறி அந்த உறுப்புக்களை எல்லாம் துண்டித்து முடிவில் தலையையும் வெட்டி வீழ்த்திவிட்டு மறைந்தருளினார்.

இச்செயலைப் பரஞ்சோதியார் சுவைபட,

"'குரத்தியை நினைத்த நெஞ்சைக்
குறித்துரை நாவைத் தொட்ட
கரத்தினைப் பார்த்த கண்ணைக்
காத்தனை கோடி' என்றென்(று)
உரைத்துரைத்(து) அவற்றுக் கெல்லாம்
உறுமுறை தண்டஞ் செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித்
திருவுரு மறைந்து நின்றான்."

[குரத்தி - ஆசிரியர் மனைவி. உறுமுறை - தகுந்தபடி. தடிந்து - வெட்டி. வீட்டி - வீழ்த்தி.]

என்று பாடியுள்ளார்.

வாட்போரைப் பார்த்திருந்த மாணவர்களுள் சிலர் அங்குத் தம் ஆசிரியரைக் காணுமல் அவர்தம் இல்லம் சென்றனர். அங்குச் சித்தருடன் போர் புரிந்தவர் தம் ஆசிரியர் அல்லர் என்றும், அஃது சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடல் என்றும் யாவரும் அறிந்து துதித்தனர். அரசன் வாளாசிரியனுக்குப் பலவகைச் சிறப்புக்களைச் செய்தான்.

28. நாகமெய்த படலம்

குலோத்துங்க பாண்டியனுக்குப் பின்னர் அனந்தகுண பாண்டியன் என்பவன் பட்டத்துக்கு வந்தான். அவன் திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து (பஞ்சாட்சரம்) என்னும் மூன்றுமே மெய்ப்பொருள்கள் என்று தெளிந்து, அவற்றில் மிகுந்த பக்தியுடையவனாக இருந்தான். அவனால் பாண்டிய நாடெங்கும் சைவ சமய நெறி தழைத்து ஓங்கியது. அதனை உணர்ந்து எண்ணாயிரம் சமணர்களும் பாண்டியனைக் கொல்ல ஒரு காத அளவில் ஒரு யாகம் செய்தார்கள். அந்த யாகக் குண்டத்திலிருந்து தோன்றிய ஒரு

கொடிய அரக்கனைப் பாண்டியனையும், மதுரையையும் விழுங்கி வருமாறு ஏவினார்கள்.

அந்த அசுரன் வானத்தையும் தொடுகின்ற ஒரு பெரிய நச்சுப் பாம்பாக வேடங்கொண்டு. உலகமெல்லாம் நடுநடுங்குமாறு மதுரையின் மேற்குத் திசையில் வந்து சேர்ந்தான். பாண்டியன் அதனையறிந்து முன்னர் யானையை விட்டவர்களே இப்போது இந்த நாகத்தை அனுபபி இருக்கவேண்டுமென உணர்ந்து, சோமசுந்தரப் பெருமானைத் தியானித்தான்.

பின்பு, பாண்டிய மன்னன் ஈசனின் அனுமதி பெற்று, மதுரையின் மேற்கு வாயிலை அடைந்து, அந்நாகத்தைப் பார்த்தான். பாம்பாகிய அசுரன் பல்லை அதுக்கி எட்டுத் திக்கும் அதிரும்படி சீறினான். பாண்டிய மன்னன் இறைவனைத் தியானித்துக்கொண்டே அர்த்த சந்திர பாணமொன்றை ஏவி அப்பாம்பைத் துண்டித்தான். அசுரன் இறக்கும்போது ஆலகால வெள்ளம்போல் நஞ்சைக் கக்கினான். அதனால் நகர மக்கள் யாவரும் நிலை தளர்ந்தனர் ; தலை தடுமாறினர் ; உரை குழறினர். சோமசுந்தரப் பெருமான் பாண்டியனின் வேண்டுகோளுக்கு இணங்கித் தம் சடையில் உள்ள பிறைச்சந்திரனின் அமுதத்தில் சிறிது துளியைச் சிந்தினார். அத்துளி பாவில் பிறை ஊற்றப்பட்டது போல நகர முழுவதும் பரவி, முன்போலவே மதுரை நகரமாக விளங்கும்படிச் செய்தது.

29. மாயப்பசுவை வதைத்த படலம்

அனந்தகுண பாண்டியன், தாம் அனுப்பிய பாம்பைத் துணித்தமை கண்டு, அதன்பின் வந்த சமணர்கள் காற்றினால் தள்ளுண்ட மேகங்கள் போலக் கலங்கி ஓடினார்கள் ; பின்னர் எல்லோரும் ஓரிடத்தில் கூடினார்கள் ; பாண்டியன் பசுவுக்கு ஊறு செய்யமாட்டான் என்று எண்ணி, முன்போலவே அபிகார யாகம் செய்தார்கள். ஓமகுண்டத்திலிருந்து ஓர் அசுரன் பசு வடிவில் தோன்றினான். அப்பசு இடிபோல் ஆரவாரித்துக் கொண்டு மதுரையை நெருங்கிற்று.

சிவபெருமான் பாண்டியனுக்கு அருள் புரிய விரும்பி தம் இடபத்தை அனுப்பிச் சமணர்கள் விடுத்த பசுவை வென்று வருமாறு கட்டளையிட்டார். அவ்விடபம் இரு கண்களிலும் நெருப்புப்பொறி பறக்குமாறு புறப்பட்டது. சமணர்கள் எண்ணியபடி அக்காளை, பசுவுக்கு இடையூறு ஒன்றும் புரியவில்லை ; அது தன் பேரழகினைக் காட்டி நின்றது. அதன் அழகில் மயங்கிய பசு வீரியத்தை விடுத்து விழுந்து மலை வடிவாக நின்றது. இடபம் உலகத்தாருக்குச் சான்றாக தன் பருவுடலை அங்கே இடப மலையாக இருத்தி நுண்ணுடலோடு இறைவனை அடைந்தது.

இராமபிரான் இலங்கைக்குச் சென்றபோது இலக்குவன், அநுமன், சுக்கிரீவன் முதலானவர்களோடு இவ்விடப மலையில் தங்கி, அகத்திய முனிவரால் மதுரையின் பெருமையை அறிந்து வழிபட்டார். இராவணனை வென்று திரும்பும்போதும் சேதுவில் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார். அதனால் பிரமகத்தியிலிருந்து நீங்கி மீண்டும் சோமசுந்தரப் பெருமானை வணங்கி அயோத்தி நகரை அடைந்தார்.

30. மெய்க் காட்டிட்ட படலம்

அனந்தகுண பாண்டியன் தன் மகனாகிய குலபூடண பாண்டியனுக்குப் பட்டம் கட்டித் தான் சிவபதவியடைந்தான். குலபூடணனுக்குச் சுந்தர சாமந்தன் என்னும் சேனாதிபதி ஒருவன் இருந்தான். அவன் சிவனடியாரையே சிவன் எனக் கருதி வழிபடும் செந்நெறியில் ஒழுகி வந்தான்.

ஒருசமயம் சேதிராயன் என்னும் வேடர் தலைவன் பாண்டியன் மேல் படையெடுக்கக் கருதினான். அதனையுணர்ந்த பாண்டியன் மேலும் பல சேனைகளைத் திரட்டுமாறு தன் பொன்னறை முழுவதும் திறந்து வைத்தான். சுந்தர சாமந்தன் அச்செல்வம் முழுவதும் சிவனடியார் பொருட்டும் திருக்கோயிலில் திருக்கோபுரம், ஆயிரக்கால் மண்டபம் போன்ற அமைப்புக்கும் செலவழித்து விட்டான். எனினும் சேனை திரட்டுவதுபோலவே பாவனைகள் புரிந்து வந்தான். பல நாட்களாக ஓலையெழுதப்பட்ட ஊர்களிலிருந்து சேனைகள் ஒன்றும் வரவில்லை. அரசன் தளபதியாகிய சுந்தர சாமந்தனை அழைத்து, 'நாளை சூரியன் மறைவதற்குள் சேனைகள் எல்லாம் வர வேண்டும்' எனறான்.

சுந்தர சாமந்தன் செய்வது இன்னதென்று அறியாமல் சோமசுந்தரப் பெருமானை வேண்டினான். மறுநாள் சேனையுடன் வருவதாக அசரீரி தோன்றிற்று. மறுநாட் காலையில் சிவபெருமான் சங்குகன்னர் முதலிய முதற்கணங்களும், குண்டோதரர் முதலிய பூதவீரர்களும் சேனை வடிவம் கொண்டு பலவகைப் படைகளாகி, தம் இடபத்தையே குதிரையாக்கி, அதன்மேல் ஏறிச் சேவகராய் வந்தார். பாண்டியன் மனமகிழ்ந்தான். சுந்தர சாமந்தன், தன கைப்பிரம்பால் சுட்டிக் காட்டி, "மன்னர் மன்னரே, இவர்கள் குருநாட்டார்; இவர்கள் கங்க நாட்டார்; இவர்கள் கன்னட நாட்டார்" என எல்லாப் படைகளையும் ஒவ்வொன்றாக மெய்க் காட்டி அறிவித்தான். அச்சேனையில் தொலைவில் இருந்த குதிரைச் சேவகரைப் பார்த்துப் பாண்டியன், 'இவர் யார்?' என்றான். சேனாதிபதி, 'இச்சேனை வெள்ளத்தில் இவரை யார் என்று அறிவது?' என்றான். பாண்டியன் அந்த ஒற்றைச் சேவகரைத் தன் அருகில் வரவழைத்து, இரத்தினாபரணங்களும் பட்டாடைகளும்

அளித்தான். ஒற்றைச் சேவகனாக வந்த சிவபிரான் தம் அன்பனாகிய சுந்தர சாமந்தன் பொருட்டு அவற்றை வாங்கி அணிந்தார்; தம் சுற்றத்தார்களுக்கும் கொடுத்தார்; பின்னர் தம் குதிரையை ஐங்கதி நடத்திக் காட்டிச் சேனை வெள்ளத்தில் நுழைந்தார்.

அச்சமயம் ஒற்றனொருவன் பாண்டியனிடம் ஓடிவந்து, 'சேதிராயன் வேட்டைக்குச் சென்று புலியால் கொல்லப்பட்டான்' என்று தெரிவித்தான். பாண்டியன் மனமகிழ்ந்து சுந்தர சாமந்தனுக்குப் பலப்பல வரிசைகளும் தலைமையும் கொடுத்துப் பாராட்டினான். பின்னர் சுந்தர சாமந்தனை நோக்கி, 'வந்த சேனைகளை அவரவர் ஊருக்குப் போகுமாறு செலுத்துக' என்றான். சிவபெருமான் தம் கணங்களோடு அங்கிருந்தபடியே மறைந்தருளினார். பாண்டியனுக்கு உண்மை புலப்பட்டது. அவன் சுந்தர சாமந்தனைப் பாராட்டினான்; இறைவர் திருவிளையாடலை எண்ணி எண்ணி அன்பு வடிவமானான்.

31. உலவாக் கிழி அருளிய படலம்

குலபூடண பாண்டியன் சோமவார விரதம் கொண்டாடியது போல் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினான். அந்தச் செருக்கினால் அவன் தன் நாட்டில் வாழ்ந்த அந்தணர்களை அவமதித்தான். அதனால் மழை வளங்குறைந்தது; பஞ்சம் நிறைந்தது. அவன் நாட்டில் வாழ்ந்திருந்த பிராமணர்கள் ஏழைகள் ஆகி வெளியூர்களுக்கு ஏகினார்கள். நாட்டுக் குடிகள் பசித்துன்பத்தால் பரிதவித்தார்கள்.

அதுகண்ட பாண்டியன் மனம் இரங்கி, பஞ்சத்தைத் தீர்த்தருளுமாறு சோமசுந்தரப் பெருமானை வேண்டினான். சிவபெருமான் பாண்டியன் கனவில் தோன்றி, 'மன்னனே! அன்பும் நீதியும் நிறைந்த நின்பால் ஒரு குறையுள்ளது. உன் நாட்டில் யாகம் குன்றியது; வேதமே தமது செங்கோலாகும்; வேதமே நமக்கு எல்லாமாகும். வேதங்களுக்கு உறுதியான அந்தணர்களை நீ அவமதித்தாய். அதனால்தான் மழை பெய்யாமல் பஞ்சம் வந்தது. இனி வேதங்களைக் காத்து, அறங்கள் பலவற்றையும் பெருக்கி வாழ்வாயாக. நாம் உனக்கு ஓர் உலவாக் கிழி தருகிறோம். இந்தக் கிழியிலிருந்து எவ்வளவு பொன் எடுத்துச் செலவிட்டாலும் குறையாது. இதனால் உன் நாட்டின் வறுமையை நீக்குவாயாக' என்று சொல்லி, ஒரு கிழியையும் அவன் பக்கத்தில் வைத்து மறைந்தார்.

பாண்டியன் விழித்தெழுந்து, அந்த உலவாக் கிழியைச் சிவபெருமானாகவே பாவித்துச் சிம்மாசனத்தேற்றி வழிபட்டான்; பின்னர் அதனைப் பொதி நீக்கி எடுத்துப் பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் செலவிட்டான்; அப்பொதியிலிருந்த பொன்னாலே

பாண்டியன் சோமசுந்தரரின் விமானம், மீனாட்சியம்மையின் விமானம் முதலியவைகளை அழகாக வேய்ந்தான். பாண்டிய நாட்டில் அளகாபுரிபோல் செல்வம் தழைத்து ஓங்கியது. பலவகை அறிஞர்களும் நாட்டில் நிறைந்து விளங்கினார்கள். பாண்டிய நாடு பண்டுபோல் பலவளம் நிறைந்து விளங்கியது.

32. வளையல் விற்ற படலம்

ஒருசமயம் தாருகா வனத்தில் வாழ்ந்த முனிவர்களின் மனைவியருடைய கற்பை அளந்து காட்டச் சிவபெருமான் திருவுளம் கொண்டார். கௌபீனமும், விபூதிப் பூச்சும் உடைய பிட்சாடன வடிவம் கொண்டு அவர் தாருகா வனத்தை அடைந்தார். அவருடைய திருச்சிலம்பொலியும், தமருக ஒலியும் கேட்ட முனிவர்களின் மனைவியர் பிச்சையிடுவதற்காக வெளியே வந்தார்கள். வந்தவர்கள் அவர்தம் பேரழகில் மயங்கினார்கள். காமம் மிகுந்து அவர்களுடைய கூந்தல் சோர, புடவை அவிழ, வளையல் கழல மெய்ம் மறந்து நின்றார்கள். சிவபெருமான் அவர்களை அவ்வாறே காம மயக்கத்தில் ஆழ்ந்திருக்கச் செய்து மறைந்தருளினார்.

முனிவர்கள் தங்கள் மனைவியரின் நிலைகண்டு. நடந்த நிகழ்ச்சியை அறிந்து அவர்களை மதுரை நகரத்து வைசியப் பெண்களாகப் பிறக்குமாறு சாபம் இட்டனர். அப்பெண்மணிகள், தங்கள் சாபம் எப்போது நீங்குமெனக் கேட்டதற்கு முனிவர்கள், ' அம்மதுரை நகரில் சோமசுந்தரக் கடவுள் வந்து உங்கள் கைகளைத் தொடும் போது இச்சாபம் நீங்கும் ' என்று கூறினார்கள்.

முனிவர்களின் சாபம் பலித்தது. அவர்தம் மனைவியர் மதுரை நகரில் வைசியப் பெண்களாய்ப் பிறந்து வளர்ந்து வந்தனர். அவர்களுடைய பெதும்பைப் பருவத்தில் சிவபெருமான் வளையல் விற்கும் வணிகராகி வைசிய வீதிக்குச் சென்றார். வைசியப் பெண்கள் அவர் பேரழகில் மயங்கினார்கள். வணிகர் அவர்கள் கைகளில் வளையல் இட்டுவிட்டு மறைந்தருளினார். மறைந்தவர் யாவரும் காணுமாறு திருக்கோயில் விமானத்து உள்ளொளியாகிய திருவுருவாய்த் தோன்றியருளினார். வளையல் விற்றவர் சோமசுந்தரக் கடவுளே என அறிந்து அனைவரும் வியந்து மகிழ்ந்து துதித்தனர். சிவபெருமான் திருக்கரம் பட்டதால் வைசியப் பெண்கள் யாவரும் கருக்கொண்டு, வீரமும் தீரமும் வாய்ந்த நன்மக்களைப் பெற்று சில நாள் வாழ்ந்து சிவலோகம் அடைந்தார்கள்.

33. அட்டமாசித்தி உபதேசித்த படலம்

சிவபெருமான் திருக்கயிலாய மலையில் ஆலமர நிழலில் இருந்தார். உமாதேவியார் அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். எம்பெருமான் சிவகணத்தவர்க்கும், முனிவர்

கட்கும் சில தருமங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் முருகப் பெருமானுக்குப் பால் கொடுத்த இயக்கப் பெண்கள் அறுவரும் வந்து, 'ஐயனே! அடியேங்களுக்கு அட்டமாசித்திகளை உபதேசித்தருளவேண்டும்' என்று வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, 'நீங்கள் பார்வதியைச் சிந்தித்தால் அவற்றை அருளுவாள்' என்று எட்டுச் சித்திகளை அவர்களுக்கு உபதேசித்தார். அவர்கள் ஊழ்வினையால் அவற்றை மறந்தார்கள். இதனால் சிவபெருமான் சினங்கொண்டு அவர்களை பட்டமங்கை என்னும் தலத்தில் ஆலமரத்தடியில் கருங்கல்லாகுமாறு சபித்து, பின்னர் ஆயிரம் வருடம் கழித்துத் தாம் வந்து பழைய உருவம் தந்து, அட்டமாசித்திகளையும் உபதேசித்தருளுவதாகக் கூறினன்.

இயக்கியர் அறுவரும் பட்டமங்கையில் ஆலமரத்தினடியில் கருங்கல்லாய்க் கிடந்தார்கள். ஆயிரம் வருடங்கள் சென்றன. சோமசுந்தரக் கடவுள் ஓர் ஆசாரிய வடிவம் கொண்டு அக்கருங்கற்களின் மீது அருள் நோக்கம் செலுத்தினர். உடனே அக்கற்கள் பழைய வடிவம் கொண்டன. இயக்கிமார் அறுவரும் ஆசாரியரை வணங்கினர்கள். ஆசாரியர் அவர்கள் தலைமீது கைவைத்து, எட்டுச் சித்திகளையும் உபதேசித்தார். இயக்கிமார் அறுவரும் உமாதேவியாரைத் தியானித்துத் திருக்கைலை மலையை அடைந்தார்கள்.

34. விடையிலச்சினை இட்ட படலம்

காஞ்சிபுரத்தில் காடு வெட்டிய சோழன் என்பான் ஒருவன் சிவநெறி போற்றும் செல்வனாய் வாழ்ந்து வந்தான். அவன் மதுரைச் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலைக் கேள்விபபட்டு அவரைத் தரிசிக்க விரும்பினன். சிவபெருமான் அவன் கனவில் தோன்றி, 'அன்பனே! நீ உருவம் மாறித் தனித்துச் செல்' என்றார். இறைவன் கட்டளைப்படியே சோழ மன்னன் தனியே நடந்து வையைக் கரையை அடைந்தான். அந்நிலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது கண்டு அவன் உள்ளம் கலங்கினன்.

அப்போது சிவபெருமான் ஒரு சித்தராக வேடம் கொண்டு வந்து வையை நதியை வற்றுமாறு செய்தார்; பின்னர் சோழ மன்னனை அழைத்துச் சென்று, 'பொற்றாமரைக் குளத்தில் குளிக்கச் செய்வித்துத் திருக்கோயிலில் சென்று தம்மையும் மீனட்சியம்மையையும் வணங்குவித்தார். சோழன் வந்த செய்தியினைப் பாண்டியன் அறியின் இடையூறு உண்டாகுமென்று உணர்ந்த சித்தசுவாமி, அவனை வடக்கு வாயிலின் வழியாக விடுத்து, கதவைப் பூட்டி இடபக் குறியிட்டுத் தம் திருக்கோயிலில் எழுந்தருளினர்.

மறுநாள் வடக்குவாயிற் கதவில் தன் கயற் (மீன்) குறிக்கப் பதிலாக இடபக் குறி இட்டிருப்பதைக் கண்டு பாண்டியன் ஐயங்

கொண்டான். அன்று அவன் உணவும் கொள்ளாமல் உறங்கலானான். சிவபெருமான் அவன் கனவில் தோன்றி, நடந்ததைக் கூறி ஐயம் நீக்கினார்.

பாண்டியன் விழித்தெழுந்தான்; இறைவன் கருணையை எண்ணி எண்ணி இன்ப வெள்ளத்தில் மூழ்கினான்; இத்திருவிளையாடலை அனைவருக்கும் கூறி எல்லோரையும் இன்ப வெள்ளத்தில் திளைக்குமாறு செய்தான்; பின்னர் தன் மைந்தனாகிய இராசேந்திர பாண்டியனிடம் தன் அரசை ஒப்படைத்துவிட்டுச் சிவபதவி அடைந்தான்.

35. தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்

இராசேந்திர பாண்டியன் காலத்தில் காடு வெட்டிய சோழன் சோமசுந்தரப் பெருமானை வெளிப்படையாகச் சென்று வழிபட எண்ணினான்; பாண்டியனைத் தன் நண்பனாகக் கொள்ளின் இவ்வெண்ணம் நிறைவேறுமென்று கருதிப் பாண்டியனுக்குப் பல வரிசைகளை அனுப்பினான்; அவனுக்குத் தன் மகளைக் கொடுப்பதற்கும் உடன்பட்டான். ஆனால் இராசேந்திரன் தம்பியாகிய இராசசிங்கன் ஒரு சூழ்ச்சி செய்தான். தன் அண்ணனுக்குப் பேசப்பட்ட பெண்ணைத் தானே மணந்து காடு வெட்டிய சோழனின் மருமகன் ஆனான்.

காடு வெட்டிய சோழன் பாண்டிய நாட்டைத் தன் மருமகனுக்கு உரிமையாக்க விரும்பி மதுரையை நோக்கிப் படையெடுத்து வந்தான். நண்பனே தனக்கு பகைவனாகி வருவதை அறிந்த பாண்டியன், சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டு வருந்தினான். எல்லாம் வல்ல பெருமான், அசரீரியாக நின்று, ''பாண்டியனே! நீ நாளை உன் படையோடு சென்று சோழனை எதிர்க்கக்கடவாய்; வெற்றி உனக்கே கிட்டுமாறு செய்வோம்'' என்றார்.

மறுநாள் பாண்டியனும் சோழனும் கடும்போர் புரிந்தார்கள். பாண்டியனின் சேனை சிறியதாயினும் சிவபெருமான் திருவருளால் ஒன்று பலவாக மாறிப்போரிட்டது. உச்சிவேளை வந்தது; கடும் வெயிலால் இருபடை வீரர்களும் நீர் வேட்கை மிகுந்து வருந்தினர். அப்போது சோமசுந்தரப் பெருமான் பாண்டியனின் படை நடுவில் ஒரு தண்ணீர்ப் பந்தலைப் பரப்பினார்; அங்கு ஒரு தவசியாக வந்து ஒரு கெண்டியைத் தாங்கி வீரர்களின் நீர் வேட்கையை நீக்கினார்.

நீர் பருகி இளைப்பு நீங்கிய பாண்டியனின் வீரர்கள் சோழன் படை வீரர்களை வென்று சோழனையும் அவன் மருமகனையும் சிறைப் பிடித்துவந்து பாண்டியன் முன்னர் நிறுத்தினர். பாண்டியன் சோழனைத் தண்டிக்காமல் பெருந்தன்மையோடு அவனுக்கு யானை

களும் குதிரைகளும் ஆபரணங்களும் கொடுத்தனுப்பினன்; ஆனால், தன் தம்பியின் செருக்கு அடங்குமாறு அவன் செல்வங்களில் சிலவற்றை மாற்றி, அவனை வேருக ஒதுக்கி வைத்தான். பின்பு அவன் எல்லா உயிர்களையும் அன்னைபோல அன்புடன் காப்பாற்றி வந்தான்.

36. இரசவாதம் செய்த படலம்

பாண்டியன் நாட்டில் திருப்பூவணம் என்னும் சிவதலம் ஒன்று உண்டு. அங்கு திருக்கோயில் பணிபுரியும் உருத்திர கணிகையர்களுள் **பொன்னனையாள்** என்பவள் ஒருத்தி இருந்தாள். அவள் சிவபக்தியிலும் சிவனடியார் தொண்டிலும் சிறந்து விளங்கினுள்.

பொன்னனையாள் சிவபெருமான் திருவுருவை வார்ப்பிக்க விருப்பம் கொண்டாள்; அத்திருவுருவைக் கருவினுற் செய்தாள். நாடோறும் அவளுக்குக் கிடைத்த வருவாய் மகேசுவர பூசைக்கே போதுமானதாக இருந்தது. திருவுரு வார்ப்பிக்கப் பொருள் கிட்டாமல் அவள் வருந்தினுள்.

அன்பர்கள் வேண்டுவனவற்றை வேண்டியவாறே அளிக்கும் இறைவன் ஒருநாள் சித்தர் உருக்கொண்டு பொன்னனையாளின் இல்லத்தை அடைந்தார். அவள் சித்தரை அகமும் முகமும் மலர வரவேற்று வழிபட்டாள். அவரிடம் சிவபெருமானின் திருவுருவை வார்ப்பிக்க பொருள் இல்லை என்பதை முறையிட்டாள். சித்தராகிய சிவபெருமான், அவளை நோக்கி, 'பெண்ணே, உன் இல்லத்தில் உள்ள பித்தளைப் பாத்திரம், ஈயப் பாத்திரம் முதலிய எல்லாப் பாத்திரங்களையும் இங்கே கொண்டு வா' என்ருர். உடனே பொன்னனையாள் தன் வீட்டில் வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், பித்தளை, வெண்கலம் முதலிய உலோகங்கள் எல்லாவற்றையும் கொண்டுவந்து சித்தர் முன் வைத்தாள். சித்தர் அவற்றின்மீது திருநீறு சிதறி, பொன்னனையாளைப் பார்த்து, 'நீ இவற்றை இன்று இரவு நெருப்பில் இட்டு எடுத்தால் இவை பொன்னுக மாறுவதைக் காணலாம். அவற்றைக் கொண்டு சிவபெருமான் திருவுருவை வார்ப்பிக்கக் கடவாய்' என்று கூறி மறைந்தார்.

சித்தராய் வந்தவர் சிவபெருமானே என்று தெளிந்த பொன்னனையாள் துன்பம் நீங்கி இன்பம் அடைந்தாள். சித்தர் கூறியபடியே அவள் அவ்வுலோகங்கள் எல்லாவற்றையும் நெருப்பில் இட்டு பொன்னுக்கிச் சிவபெருமான் திருவுருவை வார்ப்பித்தாள். அவ்வுருவின் பேரழகைக் கண்டு களித்து, 'அழகிய பிரானே' என்று அதை முத்தமிட்டுப் பிரதிட்டை செய்தாள். பின்பு அவள் விழாக்கள் முதலியனவும் நடத்தினுள். சில ஆண்டுகள் கழிந்தபின் அவள் சிவலோகம் அடைந்தாள்.

37. சோழனை மடுவில் வீட்டிய படலம்

இராசேந்திர பாண்டியனுக்குப் பின்னர் அவன் குமாரன் இராசேச பாண்டியனும், இராசேச பாண்டியனுக்குப் பின்னர் அவன் குமாரன் இராச கம்பீரனும், இராச கம்பீரனுக்குப் பின்னர் அவன் மகன் பாண்டிவமிச தீபனும், அவனுக்குப் பிறகு அவன் மைந்தன் புரந்தரசித்தும், புரந்தரசித்துக்குப் பின்னர் அவன் குமாரன் பாண்டிவமிசபதாகனும், அவன் ஆண்ட பின்னர் அவன் குமாரன் சுந்தரேச பாதசேகரனும் மதுரையிலிருந்து செங்கோலோச்சினார்கள்.

சுந்தரேச பாதசேகரன் சிறிய படையையே வைத்திருந்து, அதன்பொருட்டுச் சிறிது பொருளையே செலவிட்டு, மிகுதியைக் கொண்டு சோமசுந்தரருக்கு முடி, கண்டிகை முதலிய இரத்தினாபரணங்களைச் செய்வித்தான்; கோபுரம் மாடம் முதலியவைகளில் இரத்தினம் வேய்வித்தான்.

பாண்டியனின் சேனைச் சுருக்கத்தை அறிந்து, ஆயிரம் பரிக்கோர் சேவகன் என்னும் சோழன் மதுரைமீது படையெடுத்து வந்தான். பாண்டியன் பரமனை வேண்டி அவர் ஆணைப்படி சோழனை எதிர்த்துப் போரிட்டான். இறைவன் திருவருளால் பாண்டியன் சேனை சோழன் கண்களுக்கு ஒரு பெரிய கடல்போலத் தோன்றியது. சோமசுந்தரப் பெருமானும் ஒரு வேட வடிவம்கொண்டு வேலாயுதம் தாங்கிச் சோழனுக்கு ஒரு யமன் போல நின்றார். இருவரும் கோபத்தோடு போர் புரிந்தனர். சோழன் அவர்தம் வேலாயுதத்துக்கு அஞ்சிக் குதிரையோடும் ஓடினான். பாண்டியன் சோழனைப் பின்தொடர்ந்து ஓடினான். சோழன் திரும்பிப் பார்த்தான்; வேடுவனைக் காணாமையால் திரும்பிப் பாண்டியனை எதிர்த்தான். பாண்டியன் பின்வாங்கி ஓடிவந்து மதுரையின் மேற்கில் உள்ள ஓர் ஆழமான மடுவில் வீழ்ந்தான். சோழனும் அவ்வாறே தானும் வீழ்ந்தான். பாண்டியன் சிவபெருமான் திருவருளால் எழுந்தான். சோழன் அந்த மடுவிலேயே ஆழ்ந்து இறந்தான். பாண்டியன் தன் செல்வங்களை இறைவனுக்கே படைத்து இன்புற்றிருந்தான்.

38. உலவாக் கோட்டை அருளிய படலம்

மதுரையில் வேளாளர் குலத்தில் அடியார்க்கு நல்லான் என்னும் ஒருவன் இருந்தான். அவனும் அவன் மனைவியாகிய தருமசீலையும் அடியார் பக்தியில் தலைசிறந்தவர்கள். அவர்கள் செல்வத்தில் சிறந்து விளங்கினார்கள்.

அடியார்க்கு நல்லான் பொருள் சுருங்கினலும் மனம் சுருங்க மாட்டான் என்னும் உண்மையை உலகத்துக்கு உணர்த்தும் பொருட்டு அவன் வறுமையடைய வேண்டுமென்று ஈசனர் திருவுளம் கொண்டார். அடியார்க்கு நல்லான் அங்ஙனமாகியும் கடன் வாங்கி மகேசுவர பூசை முதலியன செய்து வந்தான். அவனுக்குக் கடனும் கிடையாவண்ணம் இறைவன் தடை செய் தருளினர்.

அடியார்க்கு நல்லானும் அவன் மனைவியும் இறைவனை வேண்டிக் கடன் தரவல்லாரைக் காட்டாதொழியின் அப்போதே உயிரை விட்டுவிடுவதாகக் கூறினர். இறைவன், அவர்கள் வீட்டில் உணவுப் பொருள்களை எடுக்க எடுக்கக் குறையாத உலவாக் கோட்டை ஒன்றை அருளினர். அதனைக் கொண்டு அவன் அடிய வர்களை நன்கு போற்றி வந்தான்; செல்வத்தில் சிறந்து குபேரன் போல் வாழ்ந்து பின்பு தன் மனைவியோடும் சிவபதவியை அடைந்தான்.

39. மாமனாக வந்து வழக்கு உரைத்த படலம்

மதுரையில் தனபதி என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி சுசீலை. அவர்களுக்குப் புத்திரப்பேறு இல்லா மையால் தனபதி தன் தங்கை மகனையே புத்திரனாகக் கொண்டு வளர்த்து வந்தான். அவன் தன் மனைவிமேல் வைத்த ஆசையால் நாடோறும் தன் தங்கையுடன் தீராத சண்டையிட்டுக்கொண்டு வந்தான். ஒருநாள் அவள் சினங்கொண்டு, 'உனக்கு ஏன் இந்தப் பெருமிதம் (செருக்கு)? நீ பிள்ளையில்லாத பாவி! என் அருமைப் பிள்ளையினலன்றோ இருமைப் பயன்களையும் அடைவாய்?' என்றாள். அதுகேட்ட தனபதி நாணம் கொண்டு, அடுத்த பிறப்பிலாயினும் நான் மகப்பேறு பெறுவேன் என்று தன் செல்வம் எல்லாவற்றையும் மருமகனுக்கே உரிமையாக்கிவிட்டுத் தன் மனைவியோடு தவம்புரியக் காட்டுக்குச் சென்றான்.

தனபதி வருவதற்குக் காலம் தாழ்த்தமையால் தாயத்தார்கள் அவன் மருமகனுக்கு உரிமையாக்கியிருந்த செல்வங்கள் எல்லாவற் றையும் வல்வழக்குப் பேசிக் கவர்ந்துகொண்டார்கள். தனபதியின் தங்கை தாயத்தாரின் செயல் கண்டு தவித்தாள்; மதுரை நாயகன் திருமுன்னர் நின்று,

''ஒருத்திநான் ஒருத்தி கிந்த
ஒருமகன் இவனும் தேரும்
கருத்திலாச் சிறியன் வேறு
களைகணும் காணேன் ஐய!

அருத்திசால் அறவோர் தேறும்
அருட்பெருங் கடலே ! எங்கும்
இருத்திநீ அறியாய் போலும்
என்றுபார் படிய வீழ்ந்தாள்.''

[**தேறும்** – நன்மை தீமைகளை அறியும். **களைகண்** - ஆதரவு. **அருத்தி** – அன்பு. **பார்** - தரை.]
என்று முறையிட்டு வணங்கினாள்.

அவள் இவ்வாறு கூறிச் சிறிது அயர்ந்து தூங்கினாள். சோம சுந்தரர் அவள் கனவில் தோன்றி, 'பெண்ணே ! பொழுது விடிந்த பின் தாயத்தாரைத் தரும சபையில் ஏற்றி இருப்பாயாக. யாம் வந்து வழக்கினைத் தீர்த்து உன் பொருள்களை மீட்டுத் தருவோம்' என்றார்.

மறுநாள் விடியற்காலையில் தனபதியின் தங்கை தாயத்தார் களின் இருப்பிடத்தை அடைந்து, பலரும் கேட்க, அவர்களைப் பார்த்து,

'' அட்டில்வாய் நெருப்பி டேல்! ஓர்
அடியிடேல்! அறத்தா(று) அன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று
போகொட்டேன் ; பலரும் கேட்க
இட்டனன் அரசன் ஆணை
அறத்தவி(சு) ஏறி ஆன்றோர்
ஒட்டிய படிகேட்(டு) எங்கள்
உரிப்பொருள் தந்து போமின் !''

[**அட்டில்வாய்** - அடுப்பில். **அறத்து ஆறு** – தரும வழி. **பட்டிமை வழக்கு** - பொய் வழக்கு; **அறத்தவி சு** – தருமசபை. **ஆன்றோர்** – பெரியோர்கள். **ஒட்டியபடி** - ஆராய்ந்து கூறும் தீர்ப் பினைக் கேட்டு.]

என்று கூறினாள்.

தருமசபை கூடியது. தருமசபையில் எல்லோரும் வந்திருந் தார்கள். சோமசுந்தரக் கடவுள் தவமேற்சென்ற தனபதிபோலத் திருவுருவம் தாங்கி அங்கு எழுந்தருளினார். அவர் தருமசபையை நெருங்கும்போதே, 'இங்கு அரசன் இல்லையோ! ஆன்றோர்கள் இல்லையோ ! அரசனுடைய செங்கோல் கொடுங்கோலாயிற்றே ! வேத ஆகமங்களை அருளிய கடவுளும் இல்லையோ ! தருமமும் எங்கோ சென்று ஒளித்ததோ !' என்று சொல்லிக்கொண்டே தரும சபையினை அடைந்தார். அவர் மருமகனையும் தங்கையையும் தழுவிக் கொண்டு, 'அந்தோ ! அந்தோ ! வறியவர்களானீர்களே !' என்று வாய்விட்டுப் புலம்பினார். அவர்களும் தனபதியின் திருவடிகளில் விழுந்து அழுதார்கள்.

பின்னர் தனபதியார், பிள்ளையைப் பார்த்து,

"ஐம்படை மார்பிற் காணேன் ;
சிறுசிலம் படியிற் காணேன் ;
மொய்ம்பிடை மதாணி காணேன் ;
முகத்தசை சுட்டி காணேன் ;
மின்படு குழைகள் காணேன் ;
வெற்றுடல் கண்டேன் ; அப்பா !
என்பெறும் என்று பிள்ளைப்
பணிகளும் கவர்ந்தார் (என்ன)."

[**ஐப்படை** - பஞ்சாயுதம் என்னும் ஓர் ஆபரணம். **மொய்ம்பு** - தோள். **மாதணி** - தோளணி. **மின்படும்** - ஒளிவீசும். **என் பெறும்** - எவ்வளவு விலைபெறும்? **பணிகள்** - ஆபரணங்கள்.]

என்று சொல்லிப் புலம்பி அனைவரும் மனமிரங்கும்படி அழுதார் ; தங்கையையும் மைந்தனையும் முதுகைத் தடவி, 'வருந்தாதீர்கள் ; வஞ்சகர் வழக்குத் தோற்றுவிடும் ! பாருங்கள் !' என்றார்.

சபையார்கள் இருபக்கத்தாரின் வழக்கையும் கேட்டு நன்கு ஆராய்ந்து, 'தாயத்தார் வழக்குப் பொய் வழக்கு' என்றார்கள். அது கேட்டுத் தாயத்தார்கள், 'இவர் நம் தனபதிச் செட்டியார் அல்லர்' என்றார்கள். தனபதியார் கைகொட்டி நகைத்து அவரவர் குடிப் பெயரும் பட்டமும் காணியும், தந்தை, தாய், மாமன், மாமி, தாயத்தார், அவர்களைப் பெற்றவர், பிள்ளைகள், உடன் பிறந்தார், மனைவியர் என்பவர்களுடைய பெயர்களும் பிறவும் சிறிதும் தவறு இல்லாமல் குறிப்பிட்டார். பெருமக்கள், 'தனபதிச் செட்டியார் இவரே' என்றார்கள். உடனே தாயத்தார்கள், 'நம் வழக்குத் தோற்றது ; பாண்டியன் அறியின் நம்மைத் தண்டிப்பான்' என்று எண்ணி, 'வீட்டுக்குப் போய்வருகிறேன் ; குளத்துக்குச் சென்று வருகிறேன்' என்று ஒவ்வொரு வார்த்தை கூறிப் போய்விட்டனர். தருமசபையினர், தனபதி செட்டியாரின் செல்வமெல்லாம் அவர் புதல்வனுக்கே என்று தீர்ப்பு எழுதி அளித்தார்கள். தனபதியுருவம் கொண்ட சோமசுந்தரர் யாவரும் காண மறைந்தருளினார்.

சுந்தரேச பாதசேகர பாண்டியன் இச்செய்தி யறிந்து தனபதியின் மைந்தனுக்குப் பல பரிசுகள் வழங்கினன் ; திருக்கோயிலைப் பொன்னால் புதுப்பிவித்தான்.

40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்

சுந்தரேச பாதசேகர பாண்டியனுக்குப் பின்னர் அவன் மகன் வரகுணபாண்டியன் அரசனானன். ஒருநாள் அவன் வேட்டையாடச் சென்றபோது அவனது குதிரையின் கால் இடறி ஓர் அந்தணன்

இறந்தான். அதனல் அவனைப்பற்றியது பிரமகத்திப் பழி. ஆனல், அது, சோமசுந்தரக் கடவுளின் ஆணைப்படி, சோழமன்னன் ஒருவனுடன் அவன் போரிட்டு, அப்பகைவனைத் துரத்திக்கொண்டு திருவிடைமருதூர் திருக்கோயிலின்கீழ் வாயிலை அடைந்தபோது நீங்கிற்று. மன்னன் மீண்டும் அவ்வாயிலை அடையாமல் மேலைவாயில் வழியாக மதுரையை அடைந்தான்.

சிவபக்தியிற் சிறந்த வரகுணன் ஒரு சமயம் சோமசுந்தரரை வணங்கிச் சிவலோகத்தை நேரில் காணும் ஆசையை வெளியிட்டான். சிவபெருமான் அரசனின் ஆவலை நிறைவேற்றுமாறு நந்தி தேவருக்குக் கட்டளையிட்டார். நந்திதேவர் அவ்வாறே வரகுணனை அழைத்துக்கொண்டு, பற்பல நதிகளையும், ஓடைகளையும், பொற்றாமரைத் தடாகங்களையும், அகழையும், மதிலையும், திருக்கோபுரங்களையும், திருவீதிகளையும் கடந்து, பிரமபுரமும், விஷ்ணுபுரமும் நீங்கிச் சிவனடியார் திருக்கூட்டத்தைப் பிரம்பினல் சுட்டிக் காட்டினர்; அங்குப் பலவகையான சேவைகளைப் புரியும் அடியார்களைக் காட்டிய பின்னர் சிவபெருமான் திருமுன்னர் விடுத்தார். சிவபெருமானின் இருபக்கத்தும் வேதமும் சிவாகமும் வாழ்த்தின; தும்புரு நாரதர் இசை பாடினர்; தேவரம்பையர்கள் கூத்தாடினர்; விநாயகரும் சுப்பிரமணியரும் வீரபத்திரரும் வணங்கி நின்றனர்; பிரம விட்டுணுக்கள் கைகட்டி வாய் பொத்தி நின்றனர்; தேவர்கள் தங்கள் குறைகளை முறையிடச் சமயம் பார்த்திருந்தனர்; முனிவர்கள் 'அரகர சங்கர சிவ சிவ' என்று ஏத்தெடுத்தனர். இவ்வாறு சிவபெருமான் உமாதேவியாரோடு இரத்தின சிம்மாசனத்தின் மீது எழுந்தருளியிருப்பதைக் கண்டு வரகுணன் மனமகிழ்ந்து வணங்கினன்.

பின்னர் சோமசுந்தரப் பெருமான் அவ்வரகுண பாண்டியன் எதிரில் சிவலோகம் போய் முன்போல் மதுரை தோன்றச் செய்து தாமும் உமாதேவியாரும் முன்னே இருந்தது போலவே காட்சியளித்தார். இங்ஙனம் சிறப்புடைய மதுரை, பூலோக சிவலோகமெனப் பெரியோர்களால் புகழப்பட்டு விளங்குகிறது.

41. விறகு விற்ற படலம்

வரகுண பாண்டியன் காலத்தில் *ஏமநாதன்* என்னும் வடநாட்டு யாழ்ப்பாணன் ஒருவன் பலவகைச் சிறப்புக்களோடும் மதுரையில் வந்து தங்கி இருந்தான். பாண்டியனும் அவனுக்குப் பலவகையான வரிசைகள் செய்தான். அதனல் மகிழ்ந்து செருக்குற்ற ஏமநாதன் தன்னேடு இசைபாட வல்ல யாழ்ப்பாணர்கள் மதுரையில் வேறு ஒருவரும் இல்லை என்று இறுமாப்புக் கொண்டான். அதனை அறிந்த பாண்டியன் தன் அரண்மனைப் பாணனகிய *பாணபத்திரனை* அழைப்பித்து, 'நீ ஏமநாதனேடு இசை பாடுவாயோ?' என்ருன்.

அதற்குப் பாணபத்திரன், 'சோமசுந்தரர் திருவருளாலும் நின் கருணையினலும் ஏமநாதனை இசைப் போட்டியில் வென்று அவன் செருக்கை அடக்குவேன்' என்ருன். பாண்டியனும், 'நாளை பாடுக' என்று விடையளித்தனன்.

ஏமநாதனின் மாணவர்கள் கடைவீதிகளிலும் கவர்வழிகளிலும் இசைபாடித் திரிந்தார்கள். பாணபத்திரன் அவ்விசையைக் கேட்டு, வியப்புற்று, 'மாணவர்களுடைய இசைவன்மையே இங்ஙனம் இருந்தால், ஏமநாதன் பாடும் முறை எப்படியிருக்குமோ? அவனை வெல்வது எப்படி?' என்று ஏங்கி இறைவனைத் துதித்து விடு சென்ருன்.

அடியார்க் கெளியவராகிய சோமசுந்தரப் பெருமான் விறகு சுமையாளராக வேடம் பூண்டு ஏமநாதன் இருந்த வீட்டு வாயிலில் விறகுச் சுமையை இறக்கினர்; புறந்திண்ணையில் இருந்து, தம்மிடம் இருந்த யாழை மீட்டி இசை பாடினர். அதுகேட்டு ஏமநாதன் வெளியே வந்து, 'நீ யார்?' என்ருன். அதற்கு விறகுச் சுமையாளர், "நான் பாணபத்திரருடைய அடிமை. அவரிடம் இசை கற்கும் மாணவர் பலர். அவர்களுள் ஒருவனுகிய என்னை, 'நீ தசையொடுங்கி வயதில் மூத்தவன்; இசை கற்க நின்னல் இயலாது' என்று தள்ளிவிட்டார்; அதனல் இத்தொழில் பூண்டேன்" என்ருர். ஏமநாதன், 'அப்பா, நீ முன்பு பாடிய பண்ணை மீண்டும் ஒருமுறை பாடுவாயாக' என்ருன். விறகுச் சுமையாளர், யாழை இடத் தோளில் சாத்திச் சுருதி கூட்டி, பாடல் தொழில் குற்றங்கள் சிறிதுமின்றிச் சித்திரம்போல் இருந்து, ஊனையும் உள்ளத்தையும் உருக்குமாறு சாதாரிப் பண் பாடினர்.

அவ்வின்னிசையைக் கேட்டு மரங்களும் அசையாமல் நின்றன; கடலும் ஒலிக்கவில்லை; அருவிகளும் ஆறுகளும் புரண்டு துள்ளவில்லை. உயிர்கள் எல்லாம் சித்திரம்போல் அசைவற்றுக் கிடந்தன.

"தாமரை மலரில் உள்ள பிரமன் அவ்விறைவனின் திருவடித் தாமரையின்கீழ் உள்ளவனுனன்; பாற்கடலில் உள்ள திருமால் பேரின்பக் கடலில் உள்ளவனுனன்; இந்திரன் தனக்குக் கிடைத்த கண்களைப்போல் உடல்முழுவதும் செவிகள் பெற்றிலேனே" என்று வருந்தலானுன்.

இந்நிகழ்ச்சியைப் பரஞ்சோதியார்,

"போதுளான் பரமன் பாதப்
போதுளா னுனன்; வேலை
மீதுளான் பரமா னந்த
வேலைமீ(து) உள்ளா னுனன்;

தாதுளாம் கமலக் கண்போல்
சதமகன் 'உடலம் எல்லாம்
காதுளான் அல்லேன்' என்றான்;
கண்ணுளான் கானம் கேட்டு.''

[போது - தாமரை மலர். வேலை - திருப்பாற்கடல். சதமகன் - இந்திரன். கண்ணுளான் - நெற்றிக்கண் உடைய சிவபெருமான்.]

என்றும், இன்னிசையைக் கேட்டு மிருகங்களும் பறவைகளும் தத்தம் பகைகளை மறந்து மயங்கிய பான்மையை,

''பைத்தலை விடவாய் நாகம்
பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய்
வல்லியம் மருட்கை எய்தித்
தத்தம்மாறு அறியா வாகித்
தலைத்தலை மயங்கிச் சோர
இத்தலை மாவும் புள்ளும்
இசைவலைப் பட்ட அம்மா''

[பை - படம். மஞ்ஞை - மயில். நால்வாய் - தொங்கும் வாய். மத்தமான் - யானை. வல்லியம் - புலி.]

என்றும் பாடியுள்ளார்.

ஏமநாதனும் அந்த இசையில் மயங்கி இருக்க, பாணபத்திரனின் அடிமையாக வந்த சிவபெருமான் விறகு சுமையோடு மறைந்தருளினர்.

பின்னர் ஏமநாதன், 'பாணபத்திரனுல் தள்ளப்பட்ட இக் கிழவன் இசையே இவ்வாருயின், அவனுடைய இசை எவ்வாறு இருக்குமோ?' என்று நினைத்து இரவோடு இரவாக, தன்னுடன் வந்தவர்கள் ஆளுக்கு ஒரு வழியாகச் செல்ல, தானும் வடதிசை நோக்கி ஓடிவிட்டான்.

அன்றிரவு பாணபத்திரன் கனவில் சிவபெருமான் நிகழ்ந்ததை எடுத்துக் கூறினர். பாணபத்திரன், 'மூவுலகும் போற்றும் முதல்வனே, என் பொருட்டு நின் திருமுடி விறகு சுமந்ததோ?' என்று வருந்தித் துதித்து, வரகுணனை அடைந்தான். வரகுணன் நடந்த செய்தியெல்லாம் நன்கு அறிந்து பாணபத்திரனின் அன்பையும், சிவபெருமான் திருவருளையும், வியந்து புகழ்ந்து துதித்தான்; பாணபத்திரனுக்குப் பலவகையான ஆடை அணி வகைகளைக் கொடுத்துச் சிறப்பித்தான். அன்று தொட்டுச் சோமசுந்தரப் பெருமானைப் பாடுதலே கடமையாகக் கொள்ளுமாறு பாணபத்திரனுக்குப் பாண்டியன் கூறி அனுப்பினன்.

42. திருமுகம் கொடுத்த படலம்

வரகுண பாண்டியன் விருப்பப்படியே பாணபத்திரன் சோமசுந்தரப் பெருமானைக் குறித்து முப்போதும் இசை பாடி வேறு தொழிலில் ஈடுபடாத காரணத்தால் வறுமையடைந்தான். அதனால் சோம சுந்தரக் கடவுள் பாண்டியனின் பொன்னறையில் உள்ள செல்வங் களை ஒவ்வொன்றாகக் கவர்ந்து பாணபத்திரனிடம் சேர்ப்பித்து வருவாராயினர்.

சிலகாலம் சென்றபின் சிவபெருமான் ஒன்றும் கொடுக்கவில்லை. பாணபத்திரன் சுற்றத்தாரோடு மிக்க பசியினால் வருந்தினன்; பின்னர் அயர்ந்து தூங்கினன். சோமசுந்தரர் அவன் சொப்பனத் திலே தோன்றி, 'அன்பனே! இனியும் பாண்டியன் பொன்னறையி லிருந்து கவர்ந்து வந்தால் அவன் ஐயமுறுவான். பொன்னறைக் காவலாளர்க்கும் தண்டனை கிடைக்கும். எனவே, என்பால் நின் போல் அன்புடைய சேரமானுக்கு ஓலை எழுதித் தருவோம். அதனைக் கொண்டு சென்று, அவனிடம் தந்து பெருஞ்செல்வம் பெறுக' என்றார்.

அவர் எழுதிக் கொடுத்த திருமுகம் வருமாறு :

''மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிற(கு)
அன்னம் மயில்பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்(கு)
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்கும் சேரலன் காண்க!
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.''

[புரிசை - மதில். கொண்மூ - நீர்கொண்ட மேகம். செருமா- போர் செய்கின்ற குதிரை. தன்பால் - நின்னிடம்.]

இறைவன் அளித்த திருமுகத்தை ஏந்திய பாணபத்திரன் மலை நாடு நோக்கி நடந்தான். பாணபத்திரன் வருகையை அன்றிரவே சோமசுந்தரப் பெருமானால் கனவில் உணர்ந்த சேரமான் பெருமாள் நாயனர், அகமும் முகமும் மலர்ந்து பாணபத்திரனை வரவேற்றார்; அவனைத் தம் திருமாளிகைக்கு அழைத்துச் சென்று பலவாறு உபசரித்து ஆபரணங்களும், திரவியம், பொற்சிவிகை யும், பட்டாடைகளும், யானை குதிரை முதலிய பல பொருள்களை

யும் வாரி வாரி வழங்கினர். பாணபத்திரன் சேரமானிடம் விடை பெற்று மதுரையை அடைந்து, சோமசுந்தரப் பெருமானை வழிபட்டு அந்தணர்களுக்கும், புலவர்களுக்கும், ஏனையோர்க்கும் வேண்டுவன. வழங்கி மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

43. பலகை இட்ட படலம்

மூன்று வேளையிலும் சோமசுந்தரப் பெருமானை வழிபட்டு இசை பாடிய பாணபத்திரன் செல்வம் கிடைத்தபின் நள்ளிரவிலும் போய் வழிபட்டு இசை பாடி வந்தனன். ஒரு நாள் பெருமழை பெய்தது. அப்போதும் கடமை தவருத பாணபத்திரன் மழையில் நனைந்து வந்து இடப தேவருக்குப் பின் நின்று உடல் நனைந்து நடு நடுங்க, நரம்பு நனைந்து இசை மழுங்க, கால் சேற்றிலே புதைய நின்று இனிய இசையைப் பாடுவானாயினன். இங்ஙனம் பாடிய பாணபத்திரனின் அரிய பணியை வியந்து இறைவன் ஒரு பலகையை இட்டு, 'அன்பனே! இந்தப் பலகை மேல் நின்று பாடுக' என்று அசரீரியாக மொழிந்தார். பாணபத்திரன் இறைவன் ஆணைப்படியே பலகையில் நின்று இசை பாடினன்; பாடியபின் பலகையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றன். மழையும் நின்றது.

வரகுண பாண்டியன் நடந்த செய்திகளைக் கேள்வியுற்று, பாண பத்திரனை அப்பலகை மேல் நிறுத்தி, 'இவரே எங்கள் மதுரை நாயகர்' என்று பாராட்டி மணிக்கலன்களையும், விளைநிலங்களையும் பெருநிதிகளையும் வரிசையாக அளித்துச் சிறப்பித்தான். வரகுணன் அளித்த பரிசுகளைப் பெற்றுப் பாணபத்திரன் நான்கு காலமும் சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு வந்தான். சில நாட்கள் சென்ற பின் வரகுணன் சிவபதவியடைந்தான்.

44. இசைவாது வென்ற படலம்

வரகுண பாண்டியன் சிவபதவி அடைந்த பின்னர், அவன் மைந்தனாகிய இராச ராச பாண்டியன் அரியணை ஏறினன். அவன் காமக் கிழத்தியருள் ஒருத்தி இசையில் வல்லவள். அவளுக்கும் பாணபத்திரன் மனைவிக்கும் இசை பாடுவதில் பகைமை ஏற்பட்டது. அக்காமக் கிழத்தி, பாண்மகள் ஒருத்தியைப் பாட விட்டுப் பாணபத்திரன் மனைவியினது செருக்கினை அடக்க வேண்டும் என்று எண்ணினள். அதனைப் பாண்டியனிடம் அவள் தெரிவித்தாள்.

பாண்டிய மன்னன் ஈழ நாட்டிலிருந்து ஒரு பாடினியை அழைத்துப் பாணபத்திரன் மனைவிக்கும் அவளுக்கும் தன் சபையில் ஓர் இசைப்போட்டி நிகழ்த்தினன். 'தோற்றவர் வென்றவர்க்கு

அடிமையாய் விடவேண்டும்’ என்று அவன் நிபந்தனையிட்டான். இருவரும் ஒருவர் பின் ஒருவராக யாழ் வாசித்தார்கள். முதலில் அரசனின் மனக்கருத்தை அறியாத சபையினர் பாணபத்திரன் மனைவியின் பாடலையே பாராட்டிப் பேசினார்கள்; பின்னர் அரசன் ஈழ நாட்டுப் பாடினியைப் பாராட்டுவதைக் கண்டு அவள் பாடலையே புகழ்ந்தார்கள்.

“முன்னவன் அருளைப் பெற்று
மும்மையும் துறந்தா ரேனும்
மன்னவன் சொன்ன வாறே
சொல்வது வழக்கா(று) அன்றே!”

[முன்னவன் – கடவுள். மும்மை - மண், பெண், பொன். வழக்காறு - வழக்கம்.]

என்று பரஞ்சோதி முனிவர் அதற்குக் காரணமும் கூறியுள்ளார்.

இரண்டாம் நாள் போட்டியிலும் எல்லோரும் அரசன் எண்ணத்தை அறிந்து பட்சபாதமாகப் பாடினியே வென்றாள் என்று கூறினார்கள்.

மறுநாள் சோமசுந்தரப் பெருமான் முன்னர் இசைப்போட்டி நிகழ்ந்தது. பாண்டியன் முன்போலவே ஓரவழக்குப் பேச நினைத்தபோது, சிவபெருமான் திருவருளால் அவ்வாறு பேசாமல், ‘பாணபத்திரன் மனைவியே வென்றாள்’ என்றான். சபையோரும் அவ்வாறே கூறினார்கள். ‘பாடினியின் கழுத்தில் பாணபத்திரன் மனைவியை இருத்துக’ என்று யாவரும் கூறினர். பெருமான் ஒரு புலவர் வடிவம் தாங்கி அங்கு வந்து, ‘இஃது அற்புதம்! இஃது அற்புதம்’ என்று சொல்லிக் கொண்டே சபையோர் யாவரும் காண மின்னலைப் போல் மறைந்தருளினார். பாண்டியன் அஞ்சி நடுங்கினான். ‘இது சிவபெருமானின் திருவிளையாடலே’ என்று எல்லோரும் இன்பக் கடலில் மூழ்கினார்கள். பாண்டியன் பாணபத்திரன் மனைவிக்குப் பல பரிசுகள் வழங்கிப் பாராட்டினான். பின்பு அவன் சுகுணன் என்னும் மகனைப் பெற்று நலமாக வாழ்ந்து வந்தான்.

45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்

வைகையாற்றுத் தென் திசையில் குருவிருந்த துறை என்னும் ஊரில் சுகலன் என்னும் வேளாளனும், சுகலை என்னும் அவன் மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பன்னிரண்டு மக்களைப் பெற்று இறந்துவிட்டார்கள். அம்மக்கள் வேடர்களுடன்

சேர்ந்து வேட்டையாடித் திரிந்தார்கள். ஒரு சமயம் அவர்கள் தேவ குருவாகிய பிருகஸ்பதியின் தவத்துக்கு இடையூறு விளைத்துச் சிரித்தார்கள். பிருகஸ்பதி அவர்களைப் பன்றிக் குட்டிகளாகுமாறு சபித்தார். 'சோமசுந்தரக் கடவுளே தாயாக வந்து அவர்களுக்குப் பால் ஊட்டி மந்திரிகளாக்கிப் பின் முத்தியைத் தந்தருளுவார்' என்று பின்பு அவர் சாபவிடையும் கூறியருளினர்.

முனிவர் சாபத்தின்படியே அப்பிள்ளைகள் பன்னிருவரும் குருவிருந்த துறைப்புறத்துள்ள காடொன்றில் பன்றியரசின் குட்டிகளாகப் பிறந்தனர்.

ஒரு சமயம் பாண்டியன் அக்காட்டில் வேட்டையாடச் சென்றான். பன்றியரசு தன் பெடையுடனும் குட்டிகளுடனும் போருக்குப் புறப்பட்டது. பாண்டியன் வீரர்கள் பன்றிப் படைகளுக்குப் பற்பல தொல்லைகள் அளித்தனர். அத்துன்பத்தை அறிந்த பெண் பன்றி தன் கணவனைப் பார்த்து 'தப்பிப் போவதே நல்லது' என்றது. அரசப்பன்றி அதை நோக்கி, 'பெண் புத்தி பின்புத்தி ஆதலால் உன் அறிவுக்கேற்றபடி சொன்னாய்! இரண்டு சிங்கம் நிற்கும் துறையிலே ஒரு பன்றி வந்து தண்ணீர் குடித்துச் செல்லும்; ஆனால் ஒரு பன்றி நிற்கும் இடத்தில் இரண்டு சிங்கங்கள் வந்து நீர் பருகுவதற்கு அஞ்சும். நான் இத்தன்மையுள்ள வீர மரபில் தோன்றியவன். பாண்டியனோடு போர் செய்து வென்று புகழை நாட்டுவேன். இன்றேல் இறந்து வீர சுவர்க்கம் புகுவேன்' என்று கூறிப் பாண்டியன்மீது கோபத்தோடு எதிர்த்து நின்றது. பாண்டியன் விட்ட அம்புகள் பயனற்றுப் போயின. பன்றி அவன் யானையையும் கொன்றது; தேரையும் உடைத்தது. முடிவில் பாண்டியன் பன்றியரசை இருப்புத் தண்டினால் தலைமீது அடித்தான். பன்றி இறந்து வீர சுவர்க்கம் புகுந்தது. 'கணவன் இறப்ப நான் உயிர் வாழ்வதோ?' என்று கூறிப் பெண் பன்றியும் போர் செய்து இறந்து விழுந்து மலையாயிற்று. அதனை எல்லோரும் பன்றிமலை என்றே அன்றுமுதல் அழைக்கிறார்கள். அம்மலையில் எத்தனையோ சித்தர்களும், விஞ்சையர்களும், யோகிகளும் தவம் செய்து முத்தி பெற்றார்கள்.

அன்னையை இழந்த பன்றிக் குட்டிகள் பால் விரும்பி அங்குமிங்கும் அலைந்தன; திகைத்தன; தேம்பின. இறைவன் மனமிரங்கி அவற்றின் தாய்ப்பன்றி வடிவம் கொண்டு முலைப்பால் கொடுத்து வலியும், வெற்றியும், ஞானமும், பிற நற்பண்புகளும் உண்டாகும் வண்ணம் அருள் புரிந்தார். அவற்றின் முகம் மட்டும் பன்றி முகமாக வைத்து மற்றைய உறுப்புகள் மனித உறுப்புகளாகுமாறும் அவர் திருவருள் செய்தார்.

46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

சோமசுந்தரக் கடவுள் மறைந்தருளிய பின்னர், பன்றி முக முடைய பன்னிரண்டு குமாரர்களும் பல கலைகளிலும் வல்ல வர்களாய்ப் பன்றி மலையில் தங்கி இருந்தார்கள். மற்றொரு நாள் சோமசுந்தரக் கடவுள் பாண்டியனின் கனவில் தோன்றி பன்றி மலையில் உள்ள பன்னிரண்டு மைந்தர்களையும் அமைச்சர்களாக்கிக் கொள்ளுமாறு கூறியருளினர். பாண்டியனும் அவ்வாறே அவர்களை அழைப்பித்து, வரிசைகள் பல செய்து அமைச்சர்களாக்கிக் கொண்டான்; அவர்களுக்குத் தன் பழைய மந்திரிகளின் பெண்களைத் திருமணமும் செய்வித்தான். பன்றி முக அமைச்சர்கள் பன்னிரண்டு பேரும் பன்னிரண்டு உடம்புக்கும் உயிர் ஒன்று என்று சொல்லும்படி ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அரசனுடைய குறிப்பறிந்து ஒழுகினர்கள். குடிகளிடம் வரிப் பொருளைத் தவிர வேறு எப்பொருளையும் அவர்கள் வாங்கவில்லை. சில காலம் சென்ற பிறகு அப்பன்னிருவரும் சிவலோகத்தை அடைந்து சிவகண நாதர்கள் ஆயினர். இராசராச பாண்டியனும் சிவகதி அடைந்தான்.

47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்

இராசராசனுக்குப் பின் அவன் மகனாகிய சுகுண பாண்டியன் அரசாண்டு வந்தான். அக்காலத்தில் ஒருவன் முற்பிறப்பில் மிகுந்த தருமம் செய்து சிறிது பாவமும் செய்ததால் கரிக்குருவியாகப் பிறந்தான். அக்குருவி, காக்கை முதலிய பகைவர்களுக்குப் பயந்து பட்டணத்திலிருந்து நீங்கிக் காட்டிற்குச் சென்றது. அங்கு அது வழியில் நிற்கும் ஒரு மரத்தின்மேல் ஒடுங்கி இருந்தது. அப்போது சிவ பக்தர் ஒருவர் வந்து, மதுரையில் எழுந்தருளி யுள்ள சுந்தரக் கடவுளை வணங்கி வந்தால் அவர் விரும்பிய வரங்கள் எல்லாவற்றையும் இப்பிறவியிலே கொடுத்தருள்வார் என்று அக்கரிக்குருவிக்குப் போதித்தார். கரிக்குருவி அவ்வாறே செய்தது. அதனல் அது தன் முற்பிறப்பையும் அறிந்தது. பின்னர் கரிக்குருவி நீராடிவிட்டுச் சோமசுந்தரக் கடவுளை வலம் வந்து வழிபட்டது. இறைவன் அதன்மீது திருவருள் நோக்கம் வைத்தார்; முற்காலத் தில் மார்க்கண்டேய முனிவருக்கு மரணத்தை நீக்கி அழியாமையைக் கொடுத்த மிருத்தியுஞ்சய மந்திரத்தை அதற்கு உபதேசித்தார். உடனே அக்குருவியின் சிற்றறிவு நீங்கியது; பேரறிவு ஓங்கியது.

கரிக்குருவி இறைவனைப் பார்த்து, 'தீய பறவைகள் எல்லாம் எனக்குத் துன்பம் விளைவிக்கின்றன. ஆகையால் அவற்றினின்று துன்பம் வராமல் என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று வேண்டியது. பின்னும் அக்குருவி சிவபெருமானை வணங்கி, 'அடியேனுக்கு மிகுந்த வலிமையைத் தரவேண்டும்' என்றும் வேண்டியது. அதன் வேண்டுகோட்கு இரங்கி இறைவன் அருள் புரிந்தார்.

கரிக்குருவி தன்னைப் போலவே தன் குலக் குருவிகளும் சிவபெருமானது திருவருளினால் பறவைகளுக்கெல்லாம் வலியனவாய் விளங்குமாறு செய்து, **வலியான்** என்னும் காரணப் பெயர் பெற்று விளங்கியது. பின்னர் அது சிவபெருமான் திருவடியை அடைந்தது.

48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம்

பாண்டிய நாட்டில் தெற்கில் உள்ள ஓர் ஊரில் தாமரைத் தடாகம் ஒன்று இருந்தது. மழையில்லாமையால் அத்தடாகம் வற்றிப் போய்விட்டது. அங்கு வாழ்ந்த நாரை ஒன்று ஒரு காட்டை அடைந்து அங்குள்ள ஒரு குளத்தின் கரையில் தங்கிற்று. அக்குளத்தில் முழுகும் முனிவர்கள் சடையில் மீன்கள் புரளுவதைக்கண்டு, 'இம்மீன்கள் முனிவர்களின் திருமேனியைத் தீண்ட என்ன தவம் செய்தனவோ? இவற்றை நாம் தின்னலாகாது' என்று உணவையே வெறுத்திருந்தது.

அக்குளத்தில் மூழ்கிய முனிவர்கள் கரையேறிய பின் வாசித்த மதுரைப் புராணமும், சோமசுந்தரப் பெருமான் இயற்றிய திருவிளையாடல்களும் அந்நாரையின் காதில் விழுந்தன. அவர் தம்மை அடைந்தவர்களுக்கு எளியர் என்றும் அந்நாரை உணர்ந்தது. அதனால் அது தன் அறியாமை நீங்கி மெய்யறிவு அடைந்து, தினந்தோறும் மதுரைப் பொற்றாமரை வாவியில் மூழ்கிச் சிவபெருமானைத் தியானம் செய்தது. இவ்வாறு பதினைந்து நாட்கள் செய்த பின் ஒருநாள் பசி அதிகமாக இருந்ததால் மீன்களைக் கவர்ந்து உண்ண நினைத்தது; பின்பு கடவுள் அருளால் மனம் தெளிந்து, 'ஐயோ, இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் உள்ள மீன்களைப் புசித்தற்கு எனக்கு ஆசை வந்ததே! இப்பிறவி எப்போது நீங்குமோ?" என்று வருந்தி இறைவனைத் தியானித்தது. சோமசுந்தரப் பெருமான் நாரை நினைத்த வடிவமாக அதன் முன்னர் தோன்றி, "உனக்கு வேண்டிய வரங்கள் யாவை?' என்று கேட்டார். அதற்கு நாரை, 'ஐயனே! இப்பிறவியைப் போக்கி அடியேனை நின் மெய் அன்பர் வாழும் சிவலோகத்திலே சேர்க்கவேண்டும். கருணை வள்ளலே! இத்தீர்த்தத்தில் எக்காலத்தும் மீன்கள் இல்லாதிருத்தல்

வேண்டும்? என்று வேண்டி நின்றது. இறைவன் அவ்வாறே அருள் புரிந்தார்.

அக்காலத்திலிருந்து பொற்றாமரை வாவியில் நீர்வாழும் உயிர்கள் ஒன்றும் இல்லாது ஒழிந்தன. சுகுண பாண்டியன் தன் நாட்டில் பாவமாகிய களையைக் களைந்தான்; அறமாகியப் பயிரை வளர்த்தான்; அதன் பயனை அடையும் பொருட்டு சொர்க்க லோகத்தைச் சேர்ந்தான்.

---

3. திருவாலவாய்க் காண்டம்

49. திருவாலவாயான படலம்

சுகுண பாண்டியருக்குப் பின்னர் சித்திர ரதன் முதல் அதுல கீர்த்தி வரை இருபத்திரண்டு பாண்டியர்களும் வழிவழி மைந்தர்களாய் ஆண்டு வந்தார்கள். அதுல கீர்த்திக்குப் பின்னர் அவன் மைந்தனாகிய கீர்த்தி வீடணன் காலத்தில் பிரளயம் வந்தது. ஏழு பெருங்கடல்களும் பொங்கி உலகத்தை அழித்தன. மதுரையில் சோமசுந்தரப் பெருமானின் விமானமும் மீனாட்சி அம்மை ஆலயமும், இடப மலையும், யானை மலையும், நாக மலையும், பசு மலையும், பன்றி மலையும் மட்டும் அழியாமல் இருந்தன. வெள்ளம் வற்றிய பிறகு உலகம் மீண்டும் சிவபெருமானால் படைக்கப்பட்டது. தமிழ் வேந்தர் மூவரும் சந்திரன் சூரியன் அக்கினி என்னும் மூவர் குலத்தினின்றும் இறைவனால் படைக்கப்பட்டார்கள்.

அக்காலத்தில் சந்திர குலத்தில் வந்த வங்கியசேகர பாண்டியன் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலைச் சுற்றி ஒரு சிறு நகரம் ஏற்படுத்தினான். அதிலிருந்துகொண்டு அவன் நீதி வழுவாமல் அரசாண்டான். நாட்டில் வளம் பெருகி மக்கள் தொகையும் பெருகிற்று. அதனால் அரசன் சோமசுந்தரக் கடவுளை வணங்கி, 'எம்பெருமானே! இவ்வளவு மக்களுக்கும் நல்லதொரு நகரம் நிருமிக்க வேண்டும். அடியேன் இதன் பழைய எல்லையைக் காண முடியவில்லையே! காட்டி அருளவேண்டும்' என்று வேண்டினான். அப்போது சிவபெருமான் ஒரு பாம்புச் சித்தராய் அங்குத் தோன்றினார். தம் கையில் கங்கணமாக இருந்த ஒரு பாம்பைப் பார்த்து அவர், 'நீ பாண்டியனுக்கு இந்நகரத்தின் எல்லையை அளந்து காட்டுக' என்று கூறினார். பாம்பு அவரை வணங்கி, 'அண்ணலே! இந்த நகரம் அடியேன் பெயரால் விளங்கவேண்டும்' என்று வேண்டியது. சிவபெருமான் அவ்வாறே அருள் புரிந்தார். பாம்பு கிழக்குத் திக்கில் சென்று வாலை நீட்டி நகரத்தை வலமாகச் சுற்றி, உடம்பை

வளைத்து வாலை வாயில் வைத்து நகரின் எல்லையைக் காட்டியது. பின்பு அது சித்தர் கையில் பழையபடி கங்கணமாயிற்று. சித்தர் தம் திருக்கோயிலில் மறைந்தருளினர். பாண்டியன் சிறந்த முறையில் நகரை அமைத்தான். அந்நகரம் பாம்பினால் எல்லை காண்பிக்கப்பட்டதாகையால் அஃது **ஆலவாய் நகரம்** எனப் பெயர் பெற்றது.

50. சுந்தரப் பேரம்செய்த படலம்

வங்கிய சேகர பாண்டியன் காலத்தில் விக்கிரம சோழன் என்பான் அவன்மீது படையெடுத்து வந்தான். பாண்டியன் சோமசுந்தரக் கடவுளை வணங்கித் தன் சேனை சிறிதாக இருக்கிறதே என்று முறையிட்டான். சிவபெருமான் போரில் துணை செய்வதாக அசரீரியாக மொழிந்தார். விக்கிரம சோழனுடைய சேனை இடப மலையை நெருங்கி விட்டது. வடநாட்டு மன்னர்களும் சோழனுக்குத் துணையாக இருந்தமையால் பாண்டியன் சேனை நிலை தளர்ந்தது. சோழன் பெருமிதம் அடைந்து வெற்றிச் சங்கை ஊதினன்.

அந்நிலையில் சோமசுந்தரக் கடவுள் ஒரு வேடனாக வேடந் தாங்கிச் சோழர் படையுடன் போர் செய்யப் புறப்பட்டார். அவர் ஏவிய ஒவ்வொரு அம்பும் நூறு நூறு வீரர்களைக் கொன்றது. அந்த அற்புத அம்பைக்கண்டு வியந்த சோழன் ஓர் அம்பை எடுத்து அதில் சுந்தரேசர் என்று எழுதியிருப்பதைக் கண்டான். சோம சுந்தரக் கடவுளே பாண்டியனுக்கு உதவி புரிகிறார் என்று அறிந்து அவன் அஞ்சித் தன் ஊருக்குத் திரும்பிப் போனான். வடநாட்டு அரசர்கள் சோழனைப் போகவிடாமல் தடுத்துச் சிறிதும் அஞ்சாமல் பாண்டியன் சேனைமீது பாணங்களை விடுத்தார்கள். வேடர் அவற்றைத் துணித்து அழித்தார்; பின்னர் பாண்டியனைப் பார்த்துப் புன்முறுவல் புரிந்து மறைந்தார். பாண்டியன் வெற்றி முரசு கொட்டினன். அதன்பின் அவன் நீதி வழுவாமல் பல நாட்கள் அரசாண்டு கொண்டிருந்தான்.

51. சங்கப் பலகை கொடுத்த படலம்

வங்கிய சேகர பாண்டியன் காலத்தில் பிரமதேவர் பத்து அசுவமேத யாகம் செய்து, நீராடுவதற்காக சரசுவதி, சாவித்திரி, காயத்திரி என்னும் தம் மனைவியர் மூவரோடும் கங்கையை நோக்கிச் சென்றார். வழியில் சரசுவதி ஒரு விஞ்சைப் பெண்ணின் இசையில் ஈடுபட்டு நின்றதால் பிரமதேவர் ஏனைய இரண்டு மனைவியருடன் நீராடி எழுந்தார். பின்னர் சரசுவதி அங்கு வந்து, 'என்னையன்றி நீராடியது என்ன?' என்று கேட்டாள். அதற்கு பிரமதேவர், 'குற்றம் உன்னுடையதாக இருக்க என்மீது கோபித்த

தால் நீ அளவில்லாத மனிதப் பிறவி எடுக்கக் கடவாய்' என்று சபித்தார். சரஸ்வதி நடுங்கி, 'உமக்கு அருமைத் துணைவியாகிய நான் மனிதப் பிறவி எடுத்து மயங்கலாமோ?' என்றாள். அதற்கு பிரமதேவர், 'உன் உடலாகிய முதல் எழுத்து ஐம்பத்தொன்றில், அகரம் முதல் ஹாகாரமிறுதியாகிய நாற்பத்தெட்டும் புலவர்களாய்ப் பூமியில் தோன்றக் கடவன. அகரத்துக்கு முதல் சோமசுந்தரக் கடவுளே. அவரும் ஒரு புலவராய்த் தோன்றி, சங்கப்பலகைமேல் இருந்து, அப்புலவர்களின் உள்ளத்திலே நின்று புலமையை தோற்று வித்தருள்வார்' என்றார்.

அவ்வாறே நாற்பத்தெட்டெழுத்துக்களும் நாற்பத்தெட்டுப் புலவர்களாகிப் பலவகை மொழிகளும் பயின்று, நாடுகள் பல சென்று, புலமையால் வென்று மதுரையை நோக்கி நடந்தார்கள். சோமசுந்தரரும் ஒரு புலவராகி அவர்களை அழைத்துக்கொண்டு மதுரை சென்று சோமசுந்தரனை வழிபடுமாறு செய்து மறைந் தருளினார்.

பாண்டியன் புலவர்களுக்குப் பரிசுகள் நல்கிச் சங்க மண்டபம் ஒன்றையும் உண்டாக்கினான். அப்புலவருடன் வாது செய்த பிற தேசத்துப் புலவர்கள் தோற்றுத் திரும்பிச் சென்றார்கள். ஒருநாள் சங்கப் புலவர்கள் சோமசுந்தரக் கடவுளை வேண்டி, புலமையை உள்ளபடி அளக்கவல்ல சங்கப்பலகை ஒன்றைத் தந்தருளுமாறு வேண்டினார்கள். சிவபெருமானும் ஒரு புலவராகி, ஒரு பலகையுடன் தோன்றி அதனைப் புலவர்களிடம் ஒப்படைத்தார். அதில் கபலர், பரணர் முதலிய புலவர்கள் ஏறி நின்றார்கள். அப்பலகை ஒவ்வொருவருக்கும் ஒரு முழம் இடம் கொடுத்தது. சிவபெருமான் அப் புலவர்களின் நடுநாயகமாய் விளங்கினார். சங்கப் புலவர்கள் பிற்காலத்தில் பற்பல அரிய நூல்களை இயற்றினார்கள். வங்கிய சேகர பாண்டியன் தன் மகனாகிய வங்கிய சூடாமணிக்கு முடிசூட்டிச் சிவ பெருமான் திருவடியை அடைந்தான்.

52. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

வங்கிய சூடாமணி பாண்டியன் சண்பக நந்தவனம் ஒன்றை அமைத்து நாடோறும் சோமசுந்தரப் பெருமானுக்குச் சண்பக மாலைகளைச் சூட்டி வந்தான். அதனால் அவருக்குச் சண்பக சுந்தரர் என்றும், அம்மன்னனுக்குச் சண்பக பாண்டியன் என்றும் வேறு பெயர்கள் வழங்கப்பட்டன. பாண்டியன் ஒரு நாள் நந்தவனத்துக்குச் சென்றான். அங்கு ஒரு புது மணம் வந்தது. அரசன் இஃது என்ன புது மணம் என்று மணம் வரும் வழியை நோக்கினான். அது தன் மனைவியினது கூந்தலின் மணமாக இருப்பதை அவன் அறிந்தான். 'இம்மணம் கூந்தலுக்கு இயற்கையோ, செயற்கையோ' என்று அப்பொழுது அவனுக்கு ஐயம் எழுந்தது.

'நான் ஐயம் கொண்ட கருத்தை அறிந்து யாரேனும் பாடல் செய் வாராயின் அவருக்கு இந்த ஆயிரம் பொன் உரிமையாகும்' என்று பொற்கிழி ஒன்றை மண்டபத்தின் முன்னே அவன் தொங்க விட்டான்.

சோமசுந்தரப் பெருமான் வறுமையால் வாடிய சைவ வேதிய னாகிய தருமி என்பவனுக்கு,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற்(று) அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே."

[கொங்கு - தேன். சிறை - இறக்கை. செறி - நெருங்கிய. எயிற்று - பற்களை உடைய. அரிவை - பெண். நறிய - வாசனை உடையவை.]

என்னும் தமிழ்ச் செய்யுள் ஒன்றை எழுதித் தந்தருளினார். அப் பாடலைப் படித்த அரசன் அது தன் கருத்துக்கு ஏற்ப இருப்பதை உணர்ந்து சங்கப் புலவர்களின் சம்மதத்திற்கு அப்பாடலை அனுப்பி னன். அப்புலவர்கள் எல்லோரும் சம்மதித்தனர். தருமி பொற் கிழியை அறுக்கச் சென்றான். ஆனால், நக்கீரர் என்னும் புலவர் மட்டும், அப்பாட்டில் பொருள் குற்றம் உண்டு என்று வாதாடித் தடுத்தார். அவர், உத்தமப் பெண்கள் கூந்தலிலும் இயற்கை மணம் கிடையாது? செயற்கை மணமே உண்டு' என்றார். தருமி மீண்டு சென்று இச் செய்தியை சோமசுந்தரரிடம் முறையிட்டான். அவர் ஒரு புலவர் போல் வடிவம் கொண்டு நக்கீரரைப் பார்த்து, 'உத்தம இலக்கணமுடைய பதுமினிப் பெண்கள் கூந்தலுக்கும் இயற்கை மணம் இல்லையோ?' என்றார். நக்கீரர் 'இல்லை' என்றார். சிவபெருமான், ,தேவமாதருக்கோ?' என, கீரர் 'அதுவும் அவ்வாறே' என்றார். இறைவன், 'நீ வணங்கும் ஞானப் பூங்கோ தைக்கோ?' என, நக்கீரர், 'அதுவும் செயற்கை மணமுடையதே' என்றார். இதைக் கேட்ட சோமசுந்தரர் சினந்து தமது நெற்றிக் கண்ணைக் காட்டினார். நக்கீரர், 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்றார். நக்கீரர் சிவபெருமானின் நெற்றிக் கண்ணினது வெம்மையை ஆற்றாமல் பொற்றாமரைத் தடாகத்தில் வீழ்ந்து அலைந்தார். புலவராக வந்த சிவபெருமான் மறைந் தருளினார்.

53. கீரனைக் கரையேற்றிய படலம்

சிவபெருமானின் நெற்றிக் கண்ணின் வெம்மையால் பொற்றா மரை வாவியில் விழுந்து வருந்திய நக்கீரரைப் புலவர்கள் எல் லோரும் கண்டு வருந்தினர். 'சிவபெருமானின் திருவுளம் இரங்கி

னால் இப்பிழை நீங்குவது உறுதி' என எண்ணிச் சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி.

"திருத்தனே! சரணஞ்சரணம்; மறைச்சென்னிமேல்
நிருத்தனே! சரணஞ்சரணம்; நிறை வேதநூல்
அருத்தனே! சரணஞ்சரணம்; திரு வாலவாய்
ஒருத்தனே! சரணஞ்சரணங்களுனக்குநாம்"

என்று அகம் கனிந்து பாடிப் பிழை பொறுக்க வேண்டினார். கருணைக் கடலாகிய சோமசுந்தரப் பெருமான், மீனாட்சியம்மையாரோடு பொற்றாமரைக் குளக்கரையை அடைந்து, நக்கீரர்மீது அருட்கண் பார்வையைச் செலுத்தினார். நக்கீரர் அன்புருவமானார். குற்றம் பொறுத்த பெருமானை எண்ணி அவர், "கையிலே பாதி காளத்தி பாதி" பாடினார். இறைவன் அதனைக் கேட்டு அவரைக் கரையில் ஏற்றினார்.

சிவபெருமான் நக்கீரருக்கு அருள் கனிந்து, 'நீ முன்போலப் புலவர் கூட்டத்திலே இருக்கக்கடவாய்' என்று திருவாய் மலர்ந்தருளினார். பாண்டியன் தருமிக்கு பொற்கிழி அளித்துப் பெருமைப் படுத்தினான்.

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்

புலவர் கூட்டத்தைச் சேர்ந்த நக்கீரர் தினந்தோறும் பொற்றாமரை வாவியில் நீராடி சோமசுந்தரப் பெருமானை வழிபடும் கடமை பூண்டார். சிவபெருமான் நக்கீரர்மீது அன்பு கனிந்து. 'இவனுக்கு இன்னும் இலக்கணம் தெரிந்திலது. வழுஉச் சொல்லும் வழாநிலைச் சொல்லும் அறிகிலன்' என்று அகத்திய முனிவரை வரவழைத்து, நக்கீரருக்கு இலக்கணம் கற்பிக்குமாறு ஆணையிட்டார். அகத்திய முனிவரும் முதல் நூலை, தொகை வகை விரி முறையினாலே, காண்டிகை உரையாலும், விருத்தி உரையாலும், ஐயம் திரிபறக் கற்பித்தார். முதல் நூலாசிரியராகிய சிவபெருமான் மனமகிழ்ந்து அகத்தியருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தனுப்பினார். நக்கீரர் தாம் கற்ற இலக்கணத்தை மற்றைப் புலவர்களுக்கு ஓதி, சிவபிரானிடத்தில் என்றும் நீங்காத அன்புடையவராக விளங்கினார்.

55. சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்

இடைச் சங்கப் புலவர் நாற்பத்தெண்மரும் வெவ்வேறு செந்தமிழ்ப் பாகள் செய்து தங்களைத் தாங்களே பாராட்டிக் கொண்டு செருக்குற்றுத் திரிந்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர்

மாறுபட்டுத் தங்களுடைய ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் கூறுமாறு இறைவனை வேண்டினார்கள்.

சிவபெருமான் மூல லிங்கத்தினின்றும் ஒரு புலவராய்த் தோன்றி அவர்களைப் பார்த்து, ‘ இந்நகரத்தில் தனபதி குணசாலினி என்பவருக்கு உருத்திரசன்மன் என்னும் ஐந்து வயதுள்ள ஊமை மகன் உள்ளான். அவனால் உங்கள் பாடல்களில் நல்லனவும் தீயன வும் அறியலாம். அவ்வூமைப் பிள்ளை சொல்லழகும் பொருளழகும் உள்ள பாடல்களாயின் கண்ணீர் வார, மெய்மயிர் சிலிர்ப்ப தலை யசைத்து மகிழ்வான். அப்போது உங்கள் கலக்கமெல்லாம் நீங்கும் ’ என்று அருளிச் செய்து மறைந்தார்.

புலவர்கள் உருத்திரசருமரை அழைத்துச் சென்று சங்கப் பலகை யில் இருத்தி அவரவர் பாடல்களைச் சொன்னார்கள். உருத்திர சருமர் சிலருடைய பாடல்களின் சொல்லழகைக் கண்டு மகிழ்ந்தார். சிலருடைய பாடல்களின் பொருள் அமைதியைக் கண்டு மகிழ்ந்தார். சிலருடைய பாடல்களில் இரண்டும் இன்மையைக கண்டு இகழ்ந்தார். ஆனால் நக்கீரர், கபிலர், பரணர் என்னும் மூவருடைய பாடல்களைக் கேட்டு கண்ணீர் வார மெய்மறந்து சிலிர்ப்ப தலையசைத்துப் பெருமகிழ்ச்சியுற்றார். உடனே புலவர்கள் கலகம் ஒழிந்தது. அம்மூன்று புலவர்களின் பாடல்களும் தலைசிறந்து விளங்கின.

56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

சண்பக பாண்டியன் ஆட்சிக்குப் பின்னர் குலேச பாண்டியன் வரை பதினைந்து மன்னர்கள் வழிவழிப் பிறந்து அரசு செலுத்தினார் கள். குலேச பாண்டியன் கல்வியில் சிறந்தவன் எனக் கேள்வியுற்ற கபிலரின் நண்பராகிய இடைக்காடர் தமிழ்ப் பாடல் ஒன்று இயற் றிக்கொண்டு வந்து அதனை அரசனிடம் படித்துக் காட்டினார். அரசன் பொறாமையால் அதனை மதியாமல் வாளா இருந்தான். அதுகண்டு இடைக்காடர் சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட் டார். சிவபெருமான் இடைக்காடருக்கும் கபிலருக்கும் மகிழ்ச்சி உண்டாகும் பொருட்டுத் தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து, உமாதேவியாரோடு வெளியே வந்து, திருக்கோயிலுக்கு நேர் வடக்கே வைகையாற்றின் தெற்கில் ஓர் ஆலயங்கண்டு அங்கே போயிருந்தார். சங்கப் புலவர்களும் சிவபெருமான் சென்ற வழியே சென்று அங்கு இருந்தார்கள். இச்செய்தியை அறிந்த பாண்டியன் நெஞ்சம் பதை பதைத்து அங்குச் சென்று இறைவனைக் கண்டு தான் செய்த குற்றம் என்னவென்று வேண்டினான். சோம சுந்தரப் பெருமான் அசரீரியாக நின்று, பாண்டியன் இடைக்காட ருக்குப் புரிந்த குற்றத்தை எடுத்துக் காட்டினார். பாண்டியன் அது

கேட்டுத் தன்னைப் பொறுத்தருளுமாறு வேண்டினான். சோமசுந்தரக் கடவுள் மீனாட்சி அம்மையாருடன் மீண்டும் புலவர்களோடும் தம் திருக்கோயிலில் புகுந்தருளினார். பாண்டியன் இடைக்காடரை வரவேற்றுப் பலவிதமான சிறப்புக்களைச் செய்தான்; பரிசுகளையும் வழங்கினான்; தம் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுமாறு புலவர்களை வேண்டினான். புலவர்கள் சினம் தணிந்து அரசனை வாழ்த்தி விடை பெற்றுச் சென்றனர்.

57. வலை வீசின படலம்

ஒரு சமயம் சோமசுந்தரக் கடவுள் உபதேசித்த வேதப் பொருளை உமாதேவியார் விருப்பமின்றிக் கேட்டதால் அவளை, 'பரதவர் குலத்து மகளாய் பிறக்கக் கடவாய்' என்று அவர் சபித்தார். பின்னர் அம்மையார் கொண்ட வருத்தம் கண்டு ஈசனார், 'நீ பரதவ மன்னனின் மகளாய் வளரும் காலத்தில் யாம் வந்து மணப்போம்' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தம் அன்னைக்கு நேர்ந்த இன்னலை அறிந்து விநாயகக் கடவுளும் முருகனும் தம் தந்தையாரிடமிருந்த வேதப் புத்தகங்களையெல்லாம் பிடுங்கிக் கடலில் எறிந்தார்கள். அவர்களை உள்ளே வரவிடுத்த நந்திதேவரைச் சுறாமீனாகுமாறு சிவபெருமான் சபித்தார். முருகக் கடவுளை மதுரை வணிகன் ஒருவனின் பிள்ளையாகுமாறு சபித்தார். விநாயகரை சபித்தால் அது தம்மையே சாரும். ஆகையால் அவரை ஈசனார் சபிக்கவில்லை.

உமாதேவியார் பாண்டிய நாட்டின் கீழச் சமுத்திரக் கரையில் ஒரு புன்னைமர நிழலிலே குழந்தையாய் அழுதுகொண்டு இருந்தார். அங்குவந்த பரதவ ராசன் அக்குழந்தையை எடுத்துச் சென்று அன்போடு வளர்த்துவந்தான். அச்சமுத்திரத்தில் திரு நந்தி தேவர் ஒரு பெரிய சுறாமீனாக இருந்து வலைஞர்களுக்கும் படகோட்டிகளுக்கும் பெரிதும் துன்பம் அளித்துவந்தார். அந்தச் சுறு மீனை அடக்க முடியாத பரதவ ராசன் அம்மீனைப் பிடிப்போருக்குத் தன் பெண்ணைத் திருமணம் செய்வதாக வாக்களித்திருந்தான். சோமசுந்தரக் கடவுள் வலைஞர் வேடம் எடுத்து அந்த ஊரை அடைந்து இப்பெரிய சுறாமீனைப் பிடித்திழுத்துக் கரையில் போட்டார். பரதவ மன்னன் அளவிலா இன்பங் கொண்டு தன் அருமை மகளை அவ்வலைஞனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். திருமணக் கோலம் கொண்ட இருவரும் சிவபெருமானும் உமாதேவியாருமாக ஆகாயத்தில் தோன்றினர். சுறாமீனாக இருந்த திரு நந்திதேவரும் தம் பழைய வடிவம் பெற்றார். பரதவ மன்னன் உண்மை அறிந்து இறைவனை எண்ணி எண்ணி வணங்கினான். சிவபெருமான் உமாதேவியாரோடு மதுரையை அடைந்தார்.

:8. வாதவூர் அடிகளுக்கு உபதேசித்த படலம்

பாண்டிய நாட்டை அரிமர்த்தன பாண்டியன் ஆண்ட காலத்தில் திருவாதவூரர் என்னும் கல்வி கேள்விகளில் சிறந்த அந்தணர் ஒருவர் அமைச்சராய் விளங்கினர். அவர் எப்போதும் சிவ சிந்தனையே உடையவராகி, மலபந்தத்தைப் போக்கும் ஞானசிரியர் எப்போது கிடைப்பாரோ என்று ஏங்கிக் கிடந்தார்.

ஒரு சமயம் குதிரைகள் வாங்கி வருவதற்காகப் பாண்டியன் வாதவூரரிடம் பெரு நிதியம் கொடுத்தனுப்பினன். திருவாதவூரர் சோமசுந்தரரை வழிபட்டு, குதிரைகள் வந்து தங்கும் கடற் கரையை நோக்கிப் புறப்பட்டார். அவருடைய இருவினை யொப்பையும், மல பரிபாதத்தையும் அறிந்து சிவபெருமான் ஞானசிரியராகித் திருப்பெருந்துறையில் மாணவர் கூட்டத்தின் நடுவே ஒரு குருந்த மர நிழலில் இருந்தருளினர். அவரைக்கண்டதும் வாதவூரர் மெய்ம்மறந்து அவர் அருள் வலையில் அகப்பட்டார். ஞானசிரியர் அவருக்கு சூக்கும பஞ்சாட்சரத்தை உபதேசித்து அவரைச் சிவசொரூபமாக்கினர். இனிய பாடல்களைப் பாடிய அவருக்கு மாணிக்கவாசகன் என்னும் திருப்பெயரையும் ஈசனர் கொடுத்தருளினர். சிலகாலம் பெருந்துறையிலேயே இருக்குமாறு மாணிக்கவாசகருக்குக் கூறி, அந்த ஞானசிரியர் அடியாரோடு மறைந்தருளினர். அவர் மறைவு கண்டு வாதவூரர் திகைத்தார்; 'என் செய்வேன் எந்தாயே' என்று புலம்பினர்; பின்னர் கோபுரவாயிலின் வெளியில் காத்திருந்த படைஞர்களை ஆடி மாதத்தில் குதிரைக் கூட்டங்கள் வரும் என்று கூறுமாறு அரசனிடம் விட்டார். படைவீரர்கள் பாண்டியனை அடைந்து நடந்ததைக் கூறினர்கள். அரசன் குதிரையின் வரவை எதிர்பார்த்திருந்தான்.

மாணிக்கவாசகர் தம்மிடத்திலிருந்த செல்வமெல்லாம் சிவாலயத் திருப்பணிக்கும் சிவனடியார்களுக்கும் தம் மனம் போனவாறு செலவிட்டு விட்டார். பின்னர் பாண்டியனிடமிருந்து 'குதிரைகள் எங்கே' யென ஒரு திருமுகம் வந்தது. அதனைச் சிவபெருமானிடம் முறையிட்டு அவர் ஆணைப்படி 'குதிரை எல்லாம் வரும்' என்று பாண்டியனுக்கு ஓலை எழுதினர். அன்று இரவு ஞானசிரியர் அவர் கனவில் தோன்றி, 'பாண்டியனின் உள்ளத்தைக் கவரத் தகுந்த நல்ல குதிரைகளை யாம் கொண்டு வருவோம். நீ முன்னே செல்வாயாக' என்றார். மாணிக்கவாசகர் அவ்வாறே சென்று பாண்டியனைக் கண்டு அளவளாவிக் கொண்டிருந்தார். சுற்றத்தார் குதிரைகள் வாராமையால் அவரைப் பெரிதும் கடிந்து பேசினர்கள்.

59. நரி பரியாக்கிய படலம்

மறுநாள் பாண்டியன் மாணிக்கவாசகரை நோக்கி, 'இன்னும் குதிரைகள் வரவில்லையே' என்றான். மாணிக்கவாசகர், 'இன்னும் மூன்றுநாட்களில் வந்துவிடும்' என்றார். மூன்று நாட்கள் கழிந்தும் குதிரைகள் வாராமையால் மன்னன் வெகுண்டு. மாணிக்கவாசகரைச் சிறையிலிட்டு, எல்லையில்லாத் தொல்லைகள் அளித்தான்.

இந்நிலையில் ஆவணிமாத மூல நட்சத்திரம் வந்துவிட்டது; சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளைக் குதிரைகளாக்கி, தாமும் தம் கணநாதர்களும் குதிரைப் பாகர்களாகி, அவற்றை ஓட்டிக் கொண்டு மதுரையை நோக்கிச் சென்றார். உத்தம குணங்கள் வாய்ந்த அக்குதிரைகளைக் கண்ட பாண்டியன், 'ஆயிரம் கண்கள் பெற்றாலும் இவற்றைக் காண முடியாதே' என்று பாராட்டி இன்புற்றான். சுந்தரேசராகிய குதிரைவீரர் வேதமாகிய தமது குதிரையை ஐங்கதியும் பதினெண் சாரியும் தோன்றச் செலுத்திக் காட்டினர்; பிறகு தாம் ஏறி வந்த வேதமாகிய குதிரையைத் தவிர மற்றெல்லாக் குதிரைகளையும் கயிறு மாற்றிப் பாண்டியன் கையில் கொடுத்தார்; 'கயிறு மாறியபின் மறுநாள் என்னவாயினும் அதைக் குறித்துத் தமக்கும் அரசனுக்கும் ஒன்றும் சம்பந்தமில்லை' என்று கூறினர். பாண்டியன் குதிரை வீரர்கள் எல்லோருக்கும் பட்டாடைகள் வழங்கினான். அதனை வாங்கிக்கொண்டு சிவபெருமானும் கணநாதர்களும் மறைந்தருளினார்கள். இத்திருவிளையாடலையெல்லாம் சோமசுந்தரர் மீனாட்சியிடம் கூறித் தமது திருக்கோயிலில் வீற்றிருந்தார். பாண்டியன் மாணிக்கவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்து, அவருக்குப் பல வரிசைகள் செய்து சிறப்பித்தான்.

60. பரி நரியாக்கிய படலம்

அன்று நள்ளிரவில் சிவபெருமானுடைய திருவிளையாட்டால் குதிரைகளாக வந்த நரிகள் தங்கள் உண்மை வடிவம் கொண்டு, நத்தை, நண்டு முதலியவைகளைத் தின்பதற்காகச் சங்கிலித் தொடர்களை அறுத்துக்கொண்டு, பந்தியிலிருந்த குதிரைகளைத் தாவிக் கடித்து ஊளையிட்டு அங்குமிங்கும் ஓடலாயின. நகரத்தில் நரியோசை மிகுதலால் மக்கள் கண்விழித்துக் கலங்கினர். பொழுது விடிந்ததும் பாண்டியமன்னன் நிகழ்ந்ததை உணர்ந்து ஆற்றொணாத சீற்றம் கொண்டு, மாணிக்கவாசகரை வரவழைத்துப் பலவாறாகத் துன்புறுத்தினான். தண்டலாளர் அவரை உச்சிப்போதில் சூரியனைப் பார்க்கும்படி நிறுத்தி நெற்றியிலும் கைகளிலும் கற்களை வைத்து வருத்தினார்கள். மாணிக்கவாசகர் சோமசுந்தரக்கடவுளை நினைந்து அழுவாராயினர்.

அவர்தம் அழுகை ஒலிகேட்ட சுந்தரேசர் அவருடைய பெருமையை அமர்த்தனனுக்கு உணர்த்தவும், தம் திருமுடியிலே மண் சுமக்கவும், வந்தி என்னும் முதியாளை முத்தியடைவிக்கவும் திருவுளம் கொண்டு, வைகையாற்றில் நீர் ஊழிக்காலப் பெருங் கடல் போலப் பொங்கி வருமாறு ஆணையிட்டார். வெள்ளம் மதுரையின் மதிற்புறத்தில் போய் வீடுகளை அழித்து மதிலையும் ஆழ்த்தி, நகரத்தை அழிக்கலாயிற்று. அதனால் மக்கள் எல்லோரும் பலவாறு வருந்தினர். அரசன் செங்கோல் பிழைத்ததோ என்றார் சிலர்; இது சிவபெருமான் திருவிளையாடலோ என்றார் சிலர்; ஆயிரம் குண்டோதரர் வந்து பருகினாலும் இஃது அடங்காது என்றார் சிலர்; பரமசிவன் இதனைத் தம் சடையில் வைத்தாலின்றித் தணியாது என்றார் சிலர். மாணிக்கவாசகரை வருத்திக் கொண்டிருந்த தண்டலாளர்கள் தம் பொருள்களைக் காப்பதற்காக அவரைத் தனியே விட்டுவிட்டுப் போய்விட்டனர். மாணிக்கவாசகர் சோமசுந்தரப் பெருமானை நினைந்து இன்பவெள்ளத்தில் திளைத்திருந்தார்.

61. மண் சுமந்த படலம்

வையையாற்றில் பெருவெள்ளம் வரவே அவ்வெள்ளம் நகரை அழிக்காத விதத்தில் கரைகளை அமைக்குமாறு அரசன் கட்டளையிட்டான். அந்நகர மக்கள் யாவருக்கும் கரையை அடைக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பகுதி கொடுக்கப்பட்டது. அந்நகரில் இருந்த "வந்தி" என்னும் முதுமகளுக்கும் ஒரு பகுதி அளந்துவிடப்பட்டது. அவள் சிவபெருமானிடத்தில் அளவில்லாத பக்தி உடையவள். அவளால் தனக்குரிய பங்கை அடைக்கமுடியாமல் போகவே அவள் ஈசனை வேண்டினாள். எனவே ஈசன் கூலியாளாக உருமாறி வந்தியினிடம் வந்து, அவள் தந்த பிட்டினையே கூலியாகப் பெற்று முன்னரே உண்டுவிட்டு, வையைக் கரையில் வந்திக்குரிய பங்கினை அடைக்கும் பணியில் ஈடுபடாமல், கரையை உடைக்கும் வேலையில் ஈடுபட்டுப் பலவிதமான திருவிளையாடல்களைச் செய்தார். சிவபெருமான் கூலியாளாக வந்துள்ளமையை அறியாத பாண்டியன் கூலியாள்மீது சினம் கொண்டு தனது பிரம்பால் அக்கூலியாளை அடித்தான்.

அந்நிலையில் சோமசுந்தரக் கடவுள் கூடையோடு மண்ணை உடைப்பிலே போட்டுவிட்டு உடனே மறைந்தருளினார். சிவபெருமான்மேல் பட்ட அடித்தழும்பானது அவனுடைய மனைவியர், அமைச்சர்கள், மக்கள், வீரர்கள், குதிரைகள், யானைகள், சூரியன், நட்சத்திரங்கள், மலைகள், மரங்கள் முதலிய எல்லாப் பொருள்களின்மீதும் பட்டன. சோமசுந்தரர் வானத்தில் அசரீரியாக நின்று, 'பாண்டியனே! உன் பொருள்கள் எல்லாம் அற வழியினால்

சம்பாதிக்கப்பட்டவை. ஆதலால், அவை நமக்கும் நம் அன்பர்க்கும் வாதவூரனால் கொடுக்கப்பட்டன அவனை நீ துன்புறுத்தினாய். அப்போது நரிகளைப் பரிகளாக்கினோம். அன்று இரவு பரிகள் நரிகளாகின. மறுநாளும் நீ துன்பம் செய்தாய். ஆகையால் வைகையில் வெள்ளம் பெருகச் செய்தோம். பிட்டுக்கு மண் சுமந்தோம்; வந்தியை சிவலோகம் சேர்த்தோம். இவையெல்லாம் வாதவூரன் பொருட்டேயாகும். இவன் பெருமையை நீ அறியாய். நீ இவனைத் தன் விருப்பத்தின்படியே விட்டுவிடு. நீதிநூல்கள் வழியே நடந்து பல்லாண்டு பல்லாண்டு பல வளமுடன் வாழ்வாயாக' என்று எல்லோரும் கேட்க இயம்பினார்.

இறைவன் ஆணைப்படியே மாணிக்கவாசகர் விடுதலையாகிப் பல திருப்பதிகளையும் வணங்கிப் பக்திப் பாக்கள் பாடினார். அவ்வாறு அவர் தம் வாழ்க்கையில் பாடிய பாக்களின் தொகுதியே **திருவாசகம்** ஆகும். முடிவில் அவர் சிதம்பரத்தை அடைந்தார்; அங்கு சபாநாயகரைக் கண்டு மனம் கசிந்துருகினார்; ஆடினார்; பாடினார்; சிவயோகம் செய்து கொண்டிருந்தார். அக்காலத்தில் ஈழமண்டலத்திலிருந்து வந்த புத்தர்களைப் பின்பு மாணிக்கவாசகர் வாதில் வென்றார்; பிறவி ஊமையாக இருந்த சோழன் மகளைப் பேசுமாறு செய்தார்; மீண்டும் சிலகாலம் இறைவனைப் பாடியவாறு அவ்வூரிலேயே இருந்து, சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தார்.

62. பாண்டியன் சுரந் தீர்த்த படலம்

அரிமர்த்தன பாண்டியனுக்குப் பின்னர் பல அரசர்கள் மதுரையிலிருந்து ஆண்டார்கள். அவர்களில் **கூன்பாண்டியன்** என்பவன் சேரனையும் சோழனையும் வென்று பேரரசனாகத் திகழ்ந்தான். அவன் சோழன் மகளாகிய **மங்கையர்க்கரசியாரை** மணமுடித்து இல்லறம் நடத்தினான். சோழ மன்னன் **குலச்சிறையார்** என்பவரையும் பாண்டியனின் அமைச்சராக அனுப்பியிருந்தான்.

பாண்டியன் விதிப்பயனால் சமண சமயத்தில் மூழ்கி வைதிக சைவ சமயங்களை இகழ்ந்து வந்தான். அவன் நாட்டில் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மட்டும் சைவராக இருந்தார்கள். அவர்கள் இருவரும், சைவத்தின் திரு உருவமான **திருஞான சம்பந்தரை** வழிபட்டுத் தம் நாட்டுக்கு எழுந்தருளி சமண சமயத்தைக் களைந்து, அரசனுக்கு விபூதி அளித்துத் தம் நாட்டைச் சைவ நாடாக ஆக்குமாறு வேண்டினார்கள். திருஞானசம்பந்தர் அவர்களின் வேண்டுகோளுக்கு உடன்பட்டு மதுரைக்குப் புறப்பட்டார்.

ஞானசம்பந்தர் தம் நாட்டில் நுழையாமல் இருக்குமாறு சமணர்கள் பல தடைகளை உண்டாக்கினார்கள். சம்பந்தர் அத்தடை

களையெல்லாம் கடந்து மதுரையை அடைந்து, சோமசுந்தரப் பெருமானையும் மீனாட்சியம்மையையும் வணங்கி, வாகீச முனிவர் என்பவரின் திருமடத்தில் தங்கியிருந்தார். சமணர்கள் பொறாமை கொண்டு நாயனார் தங்கியிருந்த மடத்தைக் கொளுத்தினார்கள். நாயனார் இது பாண்டியன் ஏவலால் செய்யப்பட்டது என்று அறிந்து, 'செய்யனே திருவாலவாய் மேவிய' என்னுந் திருப்பதிகத்தையெடுத்து அதில், 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பாடியருளினார். அது உடனே பாண்டியனுக்கு வெப்பு நோயாகி, அவனைப்பற்றி வருத்தலாயிற்று. சமணர்கள் செய்த மந்திரங்களும் தந்திரங்களும் மருந்துகளும் பலிக்கவில்லை. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அறிவுறுத்தியபடி அரசன் திருஞானசம்பந்தரை அழைப்பித்தான். அவர் அரண்மனையை அடைந்து அரசனை நோக்கி, 'மந்திரமாவது நீறு' என்னும் பதிகத்தைப் பாடி திருநீற்றை அவன் உடம்பில் பூசி, வெப்பு நோயை முற்றிலும் நீக்கினார். பாண்டியன் வெப்பு நோயுடன் கூனும் நீங்கி இளஞ்சூரியனைப்போல விளங்கினான். பின்பு அவன் சமண சமயத்தை விட்டுச் சைவ சமயத்தைச் சார்ந்தான்.

63. சமணரைக் கழுவேற்றிய படலம்

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருஞானசம்பந்தரை வணங்கி, 'ஐயனே! அரசனின் வெப்பு நோயைப் போக்கிய தாங்களே சமணர்கள் எல்லோரையும் வென்று இத்தென்னாடு முழுவதும் திருநீற்றின் ஒளியைப் பரவச் செய்தல் வேண்டும்' என்று வேண்டினார்கள். நாயனார் இறைவனின் சம்மதத்தை அறிய அவர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டார். சோமசுந்தரக் கடவுள் அசரீரியாக, 'உங்களுக்கு விருப்பமானதே எமக்கும் சம்மதம். சமணர்கள் வாது செய்யின் தோல்வியுறுவது திண்ணம். தோல்வியடைந்து அவர்கள் கழுவில் ஏறுவார்கள்' என்றார். நாயனார் பின்னர் திருமடத்துக்கு எழுந்தருளினார். குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் தத்தம் மாளிகைகளுக்குச் சென்றார்கள்.

மறுநாள் சம்பந்தர் அரண்மனையை அடைந்தார். அரசன் நோயை நீக்கமுடியாமல் தோற்ற சமணர்கள் வலியச் சென்று திருஞானசம்பந்தரை வாதுக்கு அழைத்தார்கள். இரு திறத்தினரும் அவரவர் மந்திரத்தை ஏட்டில் எழுதி நெருப்பில் இட்டு, 'எவருடைய ஏடு எரியாமல் இருக்கிறதோ அவரே வென்றவர்' என்று நிபந்தனை கூறிப் போட்டியில் இறங்கினார்கள். மதுரைக்குக் கிழக்கில் சமணர்கள் ஒரு கிடங்கு வெட்டித் தீ மூட்டினார்கள். சமணாசிரியர்கள் அவர்களுடைய மந்திரங்களைப் பச்சை யோலையில் எழுதி நெருப்பில் இட்டார்கள். அவை உடனே எரிந்து சாம்பலாயின. திருஞானசம்பந்தர், "போகமார்த்த பூண்

முலையாள்'' என்னும் திருப்பதிகம் எழுதிய ஓலையை நெருப்பில் இட்டார். அந்த ஏடு எரியாமல் பச்சையாகத் தோன்றிற்று. சைவம் வென்றது.

ஆனால், சமணர்கள் அவரை மீண்டும் புனல்வாதத்துக்கு அழைத்தார்கள். வையையாற்றில் அவரவர் எழுதிய ஏடுகளை இட்டார்கள். சமணர்கள் இட்ட ஏடுகள் எல்லாம் ஆற்றோடே அடித்துக்கொண்டு போகப்பட்டன. நாயனார், ''வாழ்க அந்தணர்'' என்னும் திருப்பதிகம் எழுதிய ஏட்டை ஆற்றிலே இட்டார். அவர் விடுத்த ஏடு எதிரேறிச் சென்றது. அரசனும் பிறரும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். சமணர்கள் நாணித் தலைகுனிந்தார்கள்.

தோற்ற சமணர்களில் பலர் கழுவில் ஏறி உயிர் துறந்தார்கள். சிலர் விபூதி அணிந்தனர். இங்ஙனம் பாண்டியநாடு முழுவதும் சைவநெறியைப் பரப்பிய திருஞானசம்பந்தர் அந்நாட்டில் பல தலங்களைத் தரிசித்துச் சோழநாட்டை அடைந்தார்.

64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்

கடற்கரையில் உள்ள பட்டினமொன்றில் வணிகனொருவன் இருந்தான். அவன் பல்லாண்டுகளாக மகப்பேறு இன்றி முடிவில் ஒரு பெண் மகவைப் பெற்றான். அப்பெண்ணைத் தன் மருமகனுக்கே மண முடித்துக் கொடுப்பேனென்று பலரறியச் சொல்லி வந்தான். சிலநாட்களில் அவன் இறந்துவிட்டான். உடனே அவன் மனைவியும் இறந்தாள். சுற்றத்தார் அவர்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் செய்து முடித்து மருமகனுக்கும் ஓலை எழுதியனுப்பினார்கள். மதுரையிலிருந்த மருமகன், சுற்றத்தார் சிலரோடு போய் மாமன் வீட்டில் தங்கினான்.

சில நாட்களுக்குப் பின்னர் அவன் அந்த மாமன் மகளை அழைத்துக்கொண்டு, 'மதுரையில் சுற்றத்தார் முன்னிலையில் திருமணம் செய்துகொள்வேன்' என்று புறப்பட்டுச் சென்றான். போகும் வழியில் சூரியன் மறைந்ததால் புறம்பயம் என்னும் தலத்தில் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள கிணற்றில் நீராடி, அங்குள்ள வன்னிமரத்தடியில் உணவருந்திக் கோயில் படியொன்றில் தலை வைத்துத் தூங்கினான். அச்சமயம் நச்சுப்பாம்பு ஒன்று அங்கு வந்து அவனைத் தீண்டிற்று. அதனால் அவ்வணிகன் இறந்தான். உற்றாரும் உறவினரும் பலவாறு புலம்பி அழுதனர்; அப்பெண்ணோ துணையை இழந்த அன்றில் பறவைபோல் துவண்டு வாய்விட்டு அரற்றினாள்.

சிவ தலங்கள் பலவும் சென்று வழிபட்டு வந்த திருஞான சம்பந்தர் அச்செய்தியறிந்து அப்பெண்ணின்மீது இரக்கம் கொண்டு இறந்த வணிகனின் உடம்பு அமிர்தமாகுமாறு சிவதியானம் செய்து திருப்பதிகம் பாடிருயளினுர். உடனே வணிகன் விடம் நீங்கப்பெற்றுத் தூங்கி எழுபவனைப்போல் உயிர்பெற்று எழுந்தான். வணிகன் நாயனுரின் கட்டளைப்படி அவ்விடத்திலேயே ஆங்கிருந்த வன்னி மரமும் கிணறும் சிவலிங்கமும் சாட்சியாகத் திருமணம் செய்துகொண்டான். பின்னர் அவன் நாயனுரை வணங்கி விடைபெற்று மதுரையை அடைந்தான்; அங்குத் திரண்ட பொருள் சம்பாதித்துக் குபேரனைப்போல் வாழ்ந்து வந்தான்.

அவ்வணிகனுக்கு மூத்த மனைவி யொருத்தியுண்டு. அவள் மைந்தர்கள் மிகவும் துட்டர்கள். அவர்கள் ஒருநாள் இளைய மனைவியின் பிள்ளையைக் கோபித்து அடித்தார்கள். இளையாள் அப்பிள்ளைகளை வைதாள். அது கண்டு மூத்தவள், 'நீ யார்? எந்த ஊர்? எந்த சாதி? எந்நாயகனின் காமக் கிழத்தியாகிய உனக்கு வாய் ஏன்? உன்னை என் கணவர் மணந்ததற்குச் சான்று உண்டோ?' என்று பலவாறு பழித்துரைத்தாள்.

மூத்தாளின் இழிவுரைகளைக் கேட்டு உளம் உடைந்த இளையாள் மறுநாள் பொழுது விடிந்ததும் பொற்ருமரைக் குளத்தில் நீராடி, சோமசுந்தரப் பெருமானை வணங்கி, 'மாற்ருளின் வாய்ப் பழியடங்குமாறு, என் திருமணத்துக்குச் சான்ருக இருந்த வன்னியும் கிணறும் சிவலிங்கமும் இங்கே வருவித்தருள வேண்டும். இன்றேல் நான் உயிர் துறப்பேன்' என்று முறையிட்டாள். அப்போது சோமசுந்தரரின் திருவருளால் அச்சான்றுகள் மூன்றும் கோயிலில் ஈசான மூலையில் வந்து தொன்றின. இளையாள் மூத்தாளை அழைத்து அவற்றைக் காட்டினுள், மூத்தாள் தலை குனிந்து நின்ருள். நகர மக்களும் இளையாளின் கற்பின் பெருமையையும், சிவபக்தியின் சிறப்பையும் வியந்து பாராட்டினுர்கள்.

வணிகன், இளையாளைப் பழித்த மூத்த மனைவியைத் தள்ளி வைத்தான். ஆனுல் இளையாளோ, 'என் கற்பை உலகம் அறியச் செய்தவள் இவளே. தாயில்லாத எனக்குத் தாயும் இவளே. நாங்கள் இருவரும் இனி உயிரும் உடலும்போல் ஒற்றுமையாக வாழ்வோம்' என்று சொல்லி, அவ்வாறே இருவரும் அன்புற்று இன்புற்று நல்வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். வணிகனும் அவர்களுடன் நலமாகவும் வளமாகவும் பல்லாண்டு வாழ்ந்தான்.

* * *

'முனிவர்களே! சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடல்கள் இன்னும் பல உள. நம் குருநாதராகிய முருகக் கடவுள் கூறி

யருளியபடியே இந்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் உங்களுக்குச் சொன்னோம்' என்று அகத்திய முனிவர் சொல்லி முடித்தார்.

அருச்சனைச் சிறப்பு

இவ்வாறு அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் கூறியருளிய அகத்திய முனிவரை அவர்தம் மனைவியாராகிய உலோபாமுத்திரையும் வசிட்டர் முதலான முனிவர்களும் வணங்கி, 'காதுகளைப் பெற்றதனால் ஆகிய பயனைப் பெற்றோம். இனி கண்களாற் கண்டு வணங்கவும் விரும்புகின்றோம்' என்று கூறி எல்லோருமாக மதுரைநகர் சென்று பொற்றாமரை வாவியில் முழுகி, சோமசுந்தரப் பெருமானையும் மீனாட்சியம்மையையும் கண்குளிரக் கண்டு, மனங்குளிரத் துதித்து, வாய்குளிரப் பாடி, இன்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

வாழ்த்து

"மல்குக வேத வேள்வி !
வழங்குக சுரந்து வானம் !
பல்குக வளங்கள் எங்கும்
பரவுக அறங்கள் ! இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் !
நான்மறைச் சைவம் ஓங்கி
புல்குக உலக மெல்லாம்
புரவலன் செங்கோல் வாழ்க."

அச்சிட்டோர்: அமுதசுரபி அச்சகம், சென்னை-24



படிப்போர் நெஞ்சத்தைப் பற்றி
மனத்தைப் பாகாய் உருகவைக்கும்
அருள் நெறி காட்டும்

லிப்கோவின்
புதிய வெளியீடுகள்

1.	ஸ்ரீ சனிக்ரஹ சாந்தி பூஜா விதானம் (ஜபம், ஹோமம், தானம், ஸ்தோத்ரங்கள், ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரங்களுடன்)	ரூ. 1.30
2.	திருநள்ளாற்று ஸ்தல புராணம்	ரூ. 0.60
3.	ஸகல காரிய ஸித்தியும் சைவத் திருமுறைகளும்	ரூ. 4.00
4.	ஸ்ரீ மஹா பக்த விஜயம்—3-ஆம் பதிப்பு	ரூ. 4.50
5.	கம்ப ராமாயணம் (உரைநடைச் சுருக்கம்)	ரூ. 3.90
6.	ஸங்க்ரஹ பஜனாவளி	ரூ. 0.60

Publishers :

THE LITTLE FLOWER CO.

MADRAS-17 ❋ **TRICHY-2**